★
REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 பெப்ரவரி 8 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினකරන්

வரு. 90 இல. 33 | Tuesday 8, February, 2022 | 16 பக்கங்கள் | 30/-




வதந்திகளை நம்ப வேண்டாம்; கையிருப்பில தரமானவை;



## காலாவதியான தடுப்பூசிகள் எதுவும் பொதுமக்களுக்கு வழங்கப்படவில்லை

### டாக்டர் அன்வர் ஹம்தானி உறுதிபடத் தெரிவிப்பு

காலாவதியான கொவிட் தடுப்பூசிகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொதுமக்களுக்கு வழங்கப்படவில்லை என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

குறிப்பாக பூஸ்டர் தடுப்பூசி வழங்குவதற்காக நாட்டில் கையிருப்பில் உள்ள பைசர் தடுப்பூசிகள் காலாவதியாகவில்லை என்பதனை தொழில்நுட்ப ரீதியில் பொறுப்புடன் கூற முடியும் என கொவிட் ஒழிப்பு இராஜாங்க அமைச்சின் இணைப்பாளர் டொக்டர் அன்வர் 06

அரச ஆஸ்பத்திரி மற்றும் சுகாதார நிறுவனங்களில்

## சுகாதாரத்துறை ஊழியர்கள் பலருக்கும் கொரோனா உறுதி

### கொழும்பு பெரியாஸ்பத்திரியில் மட்டும் 150 பேருக்கு
### அரச தாதியர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாடளாவிய அரசாங்க மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களில் பணிபுரியும் தாதியர் மற்றும் உத்தியோகத்தர்கள் பெருமளவிலானோருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க தாதி உத்தியோகத்தர் சங்கம் தெரிவித்துள்ளது. சங்கத்தின் 06

A/L பரீட்சை நேற்று முதல் ஆரம்பம்;

## நாடெங்கும் சுமுகமாக நடைபெற்றதாக தகவல்



### பரீட்சைகள் மார்ச் 05 வரை இடம்பெறும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நேற்று 7ஆம் திகதி ஆரம்பமானது.

இம்முறை கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் 3 லட்சத்து 45 ஆயிரத்து 242 பரீட்சார்த்திகள் தோற்ற உள்ளதுடன் நாடளாவிய 2438 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெறவுள்ளது.

நேற்று ஆரம்பமான கல்வி 06

தொலைபேசி, மின்சாரம் உட்பட இதர செலவீனங்கள்;

# அமைச்சர்கள், அரச நிறுவன செலவுகளுக்கு கட்டுப்பாடு

### புதிய வழிகாட்டல்கள் நிதியமைச்சினால் அனுப்பி வைப்பு




### வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்த தொகைக்கு மேலதிகமாக நிதி கோருவதை தவிர்க்க அறிவுறுத்தல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அமைச்சர்கள் மற்றும் அரச நிறுவனங்களின் செலவுகளை மேலும் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அது தொடர்பில் விசேட வழிகாட்டல்களை நிதியமைச்சு அனைத்து அமைச்சர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் நிறுவனங்களுக்கும் அனுப்பியுள்ளது.

அதற்கிணங்க வரவு செலவுத் திட்டம் மூலம் ஒதுக்கப்பட்டுள்ள நிதிக்கு உட்பட்ட செயற்திட்டங்கள் தவிர்ந்த வேறு எந்த செயற் திட்டங்களுக்கும் நிதி கோருவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் நிதியமைச்சு அனைத்து அமைச்சர்கள் மற்றும் அமைச்சுக்களின் 06

பண்டிகை காலத்தில் தாராளமாக அத்தியாவசிய பொருட்கள்

# சீனாவிலிருந்து 10 இலட்சம் மெ.தொன் அரிசி இறக்குமதி

### இந்தியா, அவுஸ்திரேலியாவிடமிருந்து மேலதிக நிதியுதவி



**லோரன்ஸ் செல்வநாயகம்**

பண்டிகைக் காலம் உள்ளிட்ட எதிர்வரும் மாதங்களுக்காக அத்தியாவசிய பொருட்களை தடையின்றி பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் இந்தியாவிடமிருந்து ஒரு பில்லியன் டொலர் கடன் உதவியை பெற்றுக் கொள்ளவுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அத்துடன் சீனாவிலிருந்து 10 லட்சம் மெட்ரிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்ட அமைச்சர் அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு சீனா இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இலங்கை அரசாங்கம் அவுஸ்திரேலியாவிடம் 200 மில்லியன் அமெரிக்கன் டொலர்களை கடன் உதவியாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அந்த கடன் உதவி மூலம் பருப்பு மற்றும் பார்லி ஆகியவற்றை கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் மீதியான நிதியை அத்தியாவசிய பொருட்கள் 06



இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் நேற்று (07) இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கரை சந்தித்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டபோது எடுத்த படம்.

## பொது போக்குவரத்துகளில் இனி தடுப்பூசி அட்டை அவசியம்

### விரைவில் அமுல்படுத்த நடவடிக்கை / திலும் அமுனுகம

**எம்.ஏ. அமீனுல்லா**



பொதுப் போக்குவரத்தை பயன்படுத்தும் போது தடுப்பூசி அட்டையை கட்டாயமாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார். கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை 06

## பூஸ்டர் தடுப்பூசி செலுத்துவதில் திடீரென மக்களிடையே ஆர்வம்

### நல்லதொரு சகுணம் என்கிறார் Dr. ஹேமந்த



கடந்த சில தினங்களாக பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொள்வதில் பொதுமக்களிடத்தில் ஆர்வம் அதிகரித்துள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துரைத்த அவர், நாளாந்தம் ஒரு இலட்சத்திற்கும் அதிகமானோர் தடுப்பூசியினை பெறுவதற்காகத் தடுப்பூசி மையங்களுக்கு 06

## தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய படகுகள் ஏலத்தில்

### நேற்று காரைநகரில் ஆரம்பமானது



யாழ்ப்பாணம் காரைநகரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்தியப் படகுகள் ஏலத்தில் விற்பனை செய்யப்படும் பணிகள் கொழும்பிலிருந்து சென்ற அதிகாரிகள் குழுவின் முன்னிலையில் நேற்று (07) திங்கட்கிழமை ஆரம்பமானது.

இலங்கையின் 5 துறைமுகப் பகுதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களுக்குச் சொந்தமான ட்ரோலர் விசைப் படகுகள் நேற்று 06

தாதியர் தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்த போராட்டம்;

## நாடெங்கும் நோயாளர் பெரும் அசௌகரியத்தில்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

தாதியர் மற்றும் துணை மருத்துவ சேவைக்கு உட்பட்ட 18 சுகாதாரத் துறை தொழிற்சங்கங்கள் நேற்றுக் காலை முதல் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளன.

சம்பள முரண்பாடு உள்ளிட்ட பல்வேறு 06

## A/L பரீட்சை எழுதும் மூன்று சிறை கைதிகள்

### ஒருவர் புலிச்சந்தேக நபர்



வெலிக்கடை சிறைச்சாலை கைதிகள் மூவர் நேற்று (07) ஆரம்பமான க.பொ.த உயர்தர 06

## துறைமுகத்தில் தேங்கியுள்ள அத்தியாவசிய பொருட்கள்

### இவ்வாரத்தில் விடுவிக்க அரசு நடவடிக்கை

03



இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினை;

## கச்சத்தீவு உற்சவத்தில் இருதரப்பு மீனவர்களிடையே சுமுக பேச்சு

### தீர்வு காண நல்ல சந்தர்ப்பம் என்கிறார் டக்ளஸ்

03



## மண்மேடு சரிந்து விழுந்து மடவளையில் மூவர் பலி

**எம்.ஏ.அமீனுல்லா**

மடவளை, வங்குவக்கடே பிரதேசத்தில் வீடொன்றின் பின்பக்கம் மதில்சுவர் அமைப்பதற்காக அஸ்திவாரம் தோண்டும் பணியில் ஈடுபட்டிருந்த நால்வர் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் மூவர் நேற்று (07) உயிரிழந்துள்ளனர்.

படுகாயமடைந்த 06



## சமையல் எரிவாயு சிலிண்டரில் திடீர் தீ

### பேராதனையில் அதிகாலை சம்பவம்



கண்டி பேராதனை உட பேராதனை பகுதியிலுள்ள வீடொன்றில் சமையல் எரிவாயு சிலிண்டரொன்றில் தீ பரவியுள்ளது. இந்த சம்பவம் நேற்று (07) அதிகாலை இடம்பெற்றுள்ளது. 06

## ஹிஜாஸ் ஹிஸ்புல்லா நேற்று பிணையில் விடுதலை

### புத்தளம் நீதிமன்றுக்கு மே.மு நீதிமன்று உத்தரவு



சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவை பிணையில் விடுவிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் புத்தளம் மேல் நீதிமன்றத்திற்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான மேனகா விஜேசுந்தர மற்றும் நீல் இத்தவெல ஆகியோர் இந்த உத்தரவினை நேற்று பிறப்பித்துள்ளனர்.

அதன்படி குறித்த உத்தரவை உடனடியாக 06

விக்கல் வீராச்சாமி



அண்ணே, எதிர்க்கட்சி தலைவர் எந்த நேரமும் ஊடகங்கள்ல அரசாங்கத்தை குறை சொல்வதிலையே குறியாயிருக்கிறார்.....

அதுதான் தம்பி அவரது முழு நேரத் தொழில், அதுக்குத்தானே அவரை எதிர்க்கட்சித் தலைவர் எண்டு சொல்லுறம், அதால அவரோட கோவிக்க கூடாது...!!!





கைத்தொழில் அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'கைத்தொழில் 2022: தேசிய கைத்தொழில் கண்காட்சி' பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் நடைபெற்றது. கலந்து கொண்ட தொழில் முயற்சியாளர்களுடன் கைத்தொழில் அமைச்சர் விமல்வீரவங்ச உரையாடுவதை படத்தில் காணலாம்.

# நிந்தவூர் - அட்டப்பள்ளம் தமிழ் - முஸ்லிம் மக்களின் நல்லுறவின் அடையாளம்"

## முஸ்லிம் தனவந்தர்களின் செலவில் இந்து மயானத்திற்கு காணி அன்பளிப்பு

நிந்தவூர் அட்டப்பள்ளம் தமிழ் மக்களின் நீண்ட கால கோரிக்கையாகவிருந்த நிந்தவூர் அட்டப்பள்ளம் தமிழ் மக்களின் மயான பூமிக்கான காணி, முஸ்லிம் தனவந்தர்களின் நிதிப்பங்களிப்புடன் கொள்வனவு செய்யப்பட்டு, மயான பூமியாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

ரூ. 3 கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய காணி, இவ்வாறு மயான பூமிக்காக வழங்கப்பட்டுள்ளதாக, நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ.எம். தாஹிர் தெரிவித்தார்.

அட்டப்பள்ளம் தமிழ் மக்களின் நீண்ட கால கோரிக்கையாகவிருந்த மயான பூமிக்கான நிரந்தர தீர்வினை பெற்றுக் கொடுக்கும் வகையில் குறித்த காணி, மயான பூமியாக கடந்த பெப்ரவரி 02ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டது.






நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.எம். தாஹிரின் ஆலோசனையின் பேரில், நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் சேகு இஸ்மாயில் முஹம்மட் றியாஸ் மற்றும் முஸ்லிம் தனவந்தர்களின் நிதி உதவியில் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ள இந்த மயான பூமிக்கான சுற்று மதில் அமைக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த மயான பூமியை பிரகடனப்படுத்தும் நிகழ்வில், நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ.எம். தாஹிர், அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.எல்.எம். கமல் நெத்மினி, கௌரவ அதிதிகளாக நிந்தவூர் பிரதேச செயலாளர், நிந்தவூர் பிரதேச சபையின் உதவி தவிசாளர் வை.எல் சுலைமாலெப்பை, நிந்தவூர் பிரதேச சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

நிந்தவூர் அட்டப்பள்ளம் பிரதேசத்தில் வாழ்ந்து வரும் தமிழ் – முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான புரிந்துணர்வு மற்றும் சக வாழ்வினை மேலும் வலுப்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# பாராளுமன்ற 'சாரசங்ஹிதா' புலமை இலக்கிய நூல் வெளியீட்டுவிழா இன்று

பாராளுமன்ற 'சாரசங்ஹிதா' புலமை இலக்கிய நூலின் இரண்டாவது பதிப்பின் வெளியீட்டுவிழா இன்று 08 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00மணிக்கு பாராளுமன்ற குழுஅறைஇலக்கம் 01ல் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன ஆகியோர் தலைமையில் இடம்பெறும்.



பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்கவின் வழிகாட்டலின் கீழ் பல்வேறு பிரிவுகளில் கடந்தவருடம் பாராளுமன்ற 'சாரசங்ஹிதா'புலமை இலக்கிய நூலுக்கான கட்டுரைகள் கோரப்பட்டன.

சட்டவாக்க செயற்பாடுகள், நிலைபேறான அபிவிருத்தி, தேர்தல் முறைமை மற்றும் அதன் திருத்தங்கள், பாராளுமன்ற அறிக்கையிடலும் வெகுஜன ஊடகமும், பொதுமக்கள் தொடர்பு மற்றும் இலங்கை பெண்கள் அரசியலில் புதிய போக்கு ஆகிய பல்வேறு தலைப்புகளில் கல்வித்துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் நிபுணர்களின் கட்டுரைகள் இந்தநூலில் உள்ளடங்கப்பட்டுள்ளன. இதன் மீளாய்வுக்குழுவில் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சிரேஷ்டபேராசிரியர் ரத்ன சிறி அரங்கல, கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் அஜந்தா ஹப்புஆராச்சி, களனி பல்கலைக்கழக பேராசிரியர் எஸ். ஜீ. யோகராஜா, கொழும்பு பல்கலைக்கழக ஸ்ரீபாளி கல்லூரியின் கலாநிதி டியூடர் வீரசிங்க மற்றும் களனி பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் விஜயானந்த ரூபசிங்க ஆகியோர் காணப்படுகின்றனர்.

# அமைச்சர் பீரிஸ் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருக்கு இடையில் முக்கிய சந்திப்பு

(திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)





இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் ஜி.எல்.பிரீஸ், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருடன் சந்தித்து உள்ளார். இலங்கையில் பொருளாதார நெருக்கடி உள்ள நிலையில் புதுடில்லியில் இந்த சந்திப்பு இடம் பெற்றது. வெளியுறவுத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்று இந்தியாவுக்கு 3 நாட்கள் பயணமாக வருகை தந்தார். இப்பயணத்தின் போது பிரதமர் மோடி, வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் உள்ளிட்டோரையும் ஜி.எல்.பீரிஸ் சந்தித்து பேசுகிறார்.

இந்நிலையில் இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இந்தியா வருகை தந்துள்ளதோடு இப்பயணத்தின் போது இலங்கையின் பொருளாதார உள்ளிட்டவை குறித்து பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோரிடம் ஜி.எல்.பீரிஸ் ஆராய உள்ளார்.

வெளியுறவுத்துறை அமைச்சர் ஜி.எல்.பிரீஸ், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரை நேற்று சந்தித்து உள்ளார் .இந்த சந்திப்பின்போது இரு தரப்பு உறவுகளின் அனைத்து அம்சங்கள் குறித்தும் பேசப்பட்டது.

கடுமையான அந்நிய செலாவணி மற்றும் எரிசக்தி நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இலங்கைக்கு, இந்தியா 500 மில்லியன் டொலர் கடன் வழங்க உள்ளது. இதற்கான ஒப்பந்தத்தில் கடந்த 2ம் திகதி கையெழுத்திடப்பட்டது.

இலங்கையின் வெளியுறவு மந்திரி பீரிஸை வரவேற்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைவதாக ஜெய்சங்கர் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டிருந்தார்.

இதைத்தொடர்ந்து இந்திய வெளியுறவு செயலாளர் ஹர்ஷவர்தன் ஷிரிங்லாவும் இலங்கை அமைச்சரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர் என்று வெளியுறவுத்துறை தெரிவித்தது.

இலங்கை கடற்பரப்பிற்குள் ஊடுருவிய தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்து வருகிறது. தமிழக மீனவர்களிடம் இருந்து கைப்பற்றிய படகுகளையும் ஏலம்விடவும் இலங்கை முடிவு செய்துள்ளது. இதனைத் தடுத்து நிறுத்த வேண்டும். இந்தியா வரும் ஜி.எல்.பீரிஸிடம் இது குறித்து பேச வேண்டும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கோரியிருந்தார்.

# 317% வரிக்குப் பிந்தைய வருவாயை பதிவு செய்தது JAT நிறுவனம்

JAT நிறுவனம் ஏற்றுமதி வருவாய் வளர்ச்சிக்கு மத்தியில் இதுவரை இல்லாதவகையில் 317% என்ற அதிக பட்சவரிக்குப் பிந்தைய வருவாயை பதிவு செய்துள்ளது.





பல்தேசிய கூட்டு நிறுவனமும், இலங்கை மற்றும் பங்களாதேஷில் மரப்பூச்சுகள் துறையில் முன்னணி வகிக்கின்ற நிறுவனமுமான JAT Holdings PLC, 2021/22 நிதியாண்டின் 3 ஆவது காலாண்டில், மந்தமான சந்தை நிலவரங்களுக்கு மத்தியிலும் சிறப்பான பெறுபேறுகளை பதிவாக்கியுள்ளது. குழுமத்தின் வரிக்குப் பிந்தைய இலாபம் கடந்த ஆண்டில் இதேகாலப்பகுதியில் காலாண்டில் பதிவாக்கப்பட்ட ரூபா 717 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 232%ஆல் அதிகரித்துள்ளது. அதேசமயம் கடந்த 12 மாதங்களுக்கான வரிக்குப் பிந்தைய இலாபம்ரூபா 1,102 மில்லியனாக பதிவாக்கப்பட்டுள்ளது.

JAT Holdings இன்சிறந்த காலாண்டு என நிரூபிக்கப்பட்ட 4 ஆவதுகாலாண்டை நிறுவனம் தொடங்கும் போது இந்தமீள்எழுச்சியுடனான நிதியியல்பெறுபேறுகள் வெளிவந்துள்ளதுடன், பண்டிகைக் காலங்களின் காரணமாக வரலாற்று ரீதியாக வருவாய்க்கு பிந்தைய இலாபத்தில் பூச்சுக்கள் தொழிற்துறையின் பங்கு 45% ஆககாணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

நிறுவனத்தின் நிதியியல் பெறுபேறுகள் தொடர்பில்அதன் பணிப்பாளரும், தலைமை நிர்வாக அதிகாரியுமான நிஷால்ஃபெர்டினாண்டோ கருத்து வெளியிடுகையில், "எங்கள் ஆரம்ப பொது வழங்கல் நடவடிக்கை இடம்பெற்றுவெறும்ஆறுமாதங்களில், கடந்த காலாண்டில் நாங்கள் பதிவாக்கியுள்ளவலுவான பெறுபேறுகளை முதலீட்டாளர்களுக்கு சமர்ப்பிப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். ஒருமந்தமான சந்தைச் சூழல் மற்றும் பிறசவால்கள், தளம்பலான நாணயமாற்று வீதங்கள் மற்றும் உலகளாவிய சந்தையில் பொருட்களின் பற்றாக்குறை ஆகியவற்றின் மத்தியில் இந்த அளவீடுகள் ஈட்டப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், நாங்கள் சந்தை நிலைமைகளுக்கு ஏற்றவாறு நம்மைமாற்றியமைத்து, அதன்போக்குகளுக்கேற்ப சுறுசுறுப்பாக இயங்கி, எங்களின் மொத்த இலாபமட்டங்களைப் பேணியுள்ளோம். எங்களுடைய மொத்த இலாப இலக்குகளை பேணுவதில் தேவையற்ற வளங்களைப் போக்கி, ஆறு சிக்மா (six sigma) கோட்பாடுகளை செயல்படுத்துவதன் மூலம் எங்கள் வலுவான வழங்குனர் உறவுகள் மற்றும் எங்கள் உற்பத்திசெயல்முறைகளில் தொடர்ச்சியான மேம்பாடுகளை நாங்கள் எங்களுக்குச் சாதகமாக சிறப்பாகப் பயன்படுத்தினோம்," என்று குறிப்பிட்டார்.




# டோக்கியோ சீமெந்து நிறுவனத்தின் 'Fountain of Life' குடிநீர் வழங்கும் திட்டம்



டோக்கியோ சீமெந்து நிறுவனத்தின்'Fountain of Life'குடிநீர் வழங்கும் திட்டம் அனுராதபுர மாவட்டத்தின் வெஹெரகல மற்றும் தச்சிதாமன பகுதிகளை சென்றடைந்துள்ளது

அனுராதபுர மாவட்டத்தின் ரம்பேவ பிரதேச செயலகத்தைச் சேர்ந்த வெஹெரகல மற்றும் மதவாச்சியைச் சேர்ந்த தச்சிதாமன ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருவிவசாய குடும்பங்களுக்கு டோக்கியோ சீமெந்து குழுமத்தின் Fountain of Life திட்டத்தினூடாக தூய குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தது. வெஹெரகல பிரதேசத்தைச் சேர்ந்த 268 குடும்பங்களின் ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் மற்றும் தச்சிதாமன பிரதேசத்தைச் சேர்ந்த 48 குடும்பங்களின் 200 க்கும் அதிகமானவர்கள் இந்தத்திட்டத்தினூடாக பயன்பெற்றுள்ளனர்.

கொடிய சிறுநீரக நோய்பரவல் அதிகளவு காணப்படும் இந்தப்பகுதியில் இவர்கள்பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழ்ந்து வந்த நிலையில், இந்தத் திட்டத்தினூடாக இவர்களுக்கு தூயகுடிநீரைப் பெற்றுக் கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ரம்பேவ மற்றும் மதவாச்சி பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள இருதிட்டங்களை டோக்கியோ சீமெந்து கம்பனி (லங்கா) பிஎல்சியின் குழும சந்தைப்படுத்தல் முகாமையாளர் தஷாந்த உடவத்த அங்குரார்ப்பணம் செய்தார். இவருடன், வவுனியா பிராந்தியத்துக்கான டோக்கியோ சீமெந்து விநியோகத்தர் சண்முகன்ஸ் டோர்ஸின் எஸ். ஆனந்தராஜ் மற்றும் அனுராதபுர பிராந்தியத்துக்கான டோக்கியோ சீமெந்து விநியோகத்தர் நோர்த் ஏ ஜென்சீஸ்ரி. மஹாதேவன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# LANKAQR ஐ தேசிய மட்டத்தில் ஊக்குவிக்கும் கொமர்ஷல் வங்கி

LANKAQR தேசிய மட்ட ஊக்குவிப்பு வேலைத்திட்டத்தின் அண்மைய நிகழ்வு கம்பஹா நகர சபை மைதானத்தில் இடம்பெற்றது. இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சரும் டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான நாமல் ராஜபக்ஷ இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இந்நிகழ்வில் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டார்.அமைச்சர்களும் ஏனைய அதிதிகளும் கொமர்ஷல் வங்கி சிரேஷ்ட முகாமைத்துவத்துடன் இணைந்து LANKAQR தேசிய பிரசார வேலைத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளதைப் படத்தில் காணலாம்.





# பணியாற்ற உகந்த பணியிடங்கள் விருதை தொடர்ந்து 9ஆவது ஆண்டாக வென்ற DIMO

இலங்கையின் முன்னணியில் உள்ள பல்வகைப்பட்ட கூட்டு நிறுவனங்களில் ஒன்றான DIMO, சமீபத்தில் நடைபெற்ற Great Place to Work (GPTW) விருது வழங்கும் விழா 2021 இல், தொடர்ந்து 9ஆவது ஆண்டாக பணியாற்றுவதற்கான சிறந்த இடமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும் 2ஆவது முறையாக 'Asia's Best Workplace 2021' (ஆசியாவின் சிறந்த பணியிடம்) பட்டத்தையம் வென்றுள்ளது. அத்துடன், நிறுவனத்தின் சிறந்த மக்கள் நடைமுறைகளுக்கான விருதுகளான, திறமை ஈர்ப்பு, உள்வாங்குதல் அடிப்படையில் மக்கள் முன்முயற்சிகளில் சிறந்து விளங்குதல் விருது மற்றும் உள்ளடக்கிய கலாச்சார அடிப்படையில் மக்கள் முன்முயற்சிகளில் சிறந்து விளங்குதல் விருது, ஆகிய இரண்டு வகை விருதுகளையும் DIMO பெற்ற போது பிடிக்கப்பட்ட படம்.



# அமானா பிரதம செயற்பாட்டு அதிகாரியாக இம்தியாஸ் நியமனம்









பல்துறை அனுபவம் நிறைந்த வங்கியியல் நிபுணரான இம்தியாஸ் இக்பால் அவர்களை தனது பிரதம செயற்பாட்டு அதிகாரியாக (COO) அமானா வங்கி நியமித்துள்ளது. 2022 ஜனவரி 1ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்தநியமனம் வழங்கப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டில் அமானா வங்கியில் இணைந்து கொண்ட இம்தியாஸ் இக்பால், செயற்பாடுகளுக்கான பிரதித்தலைவராக பணியாற்றியிருந்ததுடன்,வங்கிச் செயற்பாடுகள், கிளைகள், SME வங்கியியல் மற்றும் நிர்வாகச் செயற்பாடுகளுக்கான பொறுப்பை வகித்திருந்தார். பிரதம செயற்பாட்டு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, வங்கியின் மனிதவளங்கள், சட்டம் மற்றும் தகவல்தொழில் நுட்பசெயற்பாடுகளையும் மேற்பார்வை செய்வார்.

வங்கியின் பிரதம இணக்கப்பாடு அதிகாரியான அஜ்மல் நலீருக்கு சிரேஷ்ட உபதலைவராக பதவி உயர்வு வழங்கியுள்ளதாகவும் அமானா வங்கி அறிவித்துள்ளது. 2013 இந்தநியமனத்துடன், தற்போதைய சிரேஷ்ட உபதலைவர்களான எம்எம்எஸ் குவைலித் (பிரதம இடர் அதிகாரி) மற்றும் எம் பாரிஸ் ஜஸீல் (சிரேஷ்ட உபதலைவர் திறைசேரி மற்றும் நிதிநிறுவனங்கள்) ஆகியோருடன் அஜ்மல் இணைந்துள்ளதுடன், வங்கியின் நிர்வாக குழுவிலும் அங்கம் பெறுகின்றார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 பெப்ரவரி 8 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
07 முதல் 12 வரை
சுபஹ் - 05.11
லுஹர் - 12.26
அஸர் - 03.48
மஃரிப் - 06.21
இஷா - 07.33

இன்றைய சுபதினம்
பிலவ வருடம் தை 26
ராகுகாலம் : பகல் : 03.00 - 04.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: அஷ்டமி



# மின்நெருக்கடி குறித்து ஆளும் தரப்பு குழுக் கூட்டத்தில் ஆராய்வு



ஆளுங்கட்சி உறுப்பினர்கள் குழுக் கூட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரது தலைமையில் நேற்று (07) அலரி மாளிகையில் நடைபெற்றது. இந்த வார பாராளுமன்ற நடவடிக்கைகள் மற்றும் நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் இந்த சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மின் நெருக்கடிக்குத் தீர்வு காணல், புதுப்பிக்கத் தக்க எரிசக்தி மூலங்களைப் பயன்படுத்துதல், ஏற்றுமதிப் பொருளாதாரத்தை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இதன்போது விவாதிக்கப்பட்டன.

06

## விலை அதிகரிக்க எந்த முடிவும் கிடையாது

### பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவிப்பு
### பஸ் கட்டணங்களிலும் அதிகரிப்பில்லை

(லோரன்ஸ் செல்வநாயகம்)

இந்திய நிறுவனமான IOC நிறுவனம் எரிபொருள் விலைகளை அதிகரித்துள்ள நிலையில் தாம் எரிபொருள் விலைகளை அதிகரிப்பதற்கு தீர்மானம் மேற்கொள்ளவில்லையென பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

ஐஓசி நிறுவனம் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் எரிபொருளுக்கான விலைகளை அதிகரித்துள்ளது. அதற்கிணங்க ஒக்டேன் 92 ரக பெற்றோல் ஒரு லீற்றர் 7 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன்

06

# அதிவேக நெடுஞ்சாலை விபத்துக்களை 6 மாதங்களுக்குள் தடுக்க நடவடிக்கை

### அமைச்சர் ஜோன்ஸ்டன் பொலிஸாருக்கு அறிவுறுத்தல்



இலங்கையில் தற்போது வீதி விபத்துக்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதாகவும், 2020 ஆம் ஆண்டை விட 2021 ஆம் ஆண்டு வீதி விபத்துக்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதாகவும் ஆளும் தரப்பு பிரதம கொறடாவும் அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். அதிவேக நெடுஞ்சாலைகளில் ஏற்படும் விபத்துக்களை ஆறு மாதங்களுக்குள் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அமைச்சர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிந்தக குணரத்னவிடம் பணிப்புரை விடுத்தார்.

2021 ஆம் ஆண்டில், பின்னதுவ, அபரெக்க, குருந்துகஹஹெதக்ம, அங்குனகொலபெலஸ்ஸ, அதுருகிரிய மற்றும் களனிகம ஆகிய இலங்கை அதிவேக நெடுஞ்சாலைகளில் 07 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இந்த விபத்துக்களினால் ஒன்பது பேர் உயிரிழந்துள்ளனர். 2021 ஆம் ஆண்டில் மொத்த வீதி விபத்துகளின் எண்ணிக்கை 461 ஆகும். 2020 ஆம் ஆண்டில், நெடுஞ்சாலைகளில் இடம்பெற்ற மொத்த வீதி விபத்துகளின் எண்ணிக்கை 308 ஆகும். 2020 ஆம் ஆண்டில், களனிகம மற்றும் குருந்துகஹஹெதக்ம ஆகிய இடங்களில் ஐந்து அபாயகரமான வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதுடன் அவற்றில் 05 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதிவேக நெடுஞ்சாலைகளில் அதிகளவான விபத்துக்கள் சாரதிக்கு உறக்கம் ஏற்பட்டதன் காரணமாக நிகழ்ந்துள்ளன. அதிவேக வீதிகளில் ஓய்வறைகளை அமைப்பது தொடர்பில் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கவனம் செலுத்தியுள்ளார்.

06

# பயணத்தடையை நடைமுறைப்படுத்தும் எந்தவித தீர்மானமும் கிடையாது

### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா



(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்து வரும் நிலையிலும் பயணத் தடையை நடைமுறைப்படுத்துவதற்கான எந்த தீர்மானமும் கிடையாது என கொரோனா வைரஸ் ஒழிப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவர் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அனைவரும் தடுப்பூசி பெற்றுக்கொள்வதை வலியுறுத்தியுள்ள அவர் கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்துள்ள நிலையில் நடைமுறையிலுள்ள சுகாதார வழிகாட்டல்களை மக்கள் உரிய வகையில் பின்பற்றுவது அவசியமென்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். தடுப்பூசி தொடர்பில் அரசாங்கம் பெரும் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் அதற்கிணங்க

06

## மரத்துடன் கென்ரர் மோதி விபத்து; இருவர் படுகாயம்



ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா பம்பைமடுப்பகுதியில் நேற்று (07) பிற்பகல் இடம்பெற்ற கோரவிபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மன்னாரிலிருந்து வவுனியா நோக்கி இரும்பு கேடர்களை ஏற்றிவந்த கென்ரர்வாகனம் பம்பைமடு பகுதியில் சென்று கொண்டிருந்த போது வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியில் நின்ற மரத்துடன் மோதி விபத்திற்குள்ளாகியது. விபத்தின்போது வாகனத்தில் பலர் பயணித்திருந்த நிலையில் இருவர்

06

## இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினை;

# கச்சத்தீவு உற்சவத்தில் இருதரப்பு மீனவர்களிடையே சுமுக பேச்சு

### தீர்வு காண நல்ல சந்தர்ப்பம் என்கிறார் டக்ளஸ்



கச்சதீவு திருவிழாவில் இந்திய பக்தர்கள் கலந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படும் என உறுதியளித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, திருவிழாவில் கலந்து கொள்ளும் இலங்கை – இந்தியக் கடற்றொழிலாளர்களுக்கு இடையில் கலந்துரையாடலை நடத்தி இரண்டு நாட்டு கடற்றொழிலாளர்களினதும் எதிர்காலத்திற்கான ஆரோக்கியமான சூழலை உருவாக்குவது தொடர்பாகவும் பிரஸ்தாபித்துள்ளார். எதிர்வரும் மார்ச் மாதம் 11 மற்றும் 12 ஆம் திகதிளில் நடைபெறவுள்ள கச்சதீவு திருவிழாவில் இந்தியாவில் இருந்து பக்தர்கள் கலந்து கொள்வதற்கு கொரோனா அச்சுறுத்தல் காரணமாக அனுமதி வழங்குவதில்லை என ஏற்பாட்டுக் குழு தீர்மானித்திருந்தது.

இந்நிலையில், தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலினின்

06

# அருந்திகவின் மகன் உள்ளிட்ட 9 சந்தேக நபர்கள் பிணையில் விடுதலை

ராகம மருத்துவ பீடத்தில் அண்மையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் ராஜாங்க அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர் அருந்திக பெர்னாண்டோவின் மகன் உட்பட 9 பேர் நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் 9 பேரும் நேற்று வத்தளை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

ராகமவில் உள்ள மருத்துவபீட தங்குமிடத்துக்குள் சட்டவிரோதமான முறையில் நுழைந்து, தாக்குதல்களை மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழ், கைதான தென்னை, கித்துல் மற்றும் பனை செய்கைகள் மேம்பாடு மற்றும் அவை சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோவின் மகன் உள்ளிட்ட சந்தேகநபர்கள் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோவின் மகன், சட்டத்தரணியின் ஊடாக, ராகம பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். அதனையடுத்து அவர் கைது செய்யப்பட்டார்.

அனைவரும் வத்தளை நீதவான் நீதிமன்றத்தில் கடந்த 03 ஆம் திகதி ஆஜர்படுத்தப்பட்டனர். இந்த சம்பவத்தையடுத்து அருந்திக்க பெர்னாண்டோ தனது ராஜாங்க அமைச்சு பதவியை ராஜினாமா செய்தார்.(பா)

# துறைமுகத்தில் தேங்கியுள்ள அத்தியாவசிய பொருட்கள்

### இவ்வாரத்தில் விடுவிக்க அரசு நடவடிக்கை

லோரன்ஸ் செல்வநாயகம்



துறைமுகத்தில் தேங்கியுள்ள அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய கொள்கலன்களை அடுத்த வாரம் விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

மேற்படி அத்தியாவசிய பொருட்கள் உள்ளடங்கிய கொள்கலன்களில் சுமார் 500 கொள்கலன் அரிசியும் காணப்படுவதாகத் தெரிவித்துள்ள அவர் டொலர் தட்டுப்பாடு காரணமாக அதனை துறைமுகத்திலிருந்து விடுவிக்கமுடியாத நிலை தோன்றியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறெனினும் எதிர்வரும் வாரத்தில் அவற்றுக்கான டொலரை வழங்கி அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய கொள்கலன்களை விடுவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றும் ஜனாதிபதி அதற்கான வழிமுறைகளை மேற்கொள்வார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்புத் துறைமுகத்தில் அரிசி, பருப்பு, வெங்காயம், உருளைக்கிழங்கு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய 1800க்கும் மேற்பட்ட கொள்கலன்கள் டொலர் தட்டுப்பாடு காரணமாக விடுவிக்கப்படாமல் துறைமுகத்தில் தேங்கியுள்ளதாக

06



தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் தை மாதம் 26ம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரஜப் பிறை 06

### குறள் தரும் சிந்தனை



காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
பேதைமை எல்லாந் தரும்

*அறிவில்லாதவரை அன்பு காரணமாகத் தேர்வு செய்வது அறியாமை மட்டுமல்ல, அதனால் பயனற்ற செயல்களே விளையும்.*

## கோரிக்கைகளை வென்றெடுக்கும் ஆயுதம் பணிப்பகிஷ்கரிப்பு அல்ல!

சம்பள முரண்பாட்டுக்கான தீர்வு, பதவி உயர்வு உள்ளிட்ட ஏழு கோரிக்கைகளை முன்வைத்து அரசாங்க சுகாதார சேவையைச் சேர்ந்த 18 தொழிற் சங்கங்கள் நேற்றுக் காலை முதல் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளன. தாதியர், மருத்துவ தொழில்நுட்ப உதவியாளர்கள், எக்ஸ்றே படப்பிடிப்பாளர்கள் உள்ளிட்ட பல தரப்பினரும் இத்தொழிற்சங்க நடவடிக்கையில் பங்குபற்றியுள்ளனர்.

இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையின் விளைவாக நாட்டிலுள்ள சில வைத்தியசாலைகள் தவிர்ந்த எல்லா வைத்தியசாலைகளின் வெளிநோயாளர்கள் சிகிச்சைப் பிரிவுகள், கிளினிக்குகள் உள்ளிட்ட இத்தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்கள் பணியாற்றும் பிரிவுகளில் நோயாளர்களால் சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் பல அசௌகரியங்களுக்கு மக்கள் முகம் கொடுத்தனர். இலவச சுகாதார சேவை நடைமுறையில் இருக்கும் இந்நாட்டில் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பெரும்பாலான தொழிற்சங்சங்கள் அரசாங்கத்திடமிருந்து தம் கோரிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்காகவும் வெற்றி கொள்வதற்காகவும் பொதுமக்களையே பணயக்கைதிகளாகக் கொள்கின்றனர்.

ஆனால் இத்தொழிற்சங்கங்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகளுக்கும் பொதுமக்களுக்கும் நேரடியாக எவ்வித சம்பந்தமும் இல்லை. இருந்த போதிலும் தொழிற்சங்க நடவடிக்கையை முனனெடுக்கும் தொழிற்சங்கங்கள் சில விடயங்களை இவற்றை மறந்து விடுகின்றன. அதாவது அரச ஊழியர்கள் கல்வி கற்று தொழில்வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ளவும், அவர்களுக்கு மாதா மாதம் சம்பளம் வழங்கவும் மக்களின் வரிப்பணமே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இருந்தும் அவற்றைப் பொருட்படுத்தாது தொழிற் சங்சங்கள் தமது கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கான ஆயுதமாக மக்களை பணயக் கைகதிகளாகக் கொள்கின்றனர்.

இது எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாத செயலாகும். அதேநேரம் 2020 இற்கு முன்பு போன்று தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கக் கூடிய காலமும் இதுவல்ல. 2020 முதல் உலகிற்கே பெரும் சவாலான கொவிட் 19 தொற்று இலங்கையிலும் பெரும் தாக்கங்களையும் பாதிப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது. அதன் விளைவான தாக்கங்களில் பொருளாதார நெருக்கடி பிரதான இடத்தைப் பிடித்துள்ளது. இத்தொற்று மீண்டும் நாட்டில் தீவிரமடையும் அச்சுறுத்தலும் தற்போது ஏற்பட்டிருக்கின்றது. மக்களின் ஆரோக்கியப் பாதுகாப்பு தொடர்பில் முக்கிய பணியாற்றுபவர்களாக டொக்டர்கள், தாதியர் உள்ளிட்ட சுகாதாரத் துறையினர் விளங்குகின்றனர். அந்த வகையில் கொவிட் 19 தொற்று அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவதற்கு அளப்பரிய பங்களிப்பை நல்க வேண்டியவர்களாகவும் உள்ளனர்.

இவ்வாறு பாரிய பொறுப்பைக் கொண்டிருக்கும் தாதியர், மருத்துவ தொழில்நுட்பவியலாளர்கள் உள்ளிட்ட சுகாதாரத் துறையினர் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருக்கின்றனர். இதன் காரணத்தினால் இவர்கள் பணியாற்றும் பிரிவுகளின் சேவைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. தம் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக மக்களை பணயக் கைதிகளாகக் கொள்ளக் கூடிய வகையில் தொழிற்சங்க நடவடிக்கையை ஒருபோதும் முன்னெடுக்கக் கூடாது. அதிலும் தற்போதைய சூழல் அதற்கு எவ்விதத்திலும் பொருத்தமற்றது.

இவ்வாறான தொழிற்சங்க நடவடிக்கையினால் நாட்டின் பொருளாதாரமும் மக்களுமே பாதிப்புகளுக்கு முகம் கொடுக்கும் நிலைமை ஏற்படும். குறிப்பாக கடந்த சில தினங்களாக கொவிட் 19 தொற்றுக்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கின்றது. அதேநேரம் நாட்டில் இயல்பு நிலை ஏற்படுத்தப்பட்டிருப்பதால் வைத்தியசாலைகளுக்கு சிகிச்சை பெற வருகின்றவர்களின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான சூழலில் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கும் போது நோயாளர்கள் எதிர்பார்க்கும் சிகிச்சையை பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை ஏற்படும். அவ்வாறான நிலைமை ஏற்பட ஒருபோதும் இடமளிக்கக் கூடாது. தற்போது முன்னெடுக்கப்படும் பணிப்பகிஷ்கரிப்புக்காக முன்வைக்கப்பட்டிருக்கும் கோரிக்கைகள் உரிய பேச்சுவார்த்தை மற்றும் கலந்துரையாடல்கள் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடியவையாகும். இக்கோரிக்கைகளுக்காக பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொள்வது நியாயமற்றது. எந்தவொரு கோரிக்கையையும் வென்றெடுப்பதற்கான வழிமுறையாக பேச்சுவார்த்தையையே ஆயுதமாகத் தொழிற்சங்கங்கள் கைகொள்ள வேண்டும்.

கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கான ஆயுதமாக பணிப்பகிஷ்கரிப்பை பயன்படுத்துவது மக்களுக்கு மாத்திரமல்லாமல் நாட்டுக்குமே பாதிப்பாக அமையும். நாட்டுக்கும் மக்களுக்கும் பாதிப்புகளை கொண்டு வரக் கூடிய வகையில் எந்தவொரு தொழிற் சங்கமும் செயற்படக் கூடாது. இப்பணிப்பகிஷ்கரிப்புக்கு முன்வைத்துள்ள கோரிக்கைகளை பேச்சுவார்த்தை, கலந்துரையாடல்கள் மூலம் வென்றெடுக்க தொழிற்சங்கங்கள் முயற்சிக்க வேண்டும். அதனால் நாட்டுக்கோ மக்களுக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படாது. அதுவே ஆரோக்கியமான வழிமுறையாகும்.

editor.tkn@lakehouse.lk

# நாவலர் நாமம் போற்றும் சிறப்பு சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம் தென்மராட்சி, வரணி மாசேரி திருவருள் மிகு புராதன குருநாதர் கோயில் வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு 'நாவலர் ஆண்டில் நாவலர் நாமம் போற்றுவோம்' என்னும் விடயப்பொருளிலான சிறப்புச் சொற்பொழிவு ஆலயப் பிரதான மண்டபத்தில் நேற்று (07.02.2022) திங்கட்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 17.02.2022 வியாழக்கிழமை வரை நடைபெற்று வருகின்றது. தினமும் மாலை 6.30 மணிக்கு சொற்பொழிவு ஆரம்பமாகின்றது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நேற்று திங்கட்கிழமை சிறப்புச் சொற்பொழிவு இளம்சைவப்புலவர் ச.நவநீதனால் நடத்தப்பட்டது. 'நாவலர் சைவத்தின் காவலர்' என்ற தலைப்பில் இச்சொற்பொழிவு நடைபெற்றது.

இன்று செவ்வாய்க்கிழமை சிறப்புச் சொற்பொழிவு_ இளம்சைவப்புலவர் நித்திய பாபுதரன் (நாவலர் பெருமானும் சைவத் தமிழ்க் கல்வி மரபும்)

நாளை இளம்சைவப்புலவர் க. கைலவாசன் (நாவலர் வாக்கும் வாழ்வும்), 10.02.2022_சைவப்புலவர் கந்த சத்தியதாசன் (நாவலரின் கல்வி மரபே இன்றைய தேவை), 11.02.2022_ சைவப்புலவர் ச.முகுந்தன் (நாவலர் தோன்றிய காலமும் நாவலர் ஏற்ப்படுத்திய மாற்றமும்), 12.02.2022 _இளம் சைவப்புலவர் த.மனோஜ்குமார் (நாவலர் நிலைநாட்டிய சாதனைகள்), 13.02.2022_ சைவப்புலவர் பொன். சந்திரவேல்(நாவலர் அன்பின் இருப்பிடம்), 14.02.2022_ இளம்சைவப்புலவர் ச.நவநீதன் (நாவலர் ஒரு நவீன சிந்தனைச் சிற்பி),15.02.2022_ சைவப்புலவர் கந்த. சத்தியதாசன் (சைவசமய மறுமலச்சியின் தந்தை நாவலர்), 16.02.2022_இளம்சைவப்புலவர் க. கைலவாசன் விடயம் (நாவலரே நமக்கான அடையாளம்),17.02.2022_சைவப்புலவர் கந்த. சத்தியதாசன் (நாவலரே மதிப்புலகின் முடிசூடா மன்னன்)



பின்வரும் விடயப்பொருள்களில் சொற்பொழிவு நிகழ்வுகள் நடத்தப்படுவதுடன் சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பரிசில்கள் வழங்கப்படும்.

இதேவேளை யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் வாராந்தச் சிறப்புச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 11.02.2022 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும். ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக் குருக்களின் ஆசியுரையினை தொடர்ந்து பரிபாலன சபைத் தலைவர் த.சோதிலிங்கம் தமையுரை ஆற்றுவார்.

சிறப்புச்சொற்பொழிவினை சிவநெறிச்செம்மல் இளம்சைவப்புலவர் நித்தியபாபுதரன் 'அறம் உரைத்த ஆண்டி' என்னும் விடயப்பொருளில் நிகழ்த்துவார்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டிலே (2022) இளம் இந்துச் சிறார்களிடையே நாவலர் பெருமான் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக, யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூஜை நிகழ்வும்', சிவஸ்ரீ . பால. திருகுணானந்தக்குருக்களின் (ரொறன்ரோ, கனடா) அனுசரணையுடன் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் அவர்களின் ஒழுங்கமைப்பில் நடைபெறுகின்றன.

நிகழ்ச்சித் தொடர் வரிசையிலே ஆறாவது சொற்பொழிவு நிகழ்வு கம்பர்மலை ஸ்ரீ ஞான வைரவர் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் எதிர்வரும் 11.02.2022 வெள்ளிக்கிழமை பி.ப.3.30 மணிக்கு இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி ஜெயச்செல்வி சசிகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது .

நாவலர் குருபூஜை, மற்றும் தலைமையுரை நிகழ்வுகளைத் தொடர்ந்து, 'நாவலர் தோன்றிய காலமும் நாவலர் ஏற்படுத்திய மாற்றமும்' எனும் தொனிப்பொருளில் இளம்சைவப் புலவர் சிவநெறிச்செம்மல் ச.நவநீதன் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வு நடத்தப்பட்டு, அதனைத் தொடர்ந்து சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கான பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும்.

**அ.கனகசூரியர்...**

## இலங்கை- ஜப்பான் இராஜதந்திர உறவுகள் 70 வருட பூர்த்தி;

# ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் ஜப்பானிய மொழி ஆய்வுகூடம்

ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானம் மற்றும் மனிதநேய பீடத்தின் மொழிகள் திணைக்களத்தில் ஜப்பானிய மொழி ஆய்வுகூடத்தின் அங்குரார்ப்பண வைபவம் அண்மையில் இடம்பெற்றது. பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் (திருமதி) ஜி.ஏ.எஸ். கினிகத்தர, சமூக விஞ்ஞானம் மற்றும் மனிதநேய பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் டி.ரி. மென்டிஸ், மொழிகள் திணைக்களத்தின் தலைமை அதிகாரி சங்கைக்குரிய பேராசிரியர் ஒலகன்வத்த சந்திரசிறி தேரர் ஆகியோருடன், ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் ஏனைய பீடங்களின் அங்கத்தவர்கள் மற்றும் ஜப்பானிய தூதரகத்தின் ஆலோசகர் கவகாமி டகாயுகி (இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி ஹிதேகி சார்பாக) ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.





*Cultural Grassroots Projects* இன் நன்கொடையினூடாக 12 மில்லியன் ரூபா முதலீட்டில் ஜப்பானிய அரசாங்கத்தினால் ஜப்பானிய மொழி ஆய்வுகூடம் நிறுவப்பட்டுள்ளது. மாணவர்கள் ஜப்பானிய மொழியை சிறந்த முறையில் பயில்வதற்கு இந்தத் திட்டம் ஆதரவளிப்பதுடன், புத்தாக்கமான வழிமுறையான 'Active Learning' (அறுகோணி மேசையில் குழு நிலைச் செயற்பாடுகள்) என்பதற்கமைய பயில உதவியாக அமைந்திருக்கும்.

மேலும் கணனி உதவியிலான பயிற்றுவிப்பு மற்றும் இணைய அடிப்படையிலான பயிலல் போன்ற அம்சங்களையும் இந்த நிலையம் கொண்டுள்ளது. ஜப்பானிய மையத்தினால் புதிய புத்தகங்களும் இந்தத் திட்டத்தினூடாக வழங்கப்பட்டிருந்தன. இவற்றினூடாக, இலங்கையில் ஜப்பானிய மொழியில் முன்னோடியான மையமாக ரஜரட்ட பல்கலைக்கழகத்தை திகழச் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விசேட வைபவங்களுடன் அங்குரார்ப்பண நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. ஜப்பானிய மொழி தொடர்பான எதிர்காலத் திட்டம் அடங்கிய விளக்கம் அடங்கலாக, வரவேற்பு மற்றும் மாணவர்களின் இசை நிகழ்வு போன்றவற்றுடன், 'Guide to Japanese Literature' எனும் தலைப்பில் புத்தக வெளியீடும் இடம்பெற்றது.

ஜப்பான் மற்றும் இலங்கை இடையே இராஜதந்திர உறவுகள் ஆரம்பமாகி 70 வருட பூர்த்தியடைந்துள்ள இந்த முக்கியமான தருணத்தில், ஜப்பானிய மொழியை பயில்வதன் முக்கியத்துவம் மேலும் ஊக்குவிக்கப்படுவதுடன், இரு நாடுகளுக்குமிடையிலான அடிப்படை உறவுகளை மேம்படுத்திக் கொள்ளும் வகையிலும் அமைந்துள்ளது.

இரு நாடுகளுக்குமிடையிலான இராஜதந்திர உறவுகள் ஆரம்பமாகி 70 வருடங்கள் பூர்த்தியடைந்து நிலையில், ஜப்பானிய மொழி ஆய்வுகூடம் அங்குரார்ப்பணம் செய்யப்படுவது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளதென உபவேந்தர் பேராசிரியர். ஜி.ஏ.எஸ். கினிகெதர தெரிவித்தார்.

ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் ஜப்பானிய மொழிக் கல்வியை ஊக்குவிப்பதில் தமது உறுதியான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியிருந்ததுடன், உள்நாட்டு சமூகத்துக்கு சேவையாற்றக்கூடிய வகையில் மாணவர்களின் திறன்களை கட்டியெழுப்புவதாகவும் தெரிவித்தார்.

தூதுவர் மிசுகொஷி ஹிதெகியின் சார்பாக நிகழ்வில் பங்கேற்றிருந்த கவகாமி டகாயுகி கருத்துத் தெரிவிக்கையில், "ஜப்பானிய மொழியை பயில்வது என்பது, ஜப்பானில் வழங்கப்படும் பல புலமைப்பரிசில்களை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளை அதிகம் பெற்றுக் கொள்ளக் கூடியதாக அமைந்திருக்கும். இந்த ஜப்பானிய மொழி ஆய்வுகூடத்தின் ஆரம்பம் என்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருப்பதுடன், இரு நாடுகளுக்குமிடையே நீண்ட காலமாக நிலைத்திருக்கும் நட்புறவில் மேலும் முக்கிய பங்களிப்பை வழங்கும் ஒரு அங்கமாக அமைந்திருக்கும்" என்றார்.

## புலனுறுப்புகளால் வியக்க வைக்கும் அற்புதங்கள்;

# சர்வதேச சோழன் உலக சாதனை புத்தகத்தில் பெயர் பதித்துள்ள சாய்ந்தமருது பர்ஸான்

புலனுறுப்புகளால் மெய்சிலிர்க்கும் சாகசம் புரிந்து சர்வதேச சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் அம்பாறை மாவட்டம், சாய்ந்தமருதைச் சேர்ந்த எம். எஸ். எம். பர்ஸான் இடம்பிடித்து சாதனை படைத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்ததாக உலகின் 26 நாடுகளில் வியாபித்திருக்கும் சர்வதேச சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகள் முன்னிலையில் எம்.எஸ். எம். பர்ஸானால் புலனுறுப்புகளால் சாதனைகள் புரியப்பட்டன.

மேற்படி சாதனைகள் உலக சாதனையாளர்களை பதியும் சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம்பெறுவதற்காக கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையில் மருதூர் மெய்வல்லுனர் நட்சத்திர விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டன. பர்ஸானால் சாகச நிகழ்வு எம்.எஸ்.காரியப்பர் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம் பெற்றது .

கண், காது, மூக்கு , வாய் ஆகிய புலனுறுப்புகளால் அபார சாதனையை மேற்கொண்ட பர்சான் காதினால் பலூனை ஊதி உடைத்தல், கண்களால் இரும்பு கம்பியை வளைத்தல், பல்லால் 5.7 கிலோகிராம் சுமையை சங்கிலிகளின் உதவியுடன் உயர்த்துதல், குளிர்பானத்தை மூக்குத்துவாரத்தினூடாக அருந்துதல், மூக்கு துவாரத்தினூடாக வயரை செலுத்தி வாயினூடாக எடுத்து மின்குமிழை எரியச் செய்தல், பல்லால் தேங்காய் உரித்தல் போன்ற செயற்பாடுகளை 12 நிமிடத்தில் மேற்கொண்டு உலக சாதனையை நிலைநாட்டி பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்தினார். இதன்படி தனது பெயரை சர்வதேச சோழன் உலக சாதனை புத்தகத்தில் பதிவிட்டுள்ளார்.

சர்வதேச சோழன் உலக சாதனை இலங்கைப் பிரதிநிதிகளால் இவருக்கான சர்வதேச சோழன் உலக சாதனை புத்தக சான்றிதழ், பதக்கம் என்பன வழங்கப்பட்டதுடன் பொன்னாடை போர்த்தி இதன் போது கௌரவிக்கப்பட்டார் .

20 நிமிடங்களுக்குள் இச்சாதனை மேற்கொள்ளப்படவிருந்த நிலையில் அவர் 12 நிமிடங்களில் இச்சாதனையை நிகழ்த்தினார்.

இச்சாதனை மூலம் நாட்டுக்கும், கிழக்கு மாகாணத்துக்கும், அம்பாறை மாவட்டத்திற்கும், கல்முனை சாய்ந்தமருது பிரதேசத்துக்கும் அவர் பெருமை சேர்ததுள்ளார்.





இந்நிகழ்வில் அனைத்து மத போதகர்கள், சர்வதேச சோழன் சாதனை புத்தக நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகளான எம். தனராஜன், ரீ.இன்பராஜா, எஸ்.நிலக்ஸன், கல்முனை மாநகர முதல்வர் ஏ. எம். ரக்கீப், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம். றிபாஸ், கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம் .ரம்சின் பக்கீர், கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புவேனேந்திரன், கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலை அதிபர் எம். ஐ . ஜாபிர், சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எச். கே. சனூஸ், சாய்ந்தமருது பிரதேச செயலக உத்தி யோத்தர்கள் , கிழக்கு மாகாண கராட்டி சம்மேளன தலைவர் முஹம்மட் இக்பால, மருதம் கலைக் கூடல் மன்றத்தின் தலைவர் அஸ்வான் ச க்கா ப் மௌலானா, முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினரும், யூத் அலியன்ஸ் ஸ்ரீலங்கா இளைஞர் அ மைப்பின் தலைவருமான இஸட். எம் ஸாஜீத் மற்றும் ஊடகவியாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.





**எம். என். எம். அப்ராஸ்**

# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 14 ஆவது பொது பட்டமளிப்பு விழா நேற்று ஆரம்பம்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 14வது பொதுப்பட்டமளிப்பு விழா நேற்று (07) பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில் ஆரம்பமானது. 04 நாட்கள் தொடர்ச்சியாக நடைபெறுகின்ற இப்பட்டமளிப்பு விழாவில் நேற்றைய தினம் பிரயோக விஞ்ஞானங்கள் பொறியியல் பீடத்தினைச் சேர்ந்த 475 மாணவர்கள் தங்களது பட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

கொட்டும் மழையிலும் தங்களது பட்டங்களைப் பெற இம்மாணவர்கள் வருகை தந்திருந்தனர். முதல் நாள் அமர்வான நேற்றைய தினம் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா இங்கு இணைய வழி மூலமாக உரையாற்றினார்.

08 அமர்வுகளாக நடைபெறுகின்ற இந்த பொதுபட்டமளிப்பு விழாவில் மொத்தமாக 2,621 மாணவர்கள் பட்டங்களைப் பெறுகின்றனர். இன்று (08) நடைபெறுகின்ற 2ஆம் அமர்வில் கலைப்பீடத்தினைச் சேர்ந்த 219 மாணவர்களும், 3ஆம் அமர்வில் கலைப்பீடத்தினைச் சேர்ந்த 348 மாணவர்களும், 4ஆம் அமர்வில் இஸ்லாமியக் கற்கைகள் அறபுமொழி பீடத்தினைச் சேர்ந்த 329 மாணவர்களும், 5ஆம் அமர்வில் இஸ்லாமியக் கற்கைகள் அறபு மொழி பீடத்தினைச் சேர்ந்த 313 மாணவர்களும், 6ஆம் அமர்வில் முகாமைத்துவ, வர்த்தக பீடத்தினைச் சேரந்த 277 மாணவர்களும், 7ஆம் அமர்வில் முகாமைத்துவ வர்த்தக பீடத்தினைச் சேரந்த 348 மாணவர்களும், 8ஆம் அமர்வில் கலை, கலாசார பீட மற்றும் முகாமைத்துவ வர்த்தக பீடங்களின் 312 வெளிவாரி மாணவர்களும் தமது பட்டங்களைப் பெறுகின்றனர்.

அத்துடன் இந்த பட்டமளிப்பு விழாவில் 04 பேர் முதுதத்துவமாணி பட்டத்தையும், 23 பேர் வியாபார நிருவாக முதுமாணி பட்டத்தையும், 02 பேர் முகாமைத்துவத்தில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமாவையும் பெற்றுக் கொள்கின்றனர். இருவருக்கு கௌரவ கலாநிதிப் பட்டங்களும் வழங்கப்படவுள்ளன.

பேராசிரியர் எஸ். தில்லைநாதன், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முதலாவது பதிவாளர் ஜௌபர் சாதிக் ஆகியோர் கௌரவ கலாநிதி பட்டம் பெறவுள்ளனர். மேலும் இந்த பட்டமளிப்பு விழாவில் இன்றைய தினம் (08) உயர் நீதிமன்ற நீதியரசர் திலீப் நவாஸ், மூன்றாவது நாள் அமர்வில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சம்பத் அமரதுங்க, நான்காவது நாள் அமர்வில் ருஹுனு பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் காமினி சேனாநாயக்க ஆகியோர் கலந்து கொண்டு பிரதான உரையாற்றவுள்ளனர்.












(நிந்தவூர் குறாப் நிருபர்)...

# அமைச்சர் டக்ளஸுடன் பேச்சு நடத்திய தி.மு.க மூத்த தலைவர் டி.ஆர். பாலு

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவில் தமிழக பக்தர்கள் பங்கேற்பது தொடர்பாக இலங்கை கடற்றொழில் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவுடன் தொலைபேசியில் பேச்சுவார்த்தை நடத்தியதாக தி.மு.க மூத்த தலைவர் டி.ஆர்.பாலு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் முதல்வர் ஸ்டாலினின் பிரதிநிதி பேச்சு நடத்தியதாக தமிழக ஊடகங்கள் ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தன. பாக்குநீரிணையில் இலங்கைக்குச் சொந்தமான கச்சதீவில் அந்தோனியார் தேவாலயம் உள்ளது. இது சீனிகுப்பன் படையாச்சி என்ற தமிழக மீனவரால் கட்டப்பட்டதாக தமிழக மக்கள் நம்புகின்றனர். இந்த தேவாலயத்தில் ஆண்டுதோறும் திருவிழா நடைபெறுவதுண்டு.



## கச்சதீவு அந்தோனியார் திருவிழாவில் தமிழக பக்தர்கள் பங்கேற்பது சாத்தியமா?

இத்திருவிழாவில் இலங்கைத் தமிழர்களும் தமிழகத் தமிழர்களும் பெரும் எண்ணிக்கையில் பங்கேற்பர். இருநாட்டு தமிழர்களின் உறவையும் வலுப்படுத்தும் வகையில் இந்த திருவிழா நடைபெற்று வருகிறது. நடப்பாண்டில் கொரோனா பரவலைக் காரணம் காட்டி தமிழக பக்தர்கள் பங்கேற்க அனுமதி இல்லையென அறிவித்தது இலங்கை அரசு. இது தமிழக பக்தர்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியது.

இது தொடர்பாக மத்திய அரசுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் அனுப்பி இருந்தார். மேலும் இக்கடிதத்தை மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கரிடம் தி.மு.க மூத்த தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி. நேரில் கொடுத்திருந்தார். இந்தியா வரும் இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடம் இது குறித்து பேசுவதாக ஜெய்சங்கர் உறுதி அளித்திருந்தார்.

இந்நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடகங்களுக்கு ஒரு செய்தி வழங்கியிருந்தார். அதில், தி.மு.கவின் மூத்த தலைவர் ஒருவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினின் பிரதிநிதியாக தம்மிடம் பேசியதாகவும், அப்போது கச்சதீவு திருவிழாவில் தமிழக பக்தர்களை அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்ததாகவும் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்தார்.

இக்கோரிக்கை மீது உரிய நடவடிக்கை எடுக்கிறோம் என உறுதி அளிக்கப்பட்டதாகவும் டக்ளஸ் தேவானந்தா கூறியிருந்தார். ஆனால் தம்மிடம் பேசியது யார் என்று டக்ளஸ் தேவானந்தா குறிப்பிடாததால் இச்செய்தியை உறுதிப்படுத்த முடியாதிருப்பதாக இந்திய ஊடகமான ONE INDIA TAMIL தெரிவித்திருந்தது.

தற்போது தி.மு.க ஆதரவு ஊடகமான சன் நியூஸில், இலங்கை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்பு கொண்டு தாமே பேசியதாகவும், கச்சதீவு திருவிழாவில் தமிழகத் தமிழர்களை அனுமதிக்க கோரியதாகவும் டி.ஆர்.பாலு எம்.பி. தெரிவித்துள்ளார். மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கரிடம் முதல்வர் ஸ்டாலின் எழுதிய கடிதம் கொடுத்த நிலையில் டக்ளஸ் தேவானந்தாவுடன் தாம் பேசியதாவும் டி.ஆர்.பாலு எம்.பி. தெரிவித்துள்ளார்.

# கிழக்கில் முஸ்லிம் மக்கள் நலனுக்காக பெருமளவு சமூகப்பணிகளை ஆற்றிய மர்ஹூம் அப்துல்லாஹ்

கடந்த 2020.11.04 ஆம் திகதி காலமான மர்ஹூம் எம்.எஸ்.எம். அப்துல்லாஹ் இளம் வயதில் பல சமூகப்பணிகளை மேற்கொண்டு வாழ்ந்த ஒருவர். காத்தான்குடியில் பல சமூகநல நிறுவனங்களை ஸ்தாபிப்பதில் முன்னின்று உழைத்தவர். கிழக்கிலங்கை இஸ்லாமிய வலது குறைந்தோர் நலன்புரி அஸ்ஸஹ்றா பாலர் பாடசாலை, சமுர்த்தி அபிவிருத்தி சங்கம் என்பவற்றை உருவாக்கியவர்.



அதே போல பல அமைப்புகளில் பதவி வழியாக மற்றும் உறுப்பினராக இருந்து தொண்டுகள் செய்தவர்.

கிழக்கிலங்கை இஸ்லாமிய வலது குறைந்தோர் நலன்புரி அமைப்பின் உருவாக்கத்தில் முன்னின்று உருவாக்கியதன் காரணமாக இன்று இலங்கையின் பல இடங்களில் இருந்தும் மாற்றுத்திறனாளி மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இந்நிலையத்தில் இயற்கையிலேயே மாற்றுத்திறனாளிகளான பிள்ளைகளுக்கு இலவசமாக கல்வி தொழில் கல்வி வழிகாட்டல் உணவு உடை மருத்துவம் விடுதி வசதிகள் என்பன வழங்கப்படுகின்றன. கிழக்கிலங்கை இஸ்லாமிய வலது குறைந்தோர் நலன்புரி அமைப்பின் முயற்சியில் ஸாஹிரா விசேட பாடசாலை 1995 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலையில் 50 இற்கு மேற்பட்ட ஆண், பெண் மாணவர்கள் கல்வி கற்பதுடன் 09 ஆசிரியர்கள், 03 ஊழியர்கள் கடமையாற்றுகின்றனர்.

ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளின் சமயக்கல்வியைக் கருத்திற் கொண்டு ஸாஹிரா குர்ஆன் மதரஸாவும் ஆரம்பிக்கப்பட்டு 70 பிள்ளைகள் குர்ஆன் தீனிய்யா பாடங்கள் கற்று வருகின்றனர். முஅல்லிமா ஒருவர் கடமையாற்றுகிறார்.

நிரந்தர வருமானம் இல்லாவிட்டாலும் உள்ளூர், வெளியூர் பரோபகாரிகள், தனவந்தர்கள், வர்த்தகர்களின் மாதாந்த உதவிகள் மூலம் சிறப்பாக இயங்கிக் கொண்டு வருகின்றது. மர்ஹூம் அப்துல்லாஹ் மரணமடைந்தாலும் அவரின் பணிகள் என்றுமே பேசப்படும்.

கிழக்கிலங்கை இஸ்லாமிய வலது குறைந்தோர் நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த 6 ஆம் திகதி அமைப்பின் தலைவர் மௌலவி எஸ்.எம்.எம். முஸ்தபா பலாஹி தலைமையில் மர்ஹூம் எம்.எஸ்.எம். அப்துல்லாஹ்வின் நினைவுகள் பகிர்ந்த வைபவம் ஸாஹிரா பள்ளிவாயலில் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி நடைபெற்றது.

சிறப்புரையை அமைப்பின் உபதலைவர் மௌலவி ஏ.எல். ஆதம் லெப்பை பலாஹி நிகழ்த்தினார். இந்நிகழ்வில் நிர்வாகிகள் மர்ஹூம் அப்துல்லாஹ் குடும்பத்தினர் கலந்து கொண்டனர். விசேட துஆ பிரார்த்தனையும் நிகழ்த்தப்பட்டது.

(புதிய காத்தான்குடி விசேட நிருபர்) ...

# மட்டக்களப்பு - கொழும்பு புகையிரத சேவை விஸ்தரிப்பினால் பயணிகள் பெரும் நன்மை



## ஒரே நாளில் கொழும்பு சென்று கருமங்களை நிறைவேற்றி வீடு திரும்புவதற்கு வாய்ப்பு

மட்டக்களப்புக்கும் கொழும்புக்கும் இடையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள 'புலதுசி' அதிவேக குளிரூட்டப்பட்ட புகையிரதத்தில் பயணிகள் மிகுந்த ஆர்வத்துடன் பயணம் செய்வதாக ரயில் நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். கொழும்புக்கும் பொலனறுவைக்கும் இடையில் நடைபெற்று வந்த மேற்படி ரயில் சேவை கடந்த 28. 01. 2022 அன்று தொடக்கம் மட்டக்களப்பு வரை விஸ்தரிக்கப்பட்டது.

முதல் நாளான வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.05 மணிக்கு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து புறப்பட்ட இந்த அதிவேக குளிரூட்டப்பட்ட புகையிரதம் இரவு 10.20 இற்கு மட்டக்களப்பை சென்றடைந்தது. பின்னர் மறுநாள் சனிக்கிழமை (29) அதிகாலை 1.30 மணிக்கு மட்டக்களப்பிலிருந்து புறப்பட்ட மேற்படி ரயில் சனிக்கிழமை காலை 9 மணிக்கு கொழும்பை சென்றடைந்தது. இதுவே மேற்படி ரயில் சேவையின் வழமையான நேர அட்டவணையாகுமென்று மட்டக்களப்பு புகையிரத நிலைய அதிபர் ஏ.பேரின்பராஜா தெரிவித்தார். கடந்த காலங்களில் பொலநறுவைக்கும் கொழும்பு கோட்டைக்கும் இடையில் மட்டுமே இச்சேவை நடைபெற்றது. இந்த புகையிரத சேவையை மட்டக்களப்பு வரை விஸ்தரிக்குமாறு பலரும் வேண்டுகோள் விடுத்து வந்தனர்.

இந்த நிலையிலேயே புலதுசி அதிவேக குளிரூட்டப்பட்ட புகையிரத சேவையானது மட்டக்களப்பு வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இப்புகையிரதம் தினமும் மட்டக்களப்பிலிருந்து அதிகாலை 01.30 மணிக்கு புறப்பட்டு காலை 08.45 மணிக்கு கொழும்பு கோட்டையை சென்றடைகின்றது. மீண்டும் பிற்பகல் 3.05 இற்கு கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும் புகையிரதமானது இரவு 9.52க்கு மட்டக்களப்பு புகையிரத நிலையத்தை சென்றடையும்.



இப்புகையிரத சேவையானது மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு கிடைத்த ஓர் வரப்பிரசாதமாகும். மட்டக்களப்பில் இருந்து புறப்படும் பயணிகள் ஒரே நாளில் தலைநகருக்குச் சென்று தங்களது அவசிய கருமங்களை முடித்துக் கொண்டு, தங்குமிட செலவின்றி அன்றைய தினமே மட்டக்களப்புக்கு மீண்டும் வந்தடைந்து விடலாம் என பொது மக்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

இதுஇவ்விதமிருக்க மட்டக்களப்புக்கும் கொழும்புக்குமிடையில் வழமை போன்று 'பாடுமீன்' புகையிரத சேவையும் உதயதேவி புகையிரத சேவையும் இடம்பெற்று வருகின்றன.

'பாடுமீன்' புகையிரதம் சேவை தினமும் இரவு 8.15 இற்கு மட்டக்களப்பிலிருந்து புறப்பட்டு மறுநாள் அதிகாலை 4.53 மணிக்கு கொழும்பு கோட்டையை சென்றடைகின்றது.

அதே போன்று 'பாடுமீன்' புகையிரதம் கொழும்பு கோட்டையிலிருந்து இரவு 7 மணிக்கு புறப்பட்டு மறுநாள் அதிகாலை 3.55மணிக்கு மட்டக்களப்பை சென்றடைகின்றது.

உதயதேவி புகையிரதம் தினமும் மட்டக்களப்பிலிருந்து காலை 6மணிக்கு புறப்பட்டு பிற்பகல் 3.15 மணிக்கு கொழும்பு கோட்டையை சென்றடைகின்றது. அதேபோன்று தினமும் காலை 6 மணிக்கு கோட்டையில் இருந்து புறப்பட்டு மட்டக்களப்பை பிற்பகல் 3.45 மணிக்கு சென்றடைகின்றது.

இவ்வாறு மட்டக்களப்புக்கு கொழும்புக்குமிடையில் புகையிரதே சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளதையடுத்து மட்டக்களப்பு மாவட்ட மக்கள் மட்டுமன்றி அம்பாறை மாவட்ட மக்களும் நன்மையடைகின்றனர்.

குறிப்பாக இம்மாவட்டங்களிலுள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள் தங்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் இலவச புகையிரத பயண அனுமதிச் சீட்டை இதன் மூலம் பயன்படுத்தக் கூடியதாக உள்ளது. இவ்வாறு மட்டக்களப்புக்கும் கொழும்புக்குமிடையில் நடைபெறுகின்ற புகையிரத சேவையினால் பயணிகள் பெரிதும் நன்மையடைகின்றனர்.

எம்.எஸ்.எம்.நூர்தீன் ...
(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

# கிழக்கு மாகாண பிரதம செயலாளராக மீண்டும் துசித்த வணிகசிங்க நியமனம்



கிழக்கு மாகாண பிரதம செயலாளராக துசித்த பி. வணிகசிங்க மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமிருந்து நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டார்.

இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட அதிகாரியான துசித்த, கேகாலை மற்றும் அம்பாறை மாவட்டங்களின் செயலாளராகக் கடமையாற்றியுள்ளதுடன், அரச நிறுவனங்கள் பலவற்றிலும் பல்வேறு பதவிநிலைகளை வகித்தவராவார்.

2019 டிசம்பர் மாதத்தில் கிழக்கு மாகாண பிரதம செயலாளராக பதவியேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வருடாந்தம் மூன்று இலட்சம் தொன் பிளாஸ்டிக் நாட்டுக்கு இறக்குமதி

(லோரன்ஸ் செல்வநாயகம்)

வருடாந்தம் மூன்று இலட்சம் தொன் பிளாஸ்டிக் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படுவதாகவும் அவற்றில் 92.9 வீதமானவை சுற்றாடலை மாசுபடுத்தும் வகையில் எறியப்படுவதாகவும் சுற்றாடல் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நாட்டிற்கு பிளாஸ்டிக் கொள்வனவு செய்வதற்காக 2020 ஆம் ஆண்டு மட்டும் 12,200 கோடி ரூபாவுக்கும் அதிகமான நிதி செலவிடப்பட்டுள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் தரவுத் தொகுதி மூலம் இந்த விடயம் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பிளாஸ்டிக்குகளில் 7.1 வீதம் மாத்திரமே மீள் சுழற்சி செய்யப்படுவதாகவும் ஏனையவை சுற்றாடலில் எறியப்படுவதாகவும் அவற்றி'ல பெரும்பாலானவை மக்களால் எரியூட்டப்படும் நிலையில் அதன் பாரிய புகை சூழல் மாசுக்கு காரணமாக அமைந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.



நாட்டில் தற்போது பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பாவனையினால் சுற்றாடல் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றது. அவற்றின் பாவனையை மட்டுப்படுத்துவதற்காக சில உற்பத்திகள் தடைசெய்யப்பட்டுள்ளன. அதற்கு பதிலாக ஒரு தடவை மட்டும் உபயோகப்படுத்தக்கூடிய சேசே பக்கற்றுகள் தடைசெய்யப்பட்டுள்ளதுடன் அதனை நூற்றுக்கு நூறு வீதம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அழிவுறாத லஞ்ச் சீட் உபயோகத்தை மூன்று மாதங்களுக்குள் நாட்டில் தடைசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார். (ஸ)

## 60 Kg மான் இறைச்சி வைத்திருந்த இருவர் கைது

தெல்தெனிய ரங்கல கலபடவத்த பிரதேசத்தில் கெப் ரக வாகனம் ஒன்றில் மான் இறைச்சி மற்றும் துப்பாக்கிகளை கொண்டு சென்ற இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினமிரவு (06) பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய, மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைதாகியுள்ளனர். இதன்போது 60 கிலோ 500 கிராம் மான் இறைச்சி, வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 2 துப்பாக்கிகள் உட்பட 3 துப்பாக்கிகள், தோட்டாக்கள் என்பன பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 40 மற்றும் 60 வயதுக்குட்பட்ட தெஹிவளை மற்றும் இரத்மலானை பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

## காலாவதியான தடுப்பூசிகள் எதுவும்...

ஹம்தானி தெரிவித்துள்ளார்.

காலாவதியான அல்லது காலாவதியாக அண்மித்த கொவிட் தடுப்பூசிகள் எவையும் மக்களுக்கு வழங்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் 39 வீதமானவர்களுக்கு கொவிட் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டு செல்ல குறைந்தபட்சம் 70 வீதமானவர்களுக்கு பூரணமாக தடுப்பூசி ஏற்றப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமைச்சர்கள், அரச நிறுவன...

செயலாளர்கள், அரச நிறுவனங்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது. அரசாங்கத்தின் செலவினங்களை கட்டுப்படுத்தும் நோக்கில் கடந்த டிசம்பர் 21ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றுநிருபம் மற்றும் அதனையடுத்து கடந்த ஜனவரி மாதம் 12ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள உத்தரவுகளை கடுமையாக கடைப்பிடிக்குமாறும் நிதி அமைச்சின் அந்த வழிகாட்டல் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஒன்றிணைந்த நிதி மூலம் எரிபொருளுக்கான நிதியை பெற்றுக் கொள்ளும் அமைச்சர்கள்,பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்கள் எரிபொருள் செலவைக் கட்டுப்படுத்திக் கொள்ளுமாறும் அதன் மூலம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் அரச நிறுவனங்களின் தொலைபேசி, மின்சாரம் உள்ளிட்ட அனைத்து செலவுகளையும் கட்டுப்படுத்துமாறும் நிதியமைச்சு அதன்மூலம் கேட்டுக்கொண்டுள்ளது.(ஸ)

## சீனாவிலிருந்து 10 இலட்சம்...

கொள்வனவுக்கு பயன்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்தியாவிலிருந்து கிடைக்கவுள்ள நிதி மூலம் எதிர்வரும் ஆறு மாதங்களுக்குப் போதுமான அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ஸ)

## பொது போக்குவரத்துகளில்...

கூறியுள்ளார். சுகாதாரத் துறையினால் சுற்றறிக்கை அல்லது விழிப்புணர்வு வெளியிடப்பட்டால், மூன்று தடுப்பூசிகளையும் பெற்றவர்கள் மட்டுமே பொதுப் போக்குவரத்தில் பயணிக்க வேண்டும் என்ற உண்மையை நாம் கடைபிடிக்க வேண்டும்.

ஏனெனில் இது ஒரு தொற்றுநோயாகும். இந்த நிலைமை தொடர்பான முடிவுகளை சுகாதார அமைச்சு எடுக்க வேண்டும். அதற்கமைய 3 தடுப்பூசி பெற்றவர்கள் மாத்திரமே பொதுப் போக்குவரத்தில் பயணிக்க வேண்டும் என நடைமுறையை பொது மக்கள் பின்பற்ற வேண்டும்.

இது தொடர்பில் எங்களுக்கு கடிதம் மூலம் எதுவும் தெளிவுபடுத்தப்படவில்லை. எனினும் வெளியாகியுள்ள தகவல்களுக்கமைய சுற்றறிக்கை வெளியிட்டு எங்களுக்கு எழுத்து மூலம் அறிவிப்பார்கள்.

அவ்வாறு தகவல் கிடைத்தவுடன் பொதுப் போக்குவரத்தில் தடுப்பூசி அட்டையை சேகரிக்க ஆலோசனை வழங்கப்படும் என இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம மேலும் தெரிவித்துள்ளார்.

## சமையல் எரிவாயு சிலிண்டரில்...

நேற்றுக் காலை எரிவாயு அடுப்பை செயற்படுத்திய போது சிலிண்டரில் திடீரென தீ பரவியுள்ளது.

இதையடுத்து, பிரதேச மக்கள் ஒன்றிணைந்து, தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். சம்பவத்தில் எவருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என குறித்த வீட்டினர் தெரிவித்துள்ளனர்.

## மண்மேடு சரிந்து விழுந்து...

ஒருவர் கண்டி தேசிய வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நிலத்தடியில் புதையுண்டிருந்த நால்வரையும் பிரதேசவாசிகள் வெளியில் எடுத்து வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதுடன், படுகாயமடைந்த ஒருவர் கண்டி தேசிய வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர்கள் மடுல்களே பூஜாபிட்டிய, மற்றும் கெட்டபுல பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். வத்தேகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அதிவேக நெடுஞ்சாலை... (03 ஆம் பக்கத்தொடர்)

குடிபோதையில் வாகனம் ஓட்டுதல், அஜாக்கிரதையாக வாகனம் ஓட்டுதல், அதிவேகமாக வாகனம் ஓட்டுதல், சீட் பெல்ட் அணியாமல் வாகனம் ஓட்டுதல், செல்போன் பேசிக்கொண்டு வாகனம் ஓட்டுதல், அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் ஓட்டுதல் ஆகிய குற்றங்களில் ஈடுபடும் வாகன சாரதிகள் நெடுஞ்சாலைகளில் கைது செய்யப்படுவதாக பொலிஸ் அதிகாரிகள் அமைச்சரிடம் தெரிவித்தனர்.

2021 ஆம் ஆண்டில் அவர்களுக்கு எதிராக 79,904 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், 2020 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 66,252 என்றும் வீதிகளில் அமைக்கப்பட்டுள்ள பொலீஸ் பிரிவுகளில் பணியாற்றும் பொலிஸார் அமைச்சரிடம் தெரிவித்தனர்.

நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் நெடுஞ்சாலைகள் செயற்பாடுகள் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் அதிகாரிகள் மற்றும் நெடுஞ்சாலைகளில் நிறுவப்பட்டுள்ள பொலிஸ் பிரிவு அதிகாரிகளுடனான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

## மரத்துடன் கென்ரர்... (03 ஆம் பக்கத்தொடர்)

படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏனையவர்கள் சிறுகாயமடைந்தனர். விபத்து தொடர்பாக பூவசரங்குளம் பொலிசார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## சுகாதாரத்துறை ஊழியர்கள் பலருக்கும்...

தலைவர் சமன் ரத்னபிரிய நேற்று அது தொடர்பில் தெரிவிக்கையில்: கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மட்டும் 150 தாதிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாளிகாவத்தை வைத்தியசாலையில் 20 தாதியர்களுக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் களுபோவில, ராகம உள்ளிட்ட பல்வேறு வைத்தியசாலைகளிலும் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான பெருமளவு பணியாளர்கள் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பல்வேறு வைத்தியசாலைகளிலும் பணி புரியும் தாதியர்கள் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நாட்டின் தற்போதைய சூழ்நிலைக் கிணங்க உண்மைக்குப் புறம்பான தகவல்கள் தொடர்பில் ஏமாற வேண்டாம் என்றும் மிக விரைவாக பூஸ்டர் தடுப்பூசியை அனைவரும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன நாட்டு மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.(ஸ)

## நாடெங்கும் சுமுகமாக...

பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எதிர்வரும் மார்ச் 5ஆம் திகதி நிறைவு பெறவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி.தர்மசேன தெரிவித்தார்.

பரீட்சை நிலைய பொறுப்பதிகாரிகள், பொலிசார், முப்படையினர் மற்றும் சுகாதாரப் பிரிவினர் இணைந்து இம்முறை கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சைக்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு ள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் சூழ்நிலையில் சுகாதார வழிமுறைகளை முறையாக பின்பற்றி இம்முறை கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை செயற்பாடுகள் இடம் பெறுவதுடன்

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான பரீட்சார்த்திகள் மற்றும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள பரீட்சார்த்திகள் பரீட்சையில் தோற்றுவதற்கு வசதியாக வைத்தியசாலை சுற்றாடலிலேயே அவர்களுக்காக 29 பரீட்சை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பரீட்சை சட்டதிட்டங்கள் இம்முறையும் வழமை போன்று நடைமுறையில் உள்ளதுடன் பரீட்சை நிலையத்தில் இலத்திரனியல் உபகரணங்கள், இலத்திரனியல் கைக்கடிகாரம், கையடக்கத்தொலைபேசி உள்ளிட்ட அனாவசியமான பொருட்களை எடுத்து வர வேண்டாம் என அவர் பரீட்சார்த்திகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

பரீட்சை தொடர்பில் ஏதாவது சிக்கல்கள் நிலவுமானால் 1911 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கோ அல்லது

0112 784208,0112 784537 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அறிவிக்க முடியும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (ஸ)

## நாடெங்கும் நோயாளர்...

கோரிக்கைகளை முன்வைத்து நேற்றுக் காலை 7 மணி முதல் மேற்படி வேலைநிறுத்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதனால் நாட்டின் பிரதான வைத்தியசாலைகள் உட்பட பல்வேறு வைத்தியசாலைகளிலும் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அது தொடர்பில் நேற்று கருத்து தெரிவித்துள்ள மேற்படி சுகாதார தொழிற்சங்க கூட்டமைப்பினர் , புற்றுநோய் ஆஸ்பத்திரி, சிறுவர் வைத்தியசாலை, மகப்பேற்று வைத்தியசாலை, சிறுநீரக வைத்தியசாலை, மற்றும் அவசர சுகாதார சேவை பிரிவுகள் இந்த வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு உட்படுத்தப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

நேற்றைய தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த வேலைநிறுத்தப் போராட்டம் தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண,

கொரோனா வைரஸ் மரணங்களின் போது சடலங்களை விடுவித்தல் மற்றும் கடுமையான நோயாளிகளை வைத்தியசாலைகளுக்கு கொண்டு சென்று சிகிச்சைக்காக அனுமதித்தல் போன்ற அத்தியாவசிய கடமைகளை சுயாதீனமாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அத்துடன் கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை நடைபெற்று வரும் நிலையில் பரீட்சை மண்டப சூழலில் கொரோனா வைரஸ் தொடர்பான சேவைகளை வழங்குவதற்கு தாம் சுயாதீனமான தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை மேற்படி தொழிற்சங்கங்கள் தமது கோரிக்கைகளை பலதடவைகள் முன்வைத்து பல தொழிற்சங்க போராட்டங்களையும் நடத்தியுள்ள நிலையில் நிலையிலேயே தற்போது தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஆரம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். நாட்டின் தற்போதைய சூழ்நிலையை நாம் நன்கு அறிவோம். பெருமளவு கொரோனா வைரஸ் தொற்றுநோயாளிகள் தற்போது நாடெங்கிலும் இனங்காணப்பட்டு வருகின்றனர்.

அதற்கான சுகாதார சேவைகளை தடையில்லாமல் முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது சுகாதார அமைச்சு அதிகாரிகளே அவர்களே தொழிற்சங்கங்களின் கோரிக்கைகள் விடயத்தில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(ஸ)

## ஹிஜாஸ் ஹிஸ்புல்லா நேற்று...

புத்தளம் மற்றும் சிலாபம் நீதிமன்றங்களுக்கு அனுப்பி வைக்குமாறும், அங்கு பிணை நிபந்தனைகள் விதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தின தொடர் தற்கொலை தாக்குதல்கள் குறித்த விசாரணைகளுக்காக கைது செய்யப்பட்டு சி.ஐ.டி.யில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பின்னர் தற்போது சதி செய்தமை, சமூகங்களிடையே வெறுப்புணர்வை தூண்டிய குற்றச்சாட்டுக்களில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ்வுக்கு பிணையளிக்க கடந்த 28 ஆம் திகதி மீண்டும் புத்தளம் மேல் நீதிமன்றம் மறுத்தது.

ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் உள்ளிட்ட இரு பிரதிவாதிகளுக்கு எதிரான சாட்சி விசாரணைகள் கடந்த 28 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போதே ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி நளின் இந்திரதிஸ்ஸ முன்வைத்த பிணைக் கோரிக்கை குறித்த விவகாரம் தொடர்பிலான வழக்கை விசாரிக்கவென விசேடமாக நியமிக்கப்பட்டுள்ள சிலாம் மேல் நீதிமன்றின் நீதிபதி குமாரி அபேவர்தனவினால் இந்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

அதன் பின்னர் ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு பிணை வழங்குவது தொடர்பான தீர்ப்பு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி அறிவிக்கப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்த நிலையில் நேற்று அவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

## பூஸ்டர் தடுப்பூசி செலுத்துவதில்...

பிரவேசிப்பதாகக் குறிப்பிட்டார்.

இது ஒரு சிறந்த விடயமாகும். அனைவரும் கொவிட்19க்கு எதிரான தடுப்பூசியினை செலுத்திக்கொள்வது அவசியமாகும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டில் நேற்றைய நாளில் 39,772 பேருக்கு, பைஃஸர் தடுப்பூசி செலுத்தப்பட்டதாக, தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய பைஸர் தடுப்பூசி செலுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை, 5,777,838 ஆக அதிகரித்துள்ளது.

அதேநேரம், நேற்றைய தினம் 1,156 பேருக்கு பைஃஸர் முதலாம் தடுப்பூசியும், 1,411 பேருக்கு இரண்டாம் தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளது.

408 பேருக்கு சைனோபாம் முதலாம் தடுப்பூசியும், 537 பேருக்கு இரண்டாம் தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளதாகத் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## A/L பரீட்சை எழுதும்...

பரீட்சைக்கு தோற்றியதாக சிறைச்சாலைகள் தலைமையகம் தெரிவித்துள்ளது.

வெலிக்கடை சிறைச்சாலையின் 43, 46, 38 வயதுடைய மூவர் உயர்தர பரீட்சைக்கு தோற்றுகின்றனர். இவர்களில் 38 வயதுடைய சிறைக்கைதி தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர் என சந்தேகிக்கப்படுபவர் ஆவார் என சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளரும், நிர்வாகம் மற்றும் புனர்வாழ்வு ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்காக குற்றம் சாட்டப்பட்டு சிறைச்சாலைகளில் சிறைவாசம் அனுபவித்து வரும் சிறைக்கைதிகள், சந்தேக நபர்கள் புனர்வாழ்வை பெற்றுக் கொள்வதற்காக விசேட திறன்கள் உடையவர்கள் உயர் கல்வியை பெற்றுக்கொள்வதற்கும் சிறந்த எதிர்காலத்தை அமைத்துக்கொண்டு சமூக மயப்படுத்துவதே தங்களது பிரதான இலக்காகும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

## மின்நெருக்கடி குறித்து... (03 ஆம் பக்கத்தொடர்)

எதிர்காலத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

நாட்டின் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதற்காக நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டம் தொடர்பில் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ விசேட விளக்கமளித்தார்.

குறித்த கூட்டத்தில் கௌரவ அமைச்சர் தினேஷ் குணவர்தன, கௌரவ நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, கௌரவ அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட அமைச்சரவை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதமரின் மேலதிக செயலாளர் சட்டத்தரணி சமிந்த குலரத்ன, பிரதமரின் பாராளுமன்ற விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு செயலாளர் பிரியந்த ரத்நாயக்க உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தடுத்து வைக்கப்பட்டிருந்த...

முதல் 5 தினங்களுக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. இவ்வாறு விற்பனை செய்யப்படவுள்ள படகுகளை கடந்த ஒருவாரமாக 50க்கும் அதிகமனோர் பார்வையிட்டனர்.

## பயணத்தடையை... (03 ஆம் பக்கத்தொடர்)

நாட்டுக்கு தேவையான அனைத்து தடுப்பூசிகளும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அவர், அந்தந்த வயதுக்குட்பட்டோர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளை கவனத்திற்கொண்டு காலதாமதமின்றி தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளுமாறு நாட்டு மக்களை கேட்டுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகள் அதிகரித்து காணப்பட்டாலும் மீண்டும் பயணத் தடையை நடைமுறைப்படுத்துவதற்கு எந்தவித எதிர்பார்ப்பும் கிடையாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ)

## விலை அதிகரிக்க... (03 ஆம் பக்கத்தொடர்)

அதன் புதிய விலை 184 ரூபாவாகும்.

அந்நிறுவனம் ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றரொன்றுக்கு 3 ரூபா விலை அதிகரிப்பை மேற்கொண்டுள்ளதுடன் அதன் புதிய விலை 213 ரூபாவாகும். அதேவேளை, டீசல் ஒரு லீற்றருக்கான விலையை 3 ரூபாவால் அதிகரித்துள்ள நிலையில் டீசல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 124 ரூபாவாகும். அதேவேளை, ஐஓசி நிறுவனம் எரிபொருளுக்கான விலைகளை அதிகரித்துள்ள நிலையில் பஸ் கட்டணங்களில் எந்தவித மாற்றத்தினையும் மேற்கொள்ளப் போவதில்லையென தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். (ஸ)

## கச்சத்தீவு உற்சவத்தில்... (03 ஆம் பக்கத்தொடர்)

ஆலோசனையின்படி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொலைபேசியில் உரையாடிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் மேற்படி விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

## துறைமுகத்தில்... (03 ஆம் பக்கத்தொடர்)

அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்திருந்தது.

அவற்றை விடுவிப்பது தொடர்பில் மத்திய வங்கி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அந்த சங்கம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ)

# கலீபதுல் குலபாவுக்கு துஆப்பிரார்த்தனை

**பாணந்துறை மத்திய குறூப் நிருபர்**

ஷாதுலியா தரீக்காவின் இலங்கைக்கான கலீபதுல் குலபா மர்ஹூம் மௌலவி அப்துல் ஹமீத் பஹ்ஜியின் பேரில் குர்ஆன் தமாமும் துஆப்பிரார்த்தனையும் அண்மையில் பாணந்துறை தொட்டவத்தை பெரிய பள்ளிவாசலில் நடைபெற்றது.

பள்ளிவாசல் பிரதம இமாம் மௌலவி எம். ரீ.எம். இல்யாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பள்ளிவாசல் பரிபாலன சங்க செயலாளர் ஏ.ஜே.அஹமது பழீல், வேறவத்தை பத்ர் பள்ளிவாசல் கதீப் மௌலவி ரிஸ்வான் முஹம்மத், இப்ராஹீம் வீதி பள்ளிவாசல் பேஷ் இமாம் மௌலவி எம்.ஹுசைன் உள்ளிட்ட உலமாக்கள் மற்றும் பரிபாலன சங்க உறுப்பினர்கள், ஜமாத்தார்கள் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

ஒரு இலட்சம் வேலைத்திட்டத்தில்;

# அநுராதபுரம் மாவட்டத்திற்கு ரூ. 4000 மில்லியன் ஒதுக்கீடு

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

அரசாங்கத்தின் பாரிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் ஒன்றான ஒரு இலட்சம் வேலைத்திட்டத்தில் அநுராதபுரம் மாவட்டத்திற்கு மாத்திரம் 4000 மில்லியன் ரூபா நிதி வரவு செலவுத் திட்டத்தில் கிடைத்துள்ளது என காணி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

மேற்படி திட்டத்தின் அநுராதபுரம் மாவட்டத்தின் முதலாவது வேலைத்திட்டம் சுபவேளையில் தமுத்தேகம முசல்பிட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள நான்கு கிராமங்களை மையப்படுத்தி ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். உணவு பாதுகாப்பு, புதிய வருமானம் ஈட்டுதல், கிராமிய அடிப்படை வசதிகள், அபிவிருத்தி முதலான இன்னும் நன்மை பயக்கும் முகமாக நாடு பூராவும் இவ்வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன்போது அநுராதபுரம் மாவட்ட அரசாங்க அதிபர் ஜனக



ஜயசுந்தர உரை நிகழ்த்துகையில், எமது நாட்டினுள் இடம்பெறும் தயாரிப்பு பொருளாதார குறைபாடு காரணமாக ஏற்பட்டுள்ள பிரச்சினையினை நிவர்த்தி செய்வதற்காக வேண்டி இப்புதிய வேலைத்திட்டம் ஊடாக கிராமிய மக்களிடத்தில் தயாரிப்பு பொருளாதாரத்தினை அபிவிருத்தி செய்வதற்காக கூடுதல் கவனம் செலுத்துமாறு அரசாங்கத்தால் தமக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என அரசாங்க அதிபர் இதன்போது தெரிவித்தார்.

# அம்பாறை மாவட்ட சுதந்திர தின நிகழ்வை கல்முனை மாநகரில் நடாத்த வேண்டும்

### மாவட்ட பிரதி பொலிஸ் மாஅதிபர்



**(பெரியநீலாவணை விசேட நிருபர்)**

இலங்கையின் 75ஆவது சுதந்திர தின நிகழ்வுகளின் போது அம்பாறை மாவட்டத்திற்கான நிகழ்வை, கல்முனை மாநகரில் நடத்தவேண்டும் என அம்பாறை மாவட்டத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் எஸ்.எம்.வை.செனவிரத்ன தெரிவித்தார்.

74 வது சுதந்திர தினம் நிகழ்வு வெள்ளிக்கிழமை (04) மருதமுனை பிரதான வீதியில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

1948ஆம் ஆண்டு சுதந்திரத்தை பெற்றதன் பின்னரே நமது தலைவர்கள் நாட்டை வழி நடத்துகின்ற உரிமை கிடைத்தது. அந்த உரிமையின் ஊடாகவே நாம் இன்று சுதந்திரமாக நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இரவு வேளைகளில் இன, மத, மொழி வேறுபாடுகள் இன்றி நாம் சுதந்திரமாக வாழ்கிறோம்.

எதிர்வரும் 2023ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்திற்கான சுதந்திரதின நிகழ்வு எல்லா மக்களையும் ஒன்றிணைத்து, கல்முனை மாநகரில் சிறப்பாக நடத்தப்பட வேண்டும். அந்த பொறுப்பை இங்கு என்னோடு இருக்கின்ற மாநகர முதல்வர் சட்டத்தரணி ஏ.எம்.றக்கீப் முன்னின்று செய்வார் என நம்புகின்றேன் என்றார்.

அவதூறு, அச்சுறுத்தல் செய்ததாக

# கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் ஆனந்தசங்கரி வழக்குத் தாக்கல்



தமிழர் விடுதலை கூட்டணியின் பொதுச் செயலாளரும் மூத்த அரசியல்வாதியுமான வீரசிங்கம் ஆனந்தசங்கரி தனது சட்டத்தரணி ஸ்ரனிஸ்லாஸ் செலஸ்ரின் மூலம் தாக்கல் செய்த வழக்கு நேற்று (07) கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

கடந்த 08.01.2022 அன்று கிளிநொச்சியில் உள்ள தனது வீட்டில் அவதூறு மூலமான கோபவேசத்தை ஏற்படுத்தியமை, உடலிற்கும் உயிரிற்கும் ஆபத்து ஏற்படுத்துவதாக அச்சுறுத்தியமை, சமாதானத்தை குலைத்தமை மற்றும் அச்சுறுத்தி கட்சி, ஆதனம், ஆவணம் என்பவற்றை சூறையாட முனைந்தமைக்காக ச.அரவிந்தன் உட்பட்ட 8 நபர்களிற்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

வழக்கை ஆராய்ந்த நீதிமன்றம் குறித்த 8 நபர்களிற்கும் எதிராக அழைப்புக் கட்டளையை விடுத்ததுடன் மேலதிக நடவடிக்கைக்காக எதிர்வரும் (23.02.2022) ஆஜராகுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# போதைப்பொருள் கடத்தலை மறைக்க துப்பாக்கி பிரயோக நாடகமாடிய அம்பியூலன்ஸ் சாரதி களுத்துறையில் கைது

**மொறட்டுவை மத்திய விசேட நிருபர்**

பாணந்துறை ஆதார வைத்தியசாலை முன் அம்பியூலன்ஸ் சாரதி மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தது தொடர்பாக விசாரணை நடாத்திய களுத்துறை பிராந்திய குற்றப்புலனாய்வு பிரிவினர் அச்சாரதியின் நீண்டவாக்கு மூலத்தின் பின்பு அதேசாரதியை சந்தேகத்தின் பேரில்கைது செயதுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 48 வயதையுடைய மூன்று பிள்ளைகளின் தந்தை என்றும் பாணந்துறை கேத்துமதி மகளிர் ஆஸ்பத்திரியில் 2018 முதல்சாரதியாக வேலை செய்கிறார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக இச்சாரதி பொலிஸாருக்கு வழங்கிய தகவல் தொடர்பாக ஆத்திரம் கொண்ட போதைப்பொருள் வர்த்தகர்கள் இவரை கொலை செய்ய முயற்ச்சி மேற்கொண்டதாக ஆரம்பத்தில் சந்தேகித்த பொலிசார் பின்பு விசாரணையில் ஏற்றப்பட்ட திருப்பத்தின் காரணமாகவே சந்தேக நபரைகைது செய்யவேண்டி ஏற்பட்டதாக களுத்துறை பிராந்திய குற்றப்புலனாய்வு பிரிவின் பணிப்பாளர் உதவி அத்தியட்சகர் ரொஹான் ஒழுகல்ல தெரிவித்தார்.

பாணந்துறை கேத்துமதி ஆஸ்பத்திரியின் சாரதி சந்தேக நபர் கடந்த 27 ஆம்திகதி கர்பிணிப் பெண்மணி ஒருவரை ஏற்றிக் கொண்டு பாணந்துறை ஆதார வைத்தியசாலைக்கு அழைத்துவந்த வேளை இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்தநால்வர் இச்சாரதி மீது கைத்துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்துவிட்டு மொறட்டுவை பக்கம் தப்பிச் சென்றனர். வேட்டுக்கள் சரியான முறையில் தீர்க்கப்படாததால் யாருக்கும் உயிராபத்து ஏற்றப்படவில்லை என பொலிசார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவு சந்தேக நபரான சாரதியை கைது செய்தபின் சாரதியை கொலை செய்யவந்த மோட்டார் சைக்கிளில் துப்பாக்கி நபர்கள் இருவரையும் கைதுசெய்தனர்.

சந்தேக நபரான சாரதியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணை மூலம் இவர் களுத்துறை வடக்கில் தனது முதல் மனைவியை கைவிட்டு தனது கள்ளக் காதலியுடன் ஹொரணை, வவுளுகள பிரதேசத்தில் வசித்து வருவதாக தெரியவந்துள்ளது. அத்தோடு இவர்கடந்த ஒருவருடத்திற்குள் 100 கிலோவுக்கு மேல் கைமாறியுள்ளதாகவும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்து துப்பாக்கி பிரயோகம் செய்த நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணை மூலம் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு ஒன்றும், ஹெரோயின் பத்து கிராமும் கண்டுபிடிக்க முடிந்ததாக பொலிஸார் கூறினார். இவர்கள் பணம் அதிக கைமாறியதிற்கான அத்தாட்சியுள்ள வங்கிப் புத்தகம் ஒன்றும் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபார்கள் மூவரையும் பாணந்துறை பதில் மாஜிஸ்திரேட் முன்ஆஜர்படுத்திய போது அம்பியூலன்ஸ் சாரதியையும்

மோட்டார் சைக்கிளில் வந்தஒருவரையும் தடுப்புகாவலில் வைத்து விசாரணை செய்யவும், மற்றைய நபரை எதிர்வரும்17 ஆம்திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.



நுகேகொட சாந்த ஜோன் வித்தியாலயத்தில் இடம்பெற்ற 74 வது சுதந்திர தின நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட வித்தியாலய பழைய மாணவரும் முன்னாள் தெஹிவளை கல்கிசை மேயரும் பிரதமரின் இணைப்புச் செயலாளருமான தனசிறி அமரதுங்க தேசியக் கொடியேற்றி வைப்பதனைப் படத்தில் காணலாம். மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர், மாவட்ட செயலாளர் பீ. யசரத்ன மற்றும் அதிபர் உள்ளிட்ட பிரமுகர்கள் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (படம்:பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

# அரச வெசாக் விழாவை கூறகலை விகாரையில் நடத்த முடிவு

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

அரச வெசாக் தின விழாவை இவ்வருடம் பலாங்கொடை கூறகல விகாரையை மையப்படுத்தி நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக விகாரையின் பிரதம குரு,தெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இதுபற்றி தீர்மானித்ததையடுத்து இவ்விழா இங்கு நடாத்தப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு சமய கலாசார நிகழ்ச்சிகளுடன் வெசாக் பக்தி கீதம், போட்டிகள், வெசாக் பந்தல்கள் அமைத்தல், அன்னதானம் வழங்குதல் மற்றும் மரம் நடுதல் உட்பட மேலும் பல நற்பணி நிகழ்ச்சிகள் நடத்தப்படவுமுள்ளன.

# பாராளுமன்றம் இன்று முதல் 11ஆம் திகதிவரை கூடும்

### 11ஆம் திகதி மங்கள சமரவீர தொடர்பான அனுதாபப் பிரரேரணை



பாராளுமன்றத்தை இன்று (08) முதல் 11ஆம் திகதி வரை கூட்டுவதற்கு பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தலைமையில் நேற்று (07) நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக தெரிவித்தார்.

கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய 08ஆம் திகதி முதல் 11ஆம் திகதிவரையான பாராளுமன்ற அமர்வு தினங்களில் மாற்றம் செய்யப்படவில்லையென்பதுடன், 09ஆம், 10ஆம் திகதிகளில் பாராளுமன்ற அலுவல்கள் பின்வருமாறு அமையும்.

இதற்கமைய, பெப்ரவரி 09 மற்றும் 10ஆம் திகதிகளில் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம், ஆளணியினருக்கெதிரான கண்ணி வெடிகளைத் தடைசெய்தல் சட்டமூலம், குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம், மாகாணசபைகள் (முத்திரைத் தீர்வையைக் கைமாற்றுதல்) திருத்தச் சட்டமூலம், 1969ஆம் ஆண்டு 01ஆம் இலக்க ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் என்பன விவாதிக்கப்பட்டு 10ஆம் திகதி நிறைவேற்றப்படவுள்ளன.

பெப்ரவரி 08ஆம் திகதி முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை 2015ஆம் ஆண்டு 05ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை சட்டத்தின் கீழான இரண்டு ஒழுங்குவிதிகளும், மஹாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் (திருத்தச்) சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. அன்றையதினம் அரசாங்கத்தின் தினப்பணிகளின் பின்னர் ஸ்ரீ சாக்கிய சிங்காராம விகாரஸ்த கார்ய சாதக சங்விதான (கூட்டிணைத்தல்) சட்டமூலம் இரண்டாவது வாசிப்பைத் தொடர்ந்து சட்டவாக்க நிலையியற் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படவிருப்பதாகவும் செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

இதற்கமைய பெப்ரவரி 08ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை தினமும் முற்பகல் 10.00 மணி முதல் முற்பகல் 11.00 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பெப்ரவரி 08ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை தினமும் பிற்பகல் 4.30 மணி முதல் 4.50 மணிவரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், பி.ப 4.50 மணி முதல் பி.ப 5.30 மணிவரையான காலப் பகுதியில் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை மீதான விவாதமும் இடம்பெறும்.

அதேநேரம், பெப்ரவரி 11ஆம் திகதி முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை மறைந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தொடர்பான அனுதாபப் பிரரேரணை மீதான விவாதத்தை நடத்துவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டதாக செயலாளர் நாயகம் குறிப்பிட்டார். இதற்கமைய அன்றையதினம் வாய்மூல விடைக்கான கேள்வி, ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்வி, சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை என்பவற்றுக்கு நேரம் ஒதுக்கப்படவில்லை.

06 பவுண் தங்கம், 27,300 ரூபா பணம்;

# தவறவிட்டதை வீடு தேடி சென்று கையளித்த நபர்

### ஆட்டோ சாரதியின் நெகிழ்ச்சி செயல்

ஹட்டன் நுவரெலியா பிரதான வீதியில் விழுந்து கிடந்த பணம் மற்றும் நகைகளை அதன் உரிமையாளரை வீடு தேடிச் சென்று சாரதி ஒருவர் ஒப்படைத்துள்ளார்.



6 பவுண் பெறுமதி தங்க நகை மற்றும் 27,300 ரூபா பணம் என்பன உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆர்.ஏ. நிஷ்ஷங்க என்ற முச்சக்கர வண்டி சாரதி ஒருவர் வீதியில் விழுந்து கிடந்த பெண்களின் கைப்பை ஒன்றை அவதானித்துள்ளார்.

அதனை சோதனையிட்ட போது பெறுமதியான தங்க நகை மற்றும் பணம் என்பன அதில் இருந்துள்ளன.

பையில் இருந்த தடுப்பூசி அட்டையில் குறிப்பிடப்பட்டிருந்த தொலைபேசி இலகத்திற்கு அழைப்பு மேற்கொண்டு உரிமையாளரிடம் தவறவிட்ட பணப்பையை ஒப்படைத்துள்ளார். தங்க நகை உரிமையாளரான பெண், முச்சக்கர வண்டி சாரதியின் செயற்பாட்டிற்கு நன்றி தெரிவிப்பதற்காக ஹட்டன் பிரதேசத்தில் உள்ள அவரின் வீட்டிற்கு நேற்று சென்றுள்ளார்.


திகதி 06.02.2022 ஞாயிற்றுக்கிழமை www.nlb.lk NLB
உத்தியோகபூர்வ முடிவுகள்

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4670
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 11,414,300.00
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 6 8 6 9 1 8
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 39,318,982.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2965
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,076,100.00
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 32 34 69 71
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 63,590,788.40

Mega POWER மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 1018
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,292,600.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 218,633,022.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து X
சுப்பர் இலக்கம் 25
வெற்றி இலக்கங்கள் 27 50 57 61
மெகா அதிர்ஷ்ட இலக்கம் 04036

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 700
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,422,840.00
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 06 24 36 73
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 95,937,504.40

NLB ஹந்தஹன ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0011
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,623,080.00
இலக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள் 04 16 47 58
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,649,240.96

ஜாதிக சம்பத JATHIKA SAMPATHA
சீட்டிழுப்பு இலக்கம் : 1208
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,716,960.00
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 1 4 0 4 0 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,026,248.00

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 பெப்ரவரி 8
செவ்வாய்க்கிழமை

# தாதியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு நோயாளர்கள் பெரும் அவதி

**யாழ். விசேட, வவுனியா விசேட நிருபர்கள்**

சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் தாதிய சங்கங்களினால் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிப்பகிஷ்கரிப்பு நேற்று வட பகுதியிலும் முன்னெடுக்கப்பட்டது. இதனால் நோயாளர்கள் பெரும் நிர்க்கதிக்கு உள்ளாகினர்.

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் நேற்று தாதியர்கள் சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதன் காரணமாக வெளிநோயாளர் பிரிவு, கிளினிக் சேவை என்பனவற்றின் சேவைகளை பெற்றுக்கொள்வதில் நோயாளர்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்தனர்.



தற்போது 3000 ரூபாவாக உள்ள விசேட கடமைக் கொடுப்பனவை 10,000 ரூபாவாக உயர்த்துதல், ஆசிரியர் சேவை சம்பள உயர்வின் மூலம் தாதிய சேவைக்கு ஏற்பட்டுள்ள சம்பள முரண்பாட்டைத் தீர்த்தல், தொழில் வல்லுனர் பட்டதாரிகளுக்கு திருத்தியமைத்த சம்பள அளவுத்திட்டத்தை நிர்ணயத்துடன் தகுந்த பதவி வாய்ப்புக்களைக் கிடைக்கச் செய்தல், உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. தாதியர்கள் சம்பள முரண்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் நேற்று முன்னெடுக்கப்பட்ட இப்பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்திற்கு ஆதரவாக வவுனியா வைத்தியசாலையிலும் போராட்டம் இடம்பெற்றது

தாதியர்களின் இப் பணிப்புறக்கணிப்பு போராட்டம் காரணமாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு, கிளினிக் சேவை, நோயாளர் விடுதிகள், குருதிப் பரிசோதனை என்பனவற்றின் சேவைகளை பெற்றுக்கொள்வதில் நேற்று நோயாளர்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்தனர்.



## மனித உரிமைகள் ஆணைக்குழுவின்
# கிளிநொச்சி உப அலுவலகம் வார நாட்களில் இயங்கும்

**கிளிநொச்சி குறூப் நிருபர்**

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் பிராந்திய அலுவலகத்தின் கீழ் இயங்குகின்ற கிளிநொச்சி உப அலுவலகத்தின் பணிகள் நேற்று முதல் (07) வார நாட்கள் முழுவதும் முன்னெடுக்கப்படும் என யாழ் பிராந்திய அலுவலகத்தின் இணைப்பாளர் ரி. கனகராஜ் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி ஏ9 பிரதான வீதியில் பழைய கச்சேரி வளாகத்தில் இயங்குகின்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உப அலுவலகத்திற்கு இரண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளனனர் என்றும் எனவே வார நாட்கள் அனைத்தும் அலுவலக நேரங்களில் பொது மக்கள் தங்களது சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மன்னாரில் தராசுகளுக்கு முத்திரையிடும் பணிகள்

**(தலைமன்னார் விஷேட நிருபர் )**

மன்னார் மாவட்டத்தில் வர்த்தக நிலையங்களில் பாவிக்கப்படும் தராசுகளை பரிசோதித்து 2022 ஆம் ஆண்டுக்கான முத்திரைகள் இடுவதற்கான நடவடிக்கைகளை அளவீட்டு அளகுகள் நியமனங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்பொழுது மன்னார் தீவில் தலைமன்னார், பேசாலை, எருக்கலம்பிட்டி, தாராபுரம் பகுதிகளுக்குச் சென்று அளவீட்டு அளகுகள் நியமனங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் நடமாடும் சேவையாக இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

அத்துடன் இவ்விடத்திலேயே பழுதடைந்துள்ள தராசுகளை திருத்தி முத்திரையிடும் பணிகளும் இடம்பெற்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

# அனுராதபுரத்தின் இரு கிராமங்களை வவுனியாவுடன் இணைக்க முயற்சி

## - சார்ள்ஸ் எம்.பி தெரிவிப்பு

**ஓமந்தை விஷேட நிருபர்**

அனுராதபுரத்தின் இரு கிராமங்களை வவுனியா மாவட்டத்துடன் இணைத்து இன விகிதாசாரத்தினை மாற்றியமைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு அதற்கான அனுமதி கோரிய பத்திரம் வவுனியா மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டதாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

வவுனியா ஈரப்பெரியகுளத்தில் உள்ள மண்டபமொன்றில் சிரதம்பரபுரம் கோமரசன்குளம் மதுராநகர் கிராம மக்களை சந்தித்து நேற்று முன்தினம் (06) கலந்துரையாடியே போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர்,

2015 இல் இருந்து 2019 வரையும் வடக்கு கிழக்கில் இடம்பெறவிருந்த சிங்கள குடியேற்றங்களை நாம் தடுத்து நிறுத்தியிருந்தோம். எனினும் 2019 நவம்பர் மாத்திற்கு பிறகு வட மாகாணத்தில் வவுனியா, முல்லைத்தீவில் தென் பகுதியில் இருந்து சிங்கள மக்கள் கொண்டுவரப்பட்டு குடியேற்றப்பட்டு வருகின்றனர்.

வடக்கில் தமிழர்களின் விகிதாரசாத்தினை மாற்றியமைப்பதற்காக இது மிக தீவிரமாக இடம்பெற்று வருகின்றது.

இந்த குடியேற்றத்தினை இரண்டு வகையாக மேற்கொள்கின்றனர். அதாவது இங்குள்ள அரச காணிகளில் தென்பகுதியில் இருந்து கொண்டு வந்து குடியேற்றுவது. மற்றையது ஏற்கனவே பதிவு செய்யப்பட்டு அனுராதபுரம் மாவட்டத்துடன் உள்ள கிராமங்களை வவுனியா மாவட்டத்துடன் இணைப்பதாக உள்ளது.



கெப்பித்திகொல்லாவையில் உள்ள கிராமத்தில் இருந்து அனுராதபுரத்திற்கு செல்வது கடினம் எனவும் வவுனியா நகரத்திற்கு செல்வது இலகு என்பதால் தமது கிராமங்களை வவுனியாவுடன் இணைத்து விடுமாறு பிரதேசசபை உறுப்பினரொருவரால் கூறப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் அண்மையில் வவுனியா மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் அனுராதபுரம் கெப்பித்திகொல்லாவ பிரதேச செயலகத்தின் கனகவெவ என்ற கிராம சேவகர் பிரிவையும் பதவிய பிரதேச செயலகப்பிரிவில் உள்ள கம்பெலிய என்ற கிராம சேவகர் பிரிவையும் முழுமையாக வவுனியா மாவட்டத்துடன் இணைப்பதற்கான அனுமதி பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இதற்கு எதிராக நாம் பாராளுமன்றத்திலும் வெளியிலும் குரல்கொடுத்து வருகின்றோம் என தெரிவித்தார்.

# 21 இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

**(நாகர்கோவில் விஷேட, கரவெட்டி தினகரன்,யாழ். விசேட நிருபர் நிருபர்கள்)**

பருத்தித்துறை கடற்பரப்பில் கடந்த 31ஆம் திகதி கைது செய்யப்பட்ட 21 தமிழக மீனவர்களினதும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை கடற்பரப்புக்குள் அத்துமீறி 2 படகுகளில் நுழைந்த 21 தமிழக மீனவர்களை வடமராட்சி மீனவர்கள் சுற்றி வளைத்து தடுத்து வைத்திருந்தனர். வடமராட்சி மீனவர்களிடமிருந்து தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் பொறுப்பெடுத்து, தமிழக மீனவர்களை கைது செய்தனர்.

அன்றைய தினம் கைது செய்யப்பட்ட மீனவர்கள் மறுநாள் 1ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது அவர்களை நேற்று 07ம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது.

கடந்த மாதம் 31ஆம் திகதி இரவு பருத்தித்துறை கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 21 இந்திய மீனவர்களையும் மறுநாள் முதலாம் திகதி பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு நேற்று திங்கட்கிழமை(07) வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் மீண்டும் நேற்று(07) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவர்கள் 21 பேரையும் மீண்டும் இம் மாதம் 21 ஆம் தேதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்திய மீனவர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்வதற்கு அனுமதியளிக்குமாறு நீரியல் வள திணைக்கள அதிகாரிகளால் மன்றில் விண்ணப்பம் செய்யப்பட்டது.

வாக்குமூலம் பெறுவதற்கு அனுமதி வழங்குமாறு சிறைச்சாலை அத்தியட்சகருக்கு மன்று நேற்று உத்தரவிட்டது. மேலும் அவர்களின் வள்ளங்களில் இருந்து மீட்கப்பட்டு பதப்படுத்திய நிலையில் உள்ள சுமார் 100 கிலோ கிராம் மீனை விற்பனை செய்வதற்கு அனுமதி அளித்த மன்று விற்பனை செய்யும் பணத்தினை நீதிமன்றத்தில் செலுத்துமாறு கட்டளை பிறப்பித்துள்ளது.

## வேலணை பகுதியில்
# களவாடப்பட்ட மாடுகள் இறைச்சிக்காக அறுப்பு

**யாழ்.விசேட நிருபர்**

ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சரவணை மற்றும் வேலணைப் பகுதியில் நேற்றுமுன்தினம் (06) நான்கு மாடுகள் களவாடப்பட்டு இனந்தெரியாத மர்ம நபர்களால் இறைச்சிக்காக வெட்டப்பட்டு கழிவுகள் வீதியோர பற்றைக்குள் வீசப்பட்டிருந்தன.



சரவணை பகுதியில் ஒரு மாடும் வேலணை பகுதியில் மூன்று மாடுகளுமே களவாடப்பட்டு இவ்வாறு இறைச்சிக்காக வெட்டப்பட்டுள்ளன. கால்நடைகள் மேய்ச்சல் தரவையில் கட்டப்பட்டிருந்த மாடுகளை அவிழ்த்துச் சென்ற இனந்தெரியாத மர்ம நபர்கள் இறைச்சிக்காக வெட்டிவிட்டு கழிவுகளை பற்றைக்குள் வீசிவிட்டுச் சென்றிருந்தனர்.

தீவகப் பகுதிகளில் தொடர்ச்சியாக வளர்ப்பு மாடுகள் களவாடப்பட்டு இறைச்சிக்காக வெட்டப்படும் சம்பவங்கள் பதிவாகி வருகின்ற நிலையில் இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மாந்தை மேற்கு பகுதியில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

**(மன்னார் குறூப் நிருபர் )**

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பள்ளமடு – விடத்தல்தீவு பிரதான வீதிக்கு அருகில் நேற்று திங்கட்கிழமை (7) காலை இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

சடலமாக மீட்கப்பட்டவர் சன்னார் கிராமத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான கே.பாஸ்கரன் (வயது33) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அக் குடும்பஸ்தர் தனது வீட்டில் இருந்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (6) விடத்தல் தீவு கிராமத்திற்குச் சென்று விட்டு மீண்டும் தனது வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையிலே அவர் நேற்று காலை அப்பகுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.சடலத்திற்கு அருகிலிருந்து அவர் பயணித்த மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளது.சம்பவ இடத்திற்கு வந்த அடம்பன் பொலிஸார் இச்சம்பவம் விபத்தா அல்லது கொலையா என்பது குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# விபத்தை ஏற்படுத்தும் வீதியோர மரங்களை அகற்றுமாறு கோரிக்கை

**முல்லைத்தீவு குறூப் நிருபர்**

கிளிநொச்சி ஏ32 வீதியின் இரு புறத்திலும் விபத்துகள் ஏற்படக் கூடிய வகையில் உள்ள மரங்களை அகற்ற வேண்டும் என பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் சி.சிறிரஞ்சன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது, பூநகரி பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட ஏ32 வீதியில் அமைந்துள்ள ஆபத்தான நிலையில் காணப்படும் மரங்களை அகற்றும் வேலைத் திட்டத்துக்காக மரங்களை அடையாளப் படுத்தும் வேலைகள் எமது உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டது . வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அரச மரக்கூட்டுத்தாபனம் என்பன இணைந்து இவ் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்வந்துள்ளது. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பேராபத்தை தவிர்க்கும் பொருட்டு இவ் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். 06 மரங்கள் அழிந்த நிலையில் காணப்படுகின்றன. அழிந்த மரங்களை அகற்றி ஏனைய உயிருடன் உள்ள மரங்களின் கிளைகளை அகற்றுவதன் மூலம் ஏ32 சாலையில் ஏற்படக் கூடிய விபத்துகளையும் தவிர்க்கலாம். அதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் பிரதேச சபை தவிசாளர் தெரிவித்தார்.

# போதைப்பொருளுடன் இரு சகோதரர்கள் கைது

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்.ஏழாலை பகுதியில் ஐஸ் போதைப் பொருளுடன் 22வயது மற்றும் 29 வயதான சகோதரர்கள் இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், இராணுவ புலனாய்வு பிரிவினரும், சுன்னாகம் பொலிஸாரும் இணைந்து இந்த கைது நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது கைது செய்யப்பட்ட நபர்களிடம் இருந்து 3 கிராம் 58 மில்லிக்கிராம் ஐஸ் போதை கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கிளிநொச்சி மாவட்டத்தில்
# 100 குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகள்
## கிளிநொச்சியில் 100 மலசல கூடங்கள் அமைப்பு

**கிளிநொச்சி குறூப் நிருபர்**

கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 100 குடும்பங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மலசல கூடங்கள் அமைத்துக்கொடுக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் அபிவிருத்தி அமைச்சினால் மேற்படி திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான பயனாளிகள் பொருளாதாரத்தில் நலிவுற்றவர்கள் என்ற அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு 50 ஆயிரம் பெறுமதியில் மலசல கூடங்கள் அமைக்கப்பட்டு வழங்கப்படவுள்ளது.

மேற்படி அமைச்சின் இணைப்புச் செயலாளர் ஜீவிதன் இரவீந்திரகுமாரினால் இதற்கான ஆரம்ப நிகழ்வு நேற்றைய தினம் (06) கிளிநொச்சி ஸ்கந்தபுரம் விநாயகர்குடியிருப்பில் மேற்கொள்ளப்பட்டது.



பொதுச் சுகாதார பரிசோதகர் ஜென்சன் றொனால்டின் "என் சுவாசமே" எனும் சுகாதார மேம்பாட்டு நூல் பருத்தித்துறை எஸ். எஸ். கொம்ளக்ஸ் மண்டபத்தில் நேற்று முன்தினம்(06) வெளியிடப்பட்டது. இவ் விழாவில் பிரதம அதிதியாக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைத்தார்.

(நாகர்கோவில் விஷேட நிருபர்)

# கிழக்கின் குரல்



# பட்டிப்பளை பிரதேசத்திற்கு குடிநீர் வழங்கும் ஆரம்ப வேலை திட்டம்

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனால் ஆரம்பித்து வைப்பு





**கல்லடி குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்**

"சுபிட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில், "அனைவருக்கும் சுத்தமான குடிநீர்" தேசிய வேலைத் திட்டத்தின் கீழ், பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட இரண்டு பகுதிகளுக்கான குடிநீர் இணைப்பினை வழங்குவதற்கான ஆரம்ப நிகழ்வுகள் ஞாயிற்றுக்கிழமை (06) இடம்பெற்றது. மட்டக்களப்பு மாவட்டத்தின், பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட, முதலைக்குடா மற்றும் அம்பிளாந்துறை ஆகிய பகுதிகளுக்கான குடிநீர் வழங்கும் திட்டத்தினை பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் ஆரம்பித்துவைத்துள்ளார்.

பட்டிப்பளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட இவ்விரு கிராமங்களிலும் இவ்வாறு ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த அபிவிருத்தி திட்டத்தின் ஊடாக சுமார் 750 குடும்பங்கள் பயனடையவுள்ளதுடன், இதற்காக இராஜாங்க அமைச்சரின் சிபாரிசின் அடிப்படையில் சுமார் 65 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந் நிகழ்வுகளில் மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.புஸ்பலிங்கம், மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் வை.சந்திரமோகன், இராஜாங்க அமைச்சரின் இணைப்புச் செயலாளர்கள் உட்பட நீர் வழங்கல் அதிகார சபையின் அதிகாரிகள், ஏனைய அரச திணைக்களங்களின் அதிகாரிகள், மற்றும் பிரதேச வாசிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# உகன பண்டாரதுவ கலுகல் ஓயா நீர்த்தேக்கம் திறந்து வைப்பு



**மாளிகைக்காடு குறூப், சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்கள்**

235 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட உகன பண்டாரதுவ கலுகல் ஓயா நீர்த்தேக்கம், நீர்ப்பாசன அமைச்சர் சமல் ராஜபக்‌ஷவினால் நேற்று மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில், வனஜீவராசிகள் இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக, திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், நீர்ப்பாசன திணைக்கள உயர் அதிகாரிகள், பிரதேச மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

1992 ஆண்டு காலப்பகுதியில் உகன பண்டாரதுவ கிராமத்தில் இரண்டு நபர்கள் புலிப்பயங்கரவாதிகளினால் வெட்டிக் கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

உகன பிரதேசத்தில் காணி உறுதிப் பத்திரம் அற்றவர்களுக்கு இதன்போது காணி உறுதிகளும் வழங்கி வைக்கப் பட்டன.

# மூதூர் நெய்தல் நகரில் பாலம் திறப்பு



**கந்தளாய் தினகரன், மூதூர் தினகரன் நிருபர்கள்**

மூதூர் பிரதேச சபைக்குட்பட்ட பாலநகர் மற்றும் நெய்தல் நகர் பாலம் பிரதேச மக்களின் நீண்ட காலத் தேவையாக இருந்த பாலம் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கின் முயற்சியின் காரணமாக அமைக்கப்பட்டு ஞாயிற்றுக்கிழமை (6) திறந்து வைக்கப்பட்டது.

நெடுஞ்சாலைகள் அமைச்சின் ஊடாக சுமார் ஒரு கோடியே அறுபது இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இப் பாலம் நிர்மாணிக்கப்பட்டு மக்களின் பாவனைக்காக திறக்கப்பட்டு கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வின் போது, மூதூர் பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம். அரூஸ், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜே.எம். லாஹீர், கிண்ணியா நகர சபையின் முன்னாள் தவிசாளர் வைத்தியர் ஹில்மி மஹ்ரூப், மூதூர் பிரதேச சபையின் உறுப்பினர்களான ஏ.ஆப்தீன், எம்.பைசர், ஜெஸீம், நிஸ்மி உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# உபகரணங்கள் வழங்கி வைப்பு



**பாலமுனை தினகரன் நிருபர்**

சமுதாய சீர்திருத்த திணைக்களம், அக்கரைப்பற்று பிரதேச செயலகத்துடன் இணைந்து சீர்திருத்தம் பெற்ற கட்டளையாளர்களுக்கு சுயதொழிலுக்கான உபகரணங்கள் மற்றும் பொருட்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

உதவி பிரதேச செயலாளர் ரொஸீன் தாஜ் தலைமையில் பிரதேச செயலகத்தில் சனிக்கிழமை (05) நடைபெற்ற இந்நிகழ்வில், சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் எம்,எஸ்.எம்.இக்ராம், உதவி திட்டப் பணிப்பாளர் தமீம், கணக்காளர் உட்பட பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

அக்கரைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட சீர் திருத்தம் பெற்று புனர்வாழ்வு அளிக்கப்பட்ட கட்டளையாளர்களுக்கு சுய தொழில் செய்வதற்கான தையல் இயந்திரம்,கோழி வளர்ப்பு, ஆடை விற்பனை போன்ற உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# கல்வி அதிகாரிகள் நடுநிலையாக சிந்தித்து செயற்பட வேண்டும்

## திருமலை மாவட்ட பாரளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப்

**முள்ளிப்பொத்தானை குறூப், தோப்பூர் குறூப் நிருபர்கள்**

இனங்களுக்கிடையேயான மனக்கசப்புகள் ஏற்படும் போது கல்வி அதிகாரிகள் சிந்தித்து நடுநிலையாகச் செயற்பட வேண்டும். மாறாக அவர்கள் பிரச்சினையைத் தூண்டுபவர்களாக இருக்கக் கூடாது என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை சண்முகா பாடசாலையில் அபாயா அணிந்து சென்ற ஆசிரியையை கடமையேற்க விடாது தடுத்த சம்பவம் நாடளாவிய ரீதியில் பேசு பொருளாக உள்ளது. இதனால் தமிழ், முஸ்லிம் உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது.

ஒரு அரச பாடசாலையில் கல்வி உயர் அதிகாரிகளின் பணிப்புரைக்கமைய கடமையேற்க சென்ற ஆசிரியையை கடமையேற்க விடாது தடுத்து நிறுத்தியமை சட்டத்திற்கு புறம்பான செயலாகும். இது குறித்து நீதியான விசாரணை நடத்தப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.



இந்நிலையில் இந்த பிரச்சினையைத் தணிக்க வேண்டிய மாகாணக் கல்விப் பணிப்பாளரும், வலயக் கல்விப் பணிப்பாளரும் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல் செயற்படுவது மிகவும் கவலையைத் தருகின்றது.

இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட ஆசிரியையை உடடியாக வலயக் கல்வி அலுவலகத்திற்கு இணைக்கும் கடிதத்தை வலயக் கல்விப் பணிப்பாளரும், மாகாணக் கல்விப் பணிப்பாளரும் வழங்கியுள்ளனர்.

ஒரு ஆசிரியையை வலயக் கல்வி அலுவலகத்திற்கு இணைப்பதன் நோக்கம் என்ன? அதற்கான நிர்வாக ஏற்பாடுகள் ஏதும் உண்டா? அவருக்கு என்ன கடமையை அங்கு வழங்க முடியும்.

வலயக் கல்வி அலுவலகத்தில் அவருக்கான கடமை இல்லை என்றால் அவர் காலை முதல் மாலை 4.15 வரை அலுவலகத்தில் என்ன செய்ய முடியும்? என்று யோசித்தல்லவா முடிவெடுக்க வேண்டும். மாகாணக் கல்விப் பணிப்பாளரும், வலயக் கல்விப் பணிப்பாளரும் இந்தக் கேள்விகளுக்கு என்ன பதில் சொல்லப் போகின்றார்கள்.

தற்போது நாட்டிலுள்ள சகல பாடசாலைகளும் விடுமுறை. இதனால் ஆசிரியர்களுக்கும் விடுமுறை. ஆனால் இந்த ஆசிரியையை வலயக் கல்வி அலுவலகத்திற்கு இணைத்து தினமும் அலுவலகத்திற்கு வர வைப்பது அவரைத் தண்டிப்பது போன்ற செயலாகும். இது தற்போதைய பிரச்சினையைக் குறைப்பதற்குப் பதிலாக மேலும் தூண்டி விடும் செயலாகும்.

சில அரசியல்வாதிகள் சமுக ஒற்றுமை குறித்து கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில், கல்வி அதிகாரிகள் நடுநிலையாகச் சிந்தித்து செயற்பட வேண்டும். பிரச்சினையை பூதாகரமாக்கும் செயற்பாடுகளை அவர்கள் நிறுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

# காளி அம்பாள் விக்கிரகம் குமுக்கனில் பிரதிஷ்டை

**காரைதீவு குறூப் நிருபர்**



1400 கிலோ எடையுள்ள மாபெரும் காளி அம்பாள் விக்கிரகமொன்று, கிழக்கின் தென் எல்லையிலுள்ள குமுக்கன் மடத்தடி அம்மன் ஆலய வளாகத்தில் பிரதிஷ்டை செய்து வைக்கப் பட்டுள்ளது.

வன அதிகாரிகளின் பூரண ஒத்துழைப்பில் குமண சரணாலயத்தில் மாபெரும் சக்தி பீடமாக விளங்குகின்ற குமுக்கன் ஆற்றங்கரையின் மடத்தடி அம்மன் ஆலயத்தில் மாபெரும் காளி தேவியின் விக்ரக பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

சித்தர்களின் குரல் அமைப்பின் பிரதானி சிவசங்கர் ஜீ இதனை முன்னின்று செயற்பட்டு பிரதிஸ்டை செய்துவைத்தார்.

உதவியாக இலங்கையின் சித்தர்களின் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன் துணைத் தலைவர் மனோகரன் சிவயோகி மகேஸ்வரன் ஸ்வாமிகள் உள்ளிட்ட பக்தர்கள் செயற்பட்டனர்.

சித்தர்களின் குரல் அமைப்பின் பிரதானி சிவசங்கர் ஜீ கருத்துரைக்கையில்:

விக்ரமாதித்தன் பூஜித்த உச்சயினி பிரதேசத்தில் இருந்து கல்லை தெரிவு செய்து அதை சாமுத்ரிகா லட்சணங்களுடனும் 1400 கிலோ எடையுள்ள மாபெரும் மஹா காளியாக வடிவமைத்து உயிர் கொடுத்த என் அன்புக்குரிய உலகம் அறிந்த மயன் வம்சத்தில் வந்த சிற்ப ஆச்சரியார் கலைமாமணி முத்தையா ஸ்தபதி அவர்களுக்கு நன்றிகள். உலகம் உள்ளவரை அவர் உருவாக்கிய இந்த அபூர்வ படைப்பு அவரின் பெயரை சொல்லிக்கொண்டே இருக்கும்.

# கட்டு துப்பாக்கி வெடித்து இளைஞன் படுகாயம்

**ரொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலை கோமரங்கடவல காட்டுப் பகுதியில் கட்டுத் துப்பாக்கி வெடிப்பு சம்பவத்தில் இளைஞரொருவர் படுகாயமடைந்த நிலையில், திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.இச்சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (06) காலை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு படுகாயமடைந்தவர் கோமரங்கடவல பக்மீகம பகுதியைச் சேர்ந்த ரணசிங்கசுகே சுமித் ரணசிங்க (24 வயது) என தெரிய வருகின்றது.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது, அவரது எருமை மாடுகள் காணாமல்போன நிலையில் அதனை தேடுவதற்காக சக நண்பருடன் குபுக்வெவ காட்டுப் பகுதிக்கு சென்ற போது கட்டுத் துவக்கு வெடித்ததாக பொலிஸ் ஆரம்ப கட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

குறித்த இளைஞர் படுகாயமடைந்த நிலையில், கோமரங்கடவல பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

அவருடைய இடுப்பு பகுதியில் காயம் ஏற்பட்டுள்ளதால் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட உள்ளதாக வைத்தியசாலை பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

# வலம்புரிச் சங்குகளுடன் சந்தேகத்தில் ஒருவர் கைது

**தோப்பூர் குறூப் நிருபர்**

திருகோணமலை மூதூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நெய்தல் நகர் பிரதேசத்தில் வைத்து இரண்டு வலன்புரிச் சங்குகளுடன் 43 வயதுடைய ஒருவர் சந்தேகத்தில் ஞாயிற்றுக்கிழமை (06) கைது செய்யப்பட்டுள்ளதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

மூதூர் கட்டைபறிச்சான் இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், விசேட அதிரடிப்படையினருடன் இராணுவ புலனாய்வாளர்களும் இணைந்து வலம்புரிச் சங்குகளுடன் சந்தேக நபரை கைது செய்துள்ளனர். இவ் வலம்புரிச் சங்குகள் விற்பனை செய்யப்படுவதற்கு தயாரான சந்தர்ப்பத்தில் இவை கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட இரண்டு வலம்புரிச் சங்குகளும் மூதூர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், கைது செய்யப்பட்ட சந்தேக நபரை மூதூர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.



இறக்காமத்தில் இரு வேறு இடங்களில் விமர்சையாக கொண்டாடப்பட்ட 74 வது தேசிய சுதந்திர தின கொண்டாட்டங்களின் போது பிடிக்கப்பட்ட படம்.
படம்: வரிப்பத்தான்சேனை தெற்கு குறூப் நிருபர்

# மட்டு. மாவட்டத்தில் சுகாதார நடவடிக்கைகள் ஸ்தம்பிதம்

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

பொது சுகாதார பரிசோதகர்கள் நேற்று மேற்கொண்டுள்ள வேலை நிறுத்தம் காரணமாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா மற்றும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் உட்பட சுகாதார நடவடிக்கைகள் அனைத்தும் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

மாவட்டத்தில் சுகாதார வைத்தியதிகாரி பணிமனைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளில் கடமைபுரியும் அனைத்து பொது சுகாதார பரிசோதகர்களும் நேற்று பணி புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

# உலகம் இழிவானதாகக் கருதுவதை கடவுள் உயர்வானதாகத் தேர்ந்துகொள்கிறார்




கடவுளின் அழைப்பு என்பது யாருக்குக் கிடைக்கும் யாரால் கிடைக்கும் எப்போது கிடைக்கும் என்றெல்லாம் சொல்ல முடியாது. நாம் ஒன்று நினைப்போம் தெய்வம் ஒன்று நினைக்கும் என்று சொல்வார்கள்.

பல புனிதர்களின் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் இந்த உண்மை விளங்கும். 'இவனா குருவாகப்போறான்' என்று பலரின் கேலிப்பேச்சுக்கு உள்ளான பலர் குருக்களாகி சாதனைப் படைத்துவருவதைப் பார்க்கின்றோம். சமூகத்தில் சாமியாராகி சரித்திரம் படைக்கப்போகிறான் என்று சிலரைப் பார்த்து சொல்வார்கள் ஆனால் அப்படிப்பட்டவர்கள் எல்லாம் குடும்ப வாழ்வுக்குப் போயிருப்பதையும் நாம் கண்டிருக்கிறோம்.

சரியான படிப்பில்லை. எதிர்பார்த்த அளவுக்குப் பன்னிரெண்டாம் வகுப்பில் நல்ல மதிப்பெண்கள் பெறவில்லை. நிறம் சரியில்லை. குடும்பச் சூழல் சரியில்லை. எதிர்பார்க்கும் அளவிற்கு அறிவுத்திறமை இல்லை போன்ற காரணங்களால் நம் சமுதாயத்தில் எத்தனையோ பேர் தங்கள் தேவஅழைத்தலை இழந்திருக்கின்றார்கள்.

அழைத்தலின் அளவுகோல்தான் என்ன? கடவுளின் பார்வை வேறு மனிதரின் பார்வை வேறு. இந்த உலகம் பல வீனமானவர்கள் அல்லது பாவிகள் என்று கருத்துபவர்களை கடவுள் பலம் பொருந்தியவர்களாகத் தேர்ந்துகொள்கிறார். இதைத்தான் புனித பவுலடியாரும், “பலவீனத்தில்தான் பலம் கட்டியெழுப்படுகிறது” என்று கூறுகின்றார்.



கடந்த ஞாயிறு முதல் வாசகத்தில் ஏசாயா, “ஐயோ, நான் அழிந்தேன். ஏனெனில் தூய்மையற்ற உதடுகளைக் கொண்ட மனிதன் நான்; தூய்மையற்ற உதடுகள் கொண்ட மக்கள் நடுவில் வாழ்பவன் நான்; படைகளின் ஆண்டவராகிய அரசரை என் கண்கள் கண்டனவே” என்று அழுது புலம்பிய ஏசாயாவை புனிதப்படுத்தி இறைவன் தன் பணிக்காகத் தேர்ந்துகொள்கின்றார்.

அவ்வாறே கிறிஸ்தவ மறையை ஒன்றுமில்லாமல் செய்துவிடவேண்டும் என்ற வெறியோடு புறப்பட்ட பாவியான சவுலை தமஸ்கு நகருக்குச் செல்லும் வழியில் தடுத்தாட்கொண்டு தன்பக்கம் ஈர்க்கிறார் இயேசு. சவுலைச் சந்திக்கச்சென்ற அனனியா என்னும் இயேசுவின் சீடரே அவரின் பாவநிலை குறித்து அதிருப்தி வெளியிட்டபோதும் சவுலை பவுலாக மாற்றுகிறார். உம் பெயரை அறிக்கையிடும் அனைவரையும் கைது செய்வதற்காகத் தலைமைக் குருக்களிடமிருந்து அதிகாரம் பெற்று இங்கே வந்திருக்கிறான்” என்றார். அதற்கு ஆண்டவர் அவரிடம், “நீ செல். அவர் பிற இனத்தவருக்கும் அரசருக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் முன்பாக எனது பெயரை எடுத்துச் செல்ல நான் தேர்ந்தெடுத்துக் கொண்ட கருவியாய் இருக்கிறார். என் பெயரின்பொருட்டு அவர் எத்துணை துன்புறவேண்டும் என்பதை நான் அவருக்கு எடுத்துக்காட்டுவேன்” என்றார்.

(திப 5:1416).

இதன் அடிப்படையில் இரண்டாவது வாசகத்தில் புனித பவுலடியார் தன்னைக் குறித்துச் சான்று பகர்கின்றார்.

நான் திருத்தூதர்களிடையே மிகக் கடையவன். திருத்தூதர் என அழைக்கப்பெறத் தகுதியற்றவன். ஏனெனில், கடவுளின் திருச்சபையைத் துன்புறுத்தினேன். ஆனால், இப்போது நான் இந்த நிலையில் இருப்பது கடவுளின் அருளால்தான்.

அவர் எனக்களித்த அருள் வீணாகிவிடவில்லை. திருத்தூதர்கள் எல்லாரையும்விட நான் மிகுதியாகப் பாடுபட்டு உழைத்தேன். உண்மையில் நானாக உழைக்கவில்லை; என்னோடிருக்கும் கடவுளின் அருளே அவ்வாறு உழைக்கச் செய்தது. நானோ மற்றத் திருத்தூதர்களோ யாராயிருந்தாலும் இதையே பறைசாற்றுகிறோம். நீங்களும் இதையே நம்பினீர்கள். (1 கொரி 15:811)



நற்செய்தி வாசகத்தை நோக்கும்போது புனித பேதுரு எவ்வாறு பலவீனத்தில் அழைக்கப்படுகிறார் என்பதைக் காண்கின்றோம்.

“ஆண்டவரே, நான் பாவி, நீர் என்னை விட்டுப் போய்விடும்” என்றார். அவரும் அவரோடு இருந்த அனைவரும் மிகுதியான மீன்பாட்டைக் கண்டு திகைப்புற்றனர். சீமோனுடைய பங்காளிகளான செபதேயுவின் மக்கள் யாக்கோபும் யோவானும் அவ்வாறே திகைத்தார்கள். இயேசு சீமோனை நோக்கி, “அஞ்சாதே; இது முதல் நீ மனிதரைப் பிடிப்பவன் ஆவாய்” என்று சொன்னார். அவர்கள் தங்கள் படகுகளைக் கரையில் கொண்டுபோய்ச் சேர்த்தபின் அனைத்தையும் விட்டுவிட்டு அவரைப் பின்பற்றினார்கள். (லூக் 5:810)

புனித பேதுருவுடைய வாழ்வை நாம் ஆராய்ந்து பார்த்தால் தான் ஒரு பாவி என்று தன்னை ஏற்றுக்கொண்டவர், இயேசுவே இது உமக்கு நடக்கவே கூடாது என்று இயேசுவின் தியாகச் சாவை தடுக்க முனைந்தவர்.

உருமாற்ற நிகழ்வின்போது ஆண்டவரே நாம் இங்கேயே இருப்பது நன்று என்று கூறி சவாலை சந்திக்கத் தயங்கியவர். எல்லாரும் உம்மைவிட்டு ஓடிப்போய்விட்டாலும் நான் ஒருபோதும் ஓடிப்போக மாட்டேன் என்று உணர்ச்சிவசப்பட்டு பேசியவர்.

இறுதியாக இயேசுவை மறுதலித்தபோதிலும் தான் புரிந்த அந்த மாபெரும் தவறிற்காக மனம் வெதும்பி அழுதவர். இத்தனை பலவீனங்களையும் கொண்டிருந்த பேதுருதான் இயேசுவின் அடுத்த மேய்ப்பராக இருந்து தொடக்ககாலத் திருச்சபையைப் பலம்பொருந்தியதாக மாற்றினார். வரலாற்றைப் பார்க்கும்போத மகா பாவியாய் வாழ்ந்த அகுஸ்தினார் திருஅவையின் மிகச்சிறந்த மறைவல்லுனரானார்.

இந்த உலகம் இழிவானதாகக் கருதுவதை கடவுள் உயர்வானதாகத் தேர்ந்துகொள்கிறார். கட்டியோர் விலக்கிய கல்லே கட்டிடத்திற்கு மூலைக்கல்லாய் அமைந்தது என்ற இறைவார்த்தையையும் இங்கு அப்படியே பொருத்திப் பார்க்கலாம்.

ஆண்டவர் தாவீதை திருப்பொழிவு செய்வதற்கு முன்பாக என்ன நிகழ்கிறது என்பதை சாமுவேல் முதல் நூலில் வாசிக்கின்றோம். கடவுள் இறைவாக்கினர் சாமுவேலை பெத்லகேமைச் சார்ந்த தாவீதின் தந்தையான ஈசாயிடம் அனுப்புகின்றார். அங்குச் சென்ற அவர், ஈசாயின் புதல்வர்கள் ஒவ்வொருவரையும் பார்க்கும்போதும், கடவுள் தெரிந்துகொண்டது இவராகத்தான் இருக்குமோ என்று எண்ணும் வேளையில், ஆண்டவர் சாமுவேலிடம், “அவன் தோற்றத்தையும், உயரத்தையும் பார்க்காதே; ஏனெனில், நான் அவனைப் புறக்கணித்துவிட்டேன். மனிதர் பார்ப்பது போல் நான் பார்ப்பதில்லை. மனிதர் முகத்தைப் பார்க்கின்றனர்; ஆண்டவரோ அகத்தைப் பார்க்கின்றார்” என்றார். (1 சாமு 16:7)

நம்மிடம் உள்ள பலவீனமே நம்முடைய பலம் என்பதை உணர்வோம். பலவீனத்தில் இறையழைத்தல் பெற்ற மோசே, ஏசாயா, எரேமியா, பேதுரு, மத்தேயு, பவுலடியார், அகுஸ்தினார், இஞ்ஞாசியார், ஜான் மரியா வியானி ஆகியோரின் வரிசையில் நாமும் இணைந்து இறையழைத்தல் பெற்று இறையாட்சியைக் கட்டியெழுப்புவோம். (ஸ)

## இன்றைய அருள் வாக்கு



இன்றைய செவ்வாய்க்கிழமை நற்செய்தியில் இயேசுவின் சீடர்கள் தீட்டான கைகளுடன் உண்பதாகப் புறம் கூறியப் பரிசேயரைப் பார்த்த இயேசு, மூதாதையர் மரபைப் பற்றிக் கொண்டு கடவுளின் கட்டளைகளைப் புறக்கணித்து விடும் போக்கை வன்மையாகக் கண்டிக்கின்றார்.

மாதா, பிதா, குரு, தெய்வம். உம் தாய் தந்தையரை மதித்து நட, தாய்தந்தையரைச் சபிப்போர் கொல்லப்படவேண்டும் என்ற கட்டளையை மறந்து பெற்றவர்களைத் துச்சமாக நடத்துவது பரம்பரைப் பரம்பரையாக எங்கள் குல வழக்கம் என்று எதையாவதைப் பற்றிக் கொண்டு அதற்காகப் போராடுவதை இங்கே அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

வெளிவேடங்களைக் கலைத்து உண்மை நிலையை உணர்ந்து உன் கடவுளாகிய ஆண்டவரின் கட்டளைகளை இரண்டு 1 ஒரே கடவுள் 2. உன்னை அன்பு செய்வது போல உன் அயலானைச் செய்து வாழ் என்பவையே நமக்கு உணர்த்தும் கடவுளின் வார்த்தை என்பதை உணர்வோம்."இவ்வாறு நீங்கள் பெற்றுக் கொண்ட மரபின் பொருட்டுக் கடவுளின் வார்த்தையைப் பயனற்றதாக்கி விடுகிறீர்கள். இதுபோல நீங்கள் பலவற்றைச் செய்கிறீர்கள்" என்று அவர்களிடம் கூறினார். (மாற்கு 7:13)

## தாண்டவன்வெளி காணிக்கை மாதா ஆலய திருவிழா









மட்டக்களப்பு, தாண்டவன்வெளி காணிக்கை மாதா ஆலய வருடாந்த திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு பொன்னையா ஜோசப் ஆண்டகையின் தலைமையில் நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்பணி ம. ஸ்ரனிஸ்லஸ் அடிகளார் உட்பட அருட்தந்தையர்களின் பங்கேற்புடன் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. நிறைவில் அன்னையின் திருச்சுரூப ஆசீருடன் கொடியிறக்கப்பட்டு திருவிழா நிகழ்வுகள் நிறைவுபெற்றன. (படங்கள்: உதயகாந்த் உதயகுமார்)

# செபமாலையின் மகிமையும் லூர்துபதியின் வரலாறும்

**லூர்து அன்னை திருவிழா பெப்ரவரி 11ல்**

லூர்துபதி என்று சொன்னாலே நோயாளர்கள் குணமடைதலின் மகிமை பலருக்கு நினைவுக்கு வரும் அன்னை மரியாளின் பரிந்துரையால் ஆண்டவர் இயேசுவின் குணமளிக்கும் வல்லமை நிறைந்த லூர்துபதியின் வரலாறு சிறப்பானது.

1854 டிசம்பர் 8ஆம் திகதி திருத்தந்தை 10ம் பத்திநாதர் Ineffabilis Deus என்ற மாற்ற முடியாத பிரகடணத்தின் வழியாக அன்னை மரியாளின் மாசில்லா உற்பவத்தை கத்தோலிக்க விசுவாசக் கோட்பாடாக பிரகடணம் செய்திருந்தார்.

பிரான்ஸ் நாட்டின் லூர்து நகரில் பிறந்த பெர்னதெத் சூபிரூஸ் என்பவர் 14 வயதான போது 1858பெப்ரவரி 11ஆந்திகதி தனது சகோதரி மற்றும் தோழியுடன் விறகு தேட லூர்து நகரில் மசபியேல் குகை அருகே சென்ற வேளையில் பெர்னதெத் ஒரு காட்சியைக் கண்டார்.

மரியன்னை ஓர் இளம்பெண்ணாக வெண்ணிற ஆடையும் முக்காடும் அணிந்து நீல நிறத்தில் இடைக்கச்சையை உடுத்தியவாறு கையில் முத்துக்களால் ஆன ஒரு செபமாலை யோடு காலடியில் காட்டு ரோஜா செடிகள் காணப்பட கைகளைக் கூப்பி வானத்தை நோக்கியவாறு அந்த குகையில் தோன்றினார்.

பெர்னதெத் 1858ல் மரியன்னையின் முதல் காட்சியைக் கண்டபோது மரியன்னை மேலும் சிலநாட்கள் அதே இடத்திற்கு வரச் சொன்னார். பெர்னதெத்தும் 1858 பெப்ரவரி 18ஆந்திகதி அன்னை மரியாளைக்கண்டு பரவசநிலையில் இருந்ததை அவரோடு சென்றவர்கள் கண்டதாக மசபியேல் குகை வரலாறு தெரிவிக்கின்றது.

1858ல் இடம்பெற்ற ஒருகாட்சியில் மரியன்னை தனக்கு அங்கு ஓர் ஆலயம் கட்டப்படவேண்டும் என்று கேட்டுக் கொண்டார் பெர்னதெத் அதை பங்குக்குருவிடம் சொன்ன போது அவர் அதற்கான காரணத்தை அறிந்து வருமாறு கூறினார்.

1858 பெப்ரவரி 25ஆந்திகதி காட்சியின்போது மரியன்னையின் கட்டளையை ஏற்று பெர்னதெத் மண்ணைத் தோண்டிய போது அந்த இடத்தில் நீரூற்று ஒன்று தோன்றியது அது பின்பு ஓடையாக மாறி திருப் பயணிகளை கவர்ந்திழுக்கும் அற்புத இடமாக இன்றும் திகழ்கிறது.

1858 மார்ச் 25ஆந்திகதி மரியன்னை பெர்னதெத்திடம் 'நானே அமல உற்பவம்' என்று கூறினார் இதற்கு ஜென்மப் பாவம் எதுவுமின்றி பிறந்தவர் என்பது அர்த்தம்.



மொத்தம் பதினெட்டு முறை பெர்னதெத்துக்கு காட்சியளித்த மரி யன்னை அவற்றில் 15காட்சிகளில் செபமாலையின் மகிழ்ச்சி,துயரம்,மகிமை ஆகிய மறைபொருளின் 15மறை உண்மைகளையும் நாளுக்கு ஒன்று என்ற வகையில் பெர்னதெத்தை தியானித்து செபிக்கச் செய்தார்.

1858 ஏப்ரல் 7ஆந் திகதி சிறுமி பெர்னதெத் மரியன்னையின் 16ஆவது காட்சியைக் கண்டபோது மருத்துவ ஆய்வுக்காக 15 நிமிடங்கள் இவர் கையை சிலர் தீயினால் சுட்டனர்.பெர்னதெத் அதை உணரவும் இல்லை . கையில் தீக்காயமும் எதுவும் ஏற்படவுமில்லை என வரலாற்று சாண்று கூறுகிறது.

1858ஜுலை 16ஆந் திகதி மரி யன்னையின் கடைசிக் காட்சியில் பெர்னதெத் 'இதற்கு முன்பாக நான் அவரை இத்தகைய பேரழகோடு கண்டதே இல்லை' என்று கூறியுள்ளதாக மெசபியேல் குகைக் காட்சி வரலாறு மேலும் தெரிவிக்கின்றது.

மரியன்னையின் தரிசனம் கிடைத்த வேளையில் ஏழைச்சிறுமி பெர்னதெத் பரலோக மந்திரம், அருள் நிறை மரியே மற்றும் புதுமை வரவணிக்கத்தின் செபமான 'ஓ மரியாயே பாவ மாசில்லாது உற்பவமானவளே' போன்ற செபங்களை மாத்திரமே அறிந்தவளாக இருந்திருந்தாள்.

மிகவும் அழகான இளம் பெண் கையில் செபமாலை ஏந்தியவளாகக் காட்சி தரும்போது, அவளது வெண்ணிற ஆடையின் ஓரங்களில் நீலநிறத்தால் அலங்காரம் செய்யப்பட்டிருந்ததாகவும் தன்னோடு மிகவும் அன்பாகவும் பண்பாகவும் அதாவது சிறுமி பெர்னதெத்தை அன்னை மரியாள் 'நீ' என அழைக்காது 'நீங்கள்' என அழைத்து உரையாடியதாகவும் தெரிவித்திருக்கின்றாள்.

கடந்த 1862ல் கத்தோலிக்க திரு அவை அன்னை மரியாளின் தரிசனத்தை உறுதிப் படுத்தியதோடு, கடந்த 1907ஆம் ஆண்டிலிருந்து லூர்து அன்னையின் பெருவிழா உலகெங்கும் கொண்டாடப்படுகின்றது.



லூர்து அன்னையின் திருப்பதிக்கு கோடிக்கணக்கான யாத்திரீகர்கள் வருகை தருவதுடன் நோயாளர்கள் குணமடைந்து வரும் திருத்தலமாகவும் சிறப்படைந்துள்ளது.

கத்தோலிக்க திரு அவையின் வரலாற்றில் முதல் நூற்றாண்டிலிருந்தே மரி யன்னையின் காட்சிகள் உலகின் பல இடங்களிலும் நிகழ்ந்துள்ளன. காலத் திற்குக் காலம் மரியன்னை ஒவ்வொரு காட்சியிலும் ஏதேனும் ஒருசெய்தியை வழங்குவதாகவும் லூர்துபதியின் காட்சியும் அப்படியானதாகவே அமைந்துள்ளதாக அன்னையாம் திருச்சபை எமக்குப் படிப்பிக்கின்றது.

லூர்து அன்னை மரியாளின் பரிந்துரையை இரந்து மன்றாடும் பக்தர்களுக்கு லூர்துபதியைக் குறித்தோ அல்லது அன்னை மரியாளின் மகிமையைக் குறித்தோ விளக்கம் எதுவும் மேலதிகமாகத் தேவைப்படாது என பக்தர்கள் கருதுகின்றனர்.

அன்னை மரியாளிலும் அவரது பரிந்துரையிலும் நம்பிக்கை இல்லாதோர்க்கும் லூர்துபதியில் அன்னை மரியாளின் தரிசனங்களைவிட வேறு விளக்கம் எதுவும் அவசியமில்லை.

'நானே மாசில்லா உற்பவம்' என்று திருவாய் மலர்ந்த அன்னையின் பாதத்தில் எம்மை ஒப்படைத்து கொடிய கொரோனோ உலகை விட்டே அகலவேண்டு மெனவும் எமது குடும்பங்களுக்காக எமது திரு அவைக்காக எமது நாட்டு மக்களுக்காக மரியன்னையை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்காகவும் அன்னையின் ஆயுதமான செபமாலையைத் தினமும் கரத்தில் ஏந்தி தொடர்ந்து செபிப்போம். செபமே ஜெயம்.(ஸ)

# நகர்வலம்



# 2000 புதிய வீடுகளை நிர்மாணிக்கும் வேலைத்திட்டம் புத்தளத்தில் ஆரம்பம்



"மிஹிந்து நிவஹன" திட்டத்தின் கீழ் நாடு முவதும் 2022 ஆண்டளவில் மேலும் 2000 புதிய வீடுகளை நிர்மாணிக்கும் வேலைத்திட்டம் புத்தளம் மாவட்டத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கிராமிய வீடமைப்பு, நிர்மாணத் துறை மற்றும் கட்டடப் பொருட்கள் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் திறைசேரியில் இருந்து பெறப்படும் பணத்தை உரிய முறையில் முகாமைத்துவம் செய்து மக்களிடம் கையளிக்கும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

மக்களிடம் இருந்து பெறப்படும் வரிப்பணத்திலிருந்து மக்களுக்காக அரசு உதவிகள் வழங்கப்படுவதாகவும், வெற்றிகரமான அரசு என்பது அது பற்றிய கொள்கைகளை முறைப்படி நடைமுறைப்படுத்தும் அரசாங்கங்கள் மட்டுமே என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

புத்த சாசனத்திற்காக தனது பிள்ளைகளை அர்ப்பணித்த பெற்றோர்களுக்காக வீடுகளை நிர்மாணிக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட "மிஹிந்து நிவஹன" திட்டத்தின் புத்தளம் மாவட்டத்தின் அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்து கொண்ட போது அமைச்சர் மேற்கண்டவாறு உரையாற்றினார்.

இந்த விழா இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் தலைமையின் கீழ் ஆரச்சிகட்டுவ பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

பல்வேறு வீடமைப்புத் திட்டங்களுக்காக இங்கே வழங்கப்பட்ட மொத்தத் தொகை 189 மில்லியன் ரூபாக்களாகும்.

இந்நிகழ்வில் கிராமிய மற்றும் பிரதேச குடி நீர் வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம், கிராமிய வீடமைப்பு, நிர்மாணத் துறை மற்றும் கட்டடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாளர் கீர்த்தி ரஞ்சித் அபேசிறிவர்தன, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தலைவர் துமிந்த சில்வா மற்றும் பிரதேச அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## சிலாபம் முன்னேஸ்வரத்தில் கும்பாபிஷேக குடமுழுக்கு பெருவிழா

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்



சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீ அதர்வண மஹா பத்ரகாளிகா பிரத்யங்கிரா தேவி பீடம் நவ குண்ட பக்க்ஷ மஹா கும்பாபிஷேக குடமுழுக்கு பெருவிழா நேற்று முன்தினம் (06) காலை இடம் பெற்றது.

முன்னேஸ்வரம் சிவஸ்ரீ இரா.முரளிதரக் குருக்களினால் இந்த மஹா கும்பாபிஷேகம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணி முதல் சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணி வரை பக்தர்களுக்கு பால் காப்பு சாத்தும் வைபவம் இடம் பெற்றது.

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.30 க்கு ஆரம்பமான விநாயகர் பூஜை, புண்ணியாக வாசனம், நித்ய துவஜ பூஜை, யாகசாலை பிரவேசம், நான்காம் கால யாகப் பூஜை, நவ அக்னி பூஜை, மஹா பூர்ணாகுதி, விஷேட உபசார சமர்ப்பணம், விஷேட தீபாராதனை, அந்தர் பலி, பஹிர் பலி, முகூர்த்த தோஷ நிவாரணம், யாத்ரா தானம், சர்வ மங்கள வாத்தியம், வேதசோஷம், மங்கள இசை முழங்க பக்தர்களின் அரோஹரா கோஷத்துடன் பிரதான கும்பங்கள் வீதி பிரதக்க்ஷனம், மீனலக்ன சுபமுகூர்த்த சுபவேளையில் ஸ்தூபி அபிஷேகம் அதனைத் தொடர்ந்து மூல மூர்த்திக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

அதனையடுத்து, தசமங்கள தரிசனம், திருக்கதவு திறத்தல், எஜமான் அபிஷேகம், குருமாரின் ஆசியுரை, குருமார் சம்பாவன கௌரவிப்பு தொடர்ந்து மூல மூர்த்திகளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் மஹா அபிஷேகம், விஷேட பூஜை, திருமுறை பாராயணம், மகேஸ்வர பூஜை என்பனவற்றுடன் அன்னதானமும் இடம் பெற்றது.

மேலும் இன்று முதல் 18 ஆம் திகதி வரை 12 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளது.

வடமத்திய மாகாணம்;

## பஸ்களில் இருக்கைகளை பதிவு செய்ய புதிய வசதி



அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரத்தில் இருந்து தொலைதூரப் பஸ்களில் பயணிக்கும் பயணிகள் தொலைபேசி மூலம் இருக்கை முன்பதிவுகளை பதிவு செய்து கொள்ளும் சேவையினை வட மத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் ஆரம்பித்துவைத்தார்.

இதன் ஊடாக நாட்டின் சகல பகுதிகளுக்கும் செல்லவுள்ள பஸ்களில் இருக்கை முன் பதிவினை வடமத்திய மாகாண போக்குவரத்து அதிகார சபையின் இணையத்தளம் www.transport.nc.gov.lk மூலமாகவும் 0253140900 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொண்டு இருக்கைகளை முன்பதிவு செய்து கொள்ள முடியும்.

இதுவரை மக்களுக்கு இவ்வாறானதொரு வசதி இல்லாமல் இருந்ததுடன் வட மத்திய மாகாண போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் நிலந்த ஏக்கநாயக்கவின் எண்ணக்கருவிற்கு அமைய இது ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எவோட்ஸ் -2022 கவிதைப் போட்டி

42ஆவது ஆண்டினில் கால்பதித்திருக்கும் புதிய அலை கலை வட்டம் இவ்வாண்டுக்கான எவோட்ஸ் 2022 கலை, கலாசாரப் போட்டிகளை நடத்த ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. இதன் முதற்கட்டமாக கவிதைப் போட்டியை நடத்த முன்வந்துள்ளது. நாடளாவியரீதியில் நடத்தப்படும் இப்போட்டிகளுக்கான நிபந்தனைகள் வருமாறு,

உங்களுக்கு விருப்பமான தலைப்பில் கவிதைகளை எழுதி அனுப்பலாம். கவிதைகள் மரபுக் கவிதையாகவோ புதுக்கவிதையாகவோ இருக்கலாம். கவிதைகள் 12 வரிக்கு குறையாமலும் 24 வரிக்கு மேம்படாமலும் இருத்தல் வேண்டும். அனுப்பப்படும் கவிதைகளுடன் பெயர், முகவரி தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்கள் குறிப்பிடப்பட வேண்டும்.

ஒருவர் ஒரு ஆக்கத்தை மட்டுமே அனுப்பவேண்டும். ஆக்கம் ஏதேனும் ஊடகங்களிலோ மற்றும் பதிவாக்கங்களிலோ இடம்பெற்றிருக்கக்கூடாது. கவிதை எதிர் வரும் 22.02.2022 திகதிக்கு முன்னர் கிடைக்கவேண்டும். அனுப்பவேண்டிய இணையவழிகள் puthiyaalaikalaivaddam1980 @ g mail . com மற்றும் 075 4880172 என்ற இலக்கத்தின் ஊடான whatsapp இலக்கத்திற்கும் அனுப்பலாம். 40 வயது உட்பட்டவர்கள் இதில் கலந்து கொள்ளலாம்.

முதல்பரிசாக சான்றிதழ் மற்றும் 5000 ரூபா வழங்கப்பட உள்ளதோடு இரண்டாம் இடம் பெறுபவருக்கு சான்றிதழ் மற்றும் 3000 ரூபா பணப்பரிசு வழங்கப்படும் மூன்றாம் பரிசாக சான்றிதழ் மற்றும் 2000 ரூபா பணப்பரிசு வழங்கப்பட இருப்பதோடு வெற்றியாளர்களுக்கான விருது 30.01.2023 அன்று வழங்கப்படும். மேலதிக விபரங்களைப் பெற 076 2002701, 077 6274099 மற்றும் 077 7412604 என்ற அலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

## காஷ்மீர் நட்புறவு தினத்தை" முன்னிட்டு கருத்தரங்கு, புகைப்படக் கண்காட்சி






காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் பாகிஸ்தானின் நிபந்தனையற்ற ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில், "காஷ்மீர் நட்புறவு தினத்தை" முன்னிட்டு கருத்தரங்கு மற்றும் புகைப்படக் கண்காட்சி ஒன்றை கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்திருந்தது.

இந்த விழாவில், பல வெளிநாட்டு தூதுவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பாகிஸ்தான் சமூகத்தினர், காஷ்மீர் நலன்விரும்பிகள் மற்றும் இலங்கை ஊடக பிரதிநிதிகள் கலந்து சிறப்பித்தனர்.நிகழ்ச்சியை ஆரம்பிக்கும் முகமாக, பாகிஸ்தான் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் காஷ்மீர் நட்புறவு தின செய்திகள், பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தின் இரண்டாவது செயலாளர் (அரசியல்) மற்றும் ஊடக இணைப்பாளரால் முறையே வாசிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் முக்கிய பேச்சாளர்களாக சிரேஷ்ட அரசியல் ஆலோசகர் கலாநிதி அசேல விக்கிரமசிங்க, அரசியல் செயற்பாட்டாளர் கலாநிதி தோணா சந்திமா விஜேகுனவர்தன, மற்றும் பாகிஸ்தான் இலங்கை நட்புறவு சங்கத்தின் உறுப்பினர் திருமதி பாத்திமா ராசிக் காதிர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

பயனுள்ள உரையாடல் மூலம் காஷ்மீர் பிரச்சினைக்கு அமைதியான தீர்வினை வலியுறுத்திய அனைத்து பேச்சாளர்களும் சமய நல்லிணக்கம் மற்றும் அனைவரினதும் அமைதியான சகவாழ்வின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தனர்.

மேலும், இந்தியா சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ள ஜம்மு காஷ்மீரில் இந்தியப் படைகள் மேற்கொள்ளும் மனித உரிமை மீறல்கள் குறித்தும் அவர்கள் கவலை தெரிவித்தனர்.

பாகிஸ்தானின் இஸ்லாமியக் குடியரசின் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) உமர் ஃபாரூக் பர்கியின் சொற்பொழிவுடன் கருத்தரங்கு நிறைவு பெற்றது.

மாத்தறை மாவட்ட;

## கைத்தொழில் நிலையங்களை மீள் இயங்கச் செய்ய நடவடிக்கை

வேலையிழந்தோருக்கு வாய்ப்பு -மாநகர முதல்வர் தெரிவிப்பு

மாத்தறை தினகரன் நிருபர்

மாத்தறை நகரில் முன்னர் செயல்பட்டு வந்த கைத்தொழில் நிலையங்களை மீண்டும் செயற்படச் செய்வதன் மூலம் மாத்தறை நகரில் வேலையிழந்த மக்களுக்கு பொருளாதார துறையில் முன்னேற்றத்தை ஏற்படுத்திக் கொடுக்க மாத்தறை மநகர சபை நடவடிக்கை எடுத்துள்ளதென மாத்தறை மாநகர முதல்வர் ரஞ்சித் ரஸரத்ன கூறினார்.

மாத்தறை மாநகர சபையின் மாதாந்த கூட்டத்தில் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

மாத்தறை மடிஹெ மற்றும் பொல்ஹேன பிரதேசங்களில் உள்ள தும்பு கைத்தொழில் நலையங்கள் வேரகம்பிடிய வஸ்கம சட்டி பானை உற்பத்தி நிலையம் பொல்ஹேன பிரதேசத்தில் செயல்பட்டு வந்த சுண்ணாம்பு தொழிற்சாலை என்பவற்றை மீண்டும் செயற்படச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## புத்தளம் மாவட்ட எல்லை நிர்ணயம் தொடர்பில் விசேட கலந்துரையாடல்

பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் பங்கேற்பு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்



புத்தளம் மாவட்டத்தில் எல்லைகள் நிர்ணயம் செய்வது மற்றும் கிராம சேவகர் பிரிவுகளை பிரிப்பது சம்பந்தமான விஷேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் (06) புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினரின் காரியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் ஜமால்தீன் ஜெளசி, அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் புத்தளம் மாவட்ட தலைவர் அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம் உட்பட உலமாக்கள், பெரிய பள்ளி நிர்வாக சபையினர், பாராளுமன்ற உறுப்பினரின் ஆலோசனை குழு உறுப்பினர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, எல்லைகள் நிர்ணயம் மற்றும் கிராம சேவகர் பிரிவுகளை பிரிப்பது உள்ளிட்ட விடயங்களில் கலந்துகொண்ட உலமாக்கள் உள்ளிட்டோர் தமது ஆலோசனைகளையும் கருத்துக்களையும் முன்வைத்தனர். இறுதியில் இந்த விடயங்கள் சம்பந்தமாக பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீமின் மேற்பார்வையில் குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன், அக்குழுவுக்கு திட்ட வரைவுகள் உள்ளிட்ட விடயங்களும் பணிகளும் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





பேருவளை சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி தேசிய பாடசாலையின் மாணவர் தலைவிகளுக்கான சின்னஞ் சூட்டும் நிகழ்வு அண்மையில் பாடசாலையில் அதிபர் பஹீமா பாயிஸ் தலைமையில் நடைபெற்றது. இதன்போது புதிய மாணவத்தலைவியாக அன்ஷா ரஹ்மத் அன்ஸார் தெரிவு செய்யப்பட்ட பின் புதிய கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட மாணவத் தலைவர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைப்பதை படங்களில் காணலாம்.

படங்கள்: பேருவளை விசேட நிருபர்



"வரவு செலவு திட்டத்தின் மூலம் ஒரு இலட்சம் பணிகள்" என்ற அரசின் கிராமிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் தலைமையில் ஒரு மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீட்டின் மூலம் ஹோராப்பொல முஸ்லிம் வித்தியாலத்தில் சுற்று மதிலை அமைப்பதற்கான அடிக்கல் அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமானினால் நடப்பட்டது. அந்நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படம்.


(படம்: கல்நேவ தினகரன் விசேட நிருபர் )



நாடளாவிய ரீதியில் 'ஒரு இலட்சம் அபிவிருத்தி திட்டங்கள்' வேலைத் திட்டத்தின் கீழ் வெலிகம வெலிப்பிட்டிய ஆயுர்வேத வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு தரைக்கு 'டய்ல்' இட்டு செப்பனிடும் பணி முன்னெடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சார்பில் அவரது செயலாளர் சரத் யாப்பா அபேவர்தன கலந்துகொண்டுள்ளதை படத்தில் காணலாம்.

(படம்: வெலிகம தினகரன் நிருபர்)

## மலைச்சாரல்



# மலையகம் ஈன்றெடுத்த பெருந்தகைகள் வரலாறு பேசும் தலைவர்களாகியுள்ளனர்

(மாவத்தகம தினகரன் நிருபர்)

முஸ்லிம்கள் மத்தியில் இஸ்லாத்தையும், தமிழையும் ஒருங்கு சேர்த்து வளர்ப்பதில், மூதறிஞர் சித்திலெப்பை அரும்பங்காற்றியதாக பேராசிரியர் துரை மனோகரன் தெரிவித்தார். மலையக கலாசார சங்கத்தின் ஏற்பாட்டில் அறிஞர் சித்திலெப்பை, எம். ஜி. ஆர் மற்றும் க. ப. சிவம் ஆகியோரின் ஞாபகார்த்த நிகழ்வு இடம்பெற்றது.

கண்டி கெப்பட்டிப்பொல மண்டபத்தில் ராஜா ஜேகின்ஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர், இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து பேசிய பேராசிரியர் துரை மனோகரன் தெரிவித்ததாவது,

ஆறுமுக நாவலருக்கு கொடுக்கப்பட வேண்டிய கௌரவம், அறிஞர் சித்திலெப்பைக்கும் கொடுக்கப்பட வேண்டும்.சிறந்த பத்திரிகை ஆசிரியராக விளங்கியவர் அறிஞர் சித்திலெப்பை. முஸ்லிம் நேசன், ஞானதீபம், ஆகிய பத்திரிகைகளில் ஆசிரியராகப்பணியாற்றிய காலகட்டத்தில், பல சாதனைகள் புரிந்த செயல்வீரர் அவர்.சித்திலெப்பை என்றதும், அவர் எழுதிய "அசன்பே" என்ற சரித்திர நாவலே முதலில் ஞாபகத்திற்கு வருகிறது. "அசன்பே" சரித்திரம் என்ற நாவலை அவர் முதலில் முஸ்லிம் நேசன் பத்திரிகையிலே எழுதி வந்தார். 1884 ஆண்டில் அது முஸ்லிம் நேசன் பத்திரிகையில் தொடராக வெளிவந்தது. 1885 ஆம் ஆண்டில் "அசன்பே" கதை நூலாக பிரசுரமானது. அந்த வகையில் இலங்கையினுடைய முதல் தமிழ் நாவல் ஆசிரியராகவும் சித்திலெப்பையே விளங்குகிறார். உலக தமிழ் இலக்கிய வரலாற்றில் இரண்டாவது நாவலராசிரியராகவும் இவர் விளங்குகிறார்.

பிரதான முதலியார் சரித்திரம் தமிழ் நாட்டில் தோன்றிய பின்னர், இலங்கையில் 1885 இல் சித்திலெப்பையுடைய அசன்பேயினுடைய சரித்திர நாவல் வெளிவந்தது.



முதலில் அந்த நாவலுக்கு அசன்பேயினுடைய கதை எனப் பெயர் வைத்தனர். காலப் போக்கில் அது மறுபிரசுரம் பெறுகின்ற போது அக்காலத்தினுடைய வழக்கத்தின்படி பத்மாவதி சரித்திரம், கமலாம்பாள் சரித்திரம் போன்ற இலக்கியத் தேவை அடிப்படையில் இதற்கும் இலக்கிய கர்த்தாக்கள் "அசன்பே" சரித்திரம் என்று பெயர் வைத்தனர்.

அசன் என்ற முஸ்லிம் கதாநாயகனைக் கொண்டு அந்த நாவல் படைக்கப்பட்டிருக்கிறது. இஸ்லாத்தினுடைய நேர்மையையும், அசனுடைய வீர சாகசங்களை எடுத்துரைக்கும் வகையிலே "அசன்பே" சரித்திரம் விளங்குகிறது. இந்த வகையில், தமிழ் நாவல், இலக்கிய வரலாறு என்பன இலங்கையில் விருத்தியடைய மூதறிஞர் சித்திலெப்பை பெரும் பங்காற்றி உள்ளதாகவே கூறமுடியும்.

தமிழக அரசியலில் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த எம்ஜி இராமச்சந்திரனும் மலையத்தில்தான் பிறந்தார்.

பின்னர் சிறந்த நடிகராகவும், அரசியல்வாதியாகவும் அறியப்பட்டவர் எம்ஜிஆர். இவரது அரசியலால் பலர், அரசியலுக்குள் நுழைய நேரிட்டது. இதுபோன்றுதான், க. ப. சிவம். கண்டியில் இவரைப் பற்றி தெரியாதோர் யாருமில்லை.

ஊடகத் துறையில் நீண்ட காலம் கால்பதித்த பெருமைக்குரிய ஒருவர் இவர். மேலும் இதுபோன்ற மலையகம் ஈன்றெடுத்த தலைவர்களுக்கு விழா எடுப்பது மகிழ்ச்சியளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# படை வீரர்களுக்கு தென்னங்கன்றுகள் உபகரணங்கள் வழங்கி வைப்பு

(காவத்தை தினகரன் விஷேட நிருபர்)

அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களுக்கு தென்னங் கன்றுகள் மற்றும் உபகரண பொருட்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று (07) சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் சப்ரகமுவ மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

தென்னை அபிவிருத்தி சபை மற்றும் ரணவிரு சேவை அதிகார சபை என்பன இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன. இதில், இராணுவ வீரர்களுக்கு தென்னை கன்றுகள் மற்றும் அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களுக்கு தேவையான உபகரண பொருட்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் சுனில் ஜயலத், மாகாண பிரதான அமைச்சின் செயலாளர் பிரபாத் உதாகர, மாகாண ஆளுநரின் இணைப்புச் செயலாளர் மஞ்சுலா இதிகாவெல, ரணவிரு சேவை அதிகார சபையின் உதவி பணிப்பாளர் ரோஹன விஜேரத்ன, இரத்தினபுரி மாவட்ட ரணவிரு அதிகாரி கயான் விஜேவிக்ரம உட்பட முக்கிய அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.



## ஊடகவியலாளர்களின் கொடுப்பனவை அதிகரிப்பதற்கு நகர சபை தீர்மானம்

(பலாங்கொடை தினகரன் நிருபர்)

ஊடகவியலாளர்களின் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கு, பலாங்கொடை நகரசபையின் புதிய தலைவர் தீர்மானித்துள்ளார். இதுகுறித்த தீர்மானத்தை அவர் சபையில் முன்மொழிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பலாங்கொடை நகரசபையில், மாதாந்த கூட்ட நிகழ்வுகளின் செய்திகளை சேகரிக்க வரும் ஊடகவியலாளர்களுக்கு 750/ ரூபா கொடுப்பனவாக வழங்கப்பட்டு வந்தது. இந்நிலையில், புதிய தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ள வஸந்த குணரத்ன இத்தொகையை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

பெப்ரவரி முதல் இந்த கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. நகர சபை உறுப்பினர்கள் அனைவரும் இந்த கொடுப்பனவை அதிகரிப்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர்.

## கோயில் உடைக்கப்பட்டு திருட்டு

(மஸ்கெலியா தினகரன் விஷேட நிருபர்)

நல்லதண்ணி பொலிஸ் பிரிவின் லக்ஷ்பான தோட்ட முள்ளுகாமம் கீழ் பிரிவிலுள்ள அம்மன் கோயில் உடைக்கப்பட்டு நகை, பணம் களவாடப்பட்டுள்ளது.

இதுகுறித்து, ஆலய பரிபாலன சபையினர் நல்லதண்ணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

இது குறித்து நல்லதண்ணி பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இச்சம்பவங்கள் குறித்து மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

## தம்பி தாக்கியதில் அண்ணன் பலி

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

அண்ணனை கூரிய வாள் மற்றும் கோடரியால் வெட்டிக் கொலை செய்த சம்பவம் எம்பிலிப்பிட்டிய பனாமுர பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. சிறுவன் ஒருவனை நாய் கடித்ததில் ஏற்பட்ட தகராறே, இவ்வாறு கொலையில் முடிந்துள்ளது.

இச்சம்பவத்தில் 27 வயதுடைய தம்பி, 41 வயதான தனது அண்ணனைக் கொலை செய்துள்ளார். இச்சம்பவம் (06) நடந்துள்ளதாக விசாரணைகளை நடத்தி வரும் எம்பிலிப்பிட்டிய மற்றும் பனாமுர பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவனை, நாய் கடித்ததால் ஆத்திரமடைந்த அண்ணன் தனது தம்பியின் மனைவியை தாக்கியுள்ளார். இதில், ஆத்திரமடைந்த தம்பி கூரிய ஆயுதத்தால் தனது அண்ணனைத் தாக்கியதால் அவர், உயிரிழந்தார்.

இச் சம்பவம் குறித்து பின்புலங்களை அறிந்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கு பக்கச்சார்பற்ற விசாரணைகள் முடக்கி விடப்பட்டுள்ளன.

## ரொத்தஸ் நீர்ப்பாசன வனபாதுகாப்பு பகுதிக்கு தீ வைப்பு; பல ஏக்கர் காடுகள் சேதம்

(ஹற்றன் விஷேட நிருபர்)

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹற்றன் ரொத்தஸ் நீர்ப்பாசன வனபாதுப்பு பிரிவுக்கு இனந்தெரியாத விஷமிகள் சிலர் தீ வைத்துள்ளனர். இதில், சுமார் 25 ஏக்கருக்கும் மேற்பட்ட வனப்பிரதேசம் எரிந்து நாசமாகியுள்ளது. இதையடுத்து, ரொத்தஸ் கொலனி மற்றும் மல்லியைப்பூ தோட்டத்தைச் சேர்ந்த மக்கள் இப்பகுதியிலிருந்து குடிநீரைப் பெறுவதில் பெரும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.நேற்றுமுன்தினம் (05) இந்த வனப்பகுதிக்கு தீ வைக்கப்பட்டுள்ளது.



மலையகத்தில் வரட்சியான காலநிலை நிலவும் இச்சந்தர்ப்பத்தில், வனப்பிரதேசங்களுக்கு தீ வைக்கும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன. இதனால் நீர் நிலைகள் வற்றிப்போகும் அபாயம் எதிர்நோக்கப்படுகிறது. பெறுமதிமிக்க மரக்கன்றுகள் சிறிய வகை உயிரினங்கள், மூலிகைச் செடிகள் ஆகியன அழிந்துள்ள துடன் விலங்குகள், பறவைகள் என்பனவும் நீரின்றி அலையும் நிலை ஏற்பட்டுள்ளது.பல நீரோடைகள், கால்வாய்கள் செல்வதனால் எதிர்காலத்தில் மகாவலி ஆற்றின் நீர் குறைவடையும் நிலை ஏற்படலாமெனவும் அஞ்சப்படுகிறது.

## நுவரெலியாவில் பனிப்பொழிவு; தொழிலாளர்கள் பெரும் அவதி

(நுவரெலியா தினகரன் நிருபர்)

நுவரெலியாவில் பனிப்பொழிவு அதிகரித்துக் காணப்படுகிறது. இதனால், புற்தரைகள், தேயிலைச் செடிகள், உருளைக்கிழங்கு மற்றும் மரக்கறித்தாவரங்கள் என்பன அதிகளவில் கருகிக் காணப்படுகின்றன.

மேலும் கடுங்குளிரான காலநிலை நிலவுவதால், கடமைக்குச் செல்வதில் தொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். நேற்று முன்தினம் (06) ஞாயிற்றுக்கிழமை மிகவும் குளிரான காலநிலை நிலவியது.

நுவரெலியாவில் கடந்த டிசெம்பரிலிருந்து இரவில் கடும் குளிரும் பகலில் வெப்பம் அதிகரித்தும் காணப்படுகிறது. இதனால் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.



## பள்ளிவாசலில் சுதந்திர தின விழா



பறகஹதெனிய பெரிய பள்ளிவாசல் நிர்வாகத்தினர் நாட்டின் 74 ஆவது சுதந்திர தினத்தை, பள்ளிவாசலில் கொண்டாடினர். தலைவர் அல்ஹாபிழ் எம்.எம். ஜெஸ்மின் ரஹ்மானி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், உள்நாட்டு இறைவரித் திணைக்களப் பணிப்பாளர் எம்.ஸ்.எம். நவாஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(படம்: மாவத்தகம தினகரன் நிருபர்)

## மத்திய மாகாணத்தில் சிறுநீரக நோயாளர்கள் அதிகரிப்பு

(தம்புள்ள தினகரன் நிருபர்)

மத்திய மாகாணத்தில் 2004ஆம் ஆண்டு முதல் 2019 வரையிலான காலப்பகுதியில் சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை நூற்றுக்கு 516வீதமாக அதிகரித்துள்ளதாக மத்திய மாகாண பிரதம செயலாளர் காமினி ராஜரத்ன தெரிவித்தார்.

மத்திய மாகாணத்தில் 7,763 சிறுநீரக நோயாளர்கள் இருப்பதாக 2004ஆம் ஆண்டு வெளியான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் தற்போது இதன் எண்ணிக்கை 47,891 ஆக அதிகரித்துள்ளதாகவும் காமினிராஜரத்ன தெரிவித்தார்.

கண்டி கிரேண்ட் கெண்டியன் ஹோட்டலில் இடம்பெற்ற நிகழ்வின் போது மேற்படி தகவல்களை செயலாளர் காமினி ராஜரத்னம் வெளியிட்டார்.

கண்டி மாவட்ட பிரதேச நோய்த் தடுப்புப் பிரிவின் வைத்திய நிபுணர் பஸன் ஜயசிங்ஹ உள்ளிட்ட வைத்திய குழுவினர் மேற்படி ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர். ஐரோப்பிய சங்கத்தின் "எட்ரா" நிறுவனத்தின் தலைமையில் செயற்படும் "எஸன்ட்" திட்டத்தின் ஊடாக இவ்வாய்வுக்காக நிதியுதவி வழங்கப்பட்டிருந்தது.

இங்கு பிரதம செயலாளர் தொடர்ந்து கூறுகையில், மத்திய மாகாணத்தில் 2004ஆம் ஆண்டு இனங்காணப்பட்ட சிறுநீரக நோயாளரின் எண்ணிக்கை 2010ஆம் ஆண்டாகும் போது 21,219 ஆக உயர்வடைந்தது. 2019 ஆம் ஆண்டு இந்த எண்ணிக்கை 47,891ஆக அதிகரித்தது. இது 516 வீத அதிகரிப்பாகும். அதிக எண்ணிக்கையான சிறுநீரக நோயாளர்கள் மாத்தளை வில்கமுவ பிரதேசத்திலேயே காணப்படுகின்றனர்.



நாட்டின் 74 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஏ,09 வீதி தொட்ட கமுக வயல்வெளி அருகில் மரக்கன்றுகள் நடப்பட்டன. இந்நிகழ்வில், மாவட்ட செயலாளர் தேஜானி திலகரத்ன, மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாலக்ககோட்டை கொட, மாவட்ட மேலதிக செயலாளர் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.(படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)

# சர்வதேச செய்திகள்

## 3.5 மில். மக்கள் வசிக்கும் சீன நகரில் பொதுமுடக்கம்



கடந்த மூன்று நாட்களில் 70க்கும் அதிகமான கொரோனா தொற்று சம்பவங்கள் பதிவானதை அடுத்து வியட்நாம் எல்லைக்கு அருகில் இருக்கும் 3.5 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட சீன நகர் ஒன்றில் நேற்று திங்கட்கிழமை தொடக்கம் முடக்க நிலை கொண்டு வரப்பட்டது.

கொவிட் தொற்றை முழுமையாக துடைத்தொழிக்கும் கொள்கையை பின்பற்றும் ஒரே உலகின் மிகப் பெரிய பொருளாதார நாடாக சீனா இருந்து வருகிறது. பீஜிங் குளிர்கால ஒலிம்பிக்கை ஒட்டி இந்த கட்டுப்பாடுகள் மேலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இந் நிலையில் தெற்கு குவான்சி பிராந்தியத்தின் பைஸ் நகரில் உள்ளவர்கள் நகரை விட்டு வெளியே செல்வது தடுக்கப்பட்டிருப்பதோடு சில மாவட்டங்களில் குடியிருப்பாளர்கள் தமது வீடுகளில் இருக்க உத்தர விடப்பட்டுள்ளது.

அந்த நகரில் உள்ளவர்களுக்கு ஏற்கனவே கொரோனா சோதனை மேற்கொள்ள ஆரம்பித்திருப்பதாக நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

## சீக்கிய பிரிவினைவாதிகள் சதித் திட்டம் முறியடிப்பு



ஜனவரி 26 ஆம் திகதி கொண்டாடப்பட்ட இந்தியாவின் 72 ஆவது குடியரசு தினத்திற்கு இடையூறு செய்யும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவைத் தளமாகக் கொண்ட சீக்கிய பிரிவினைவாதிகளின் திட்டம் தோல்வியடைந்துள்ளது.

கசாரி கலிஸ்தான் கொடியை ஏற்றுவது மற்றும் மோடியின் இந்திய கொடியை தடுப்பதற்கு 1 மில்லியன் டொலர் ஒதுக்கி இருப்பதாகவும் இந்திய தலைநகர் டெல்லியில் குடியரசு தினத்தை இலக்கு வைத்திருப்பதாகவும் இந்தக் குழு அறிவித்திருந்தது.

எனினும் இந்திய சட்ட அமுலாக்கல் நிறுவனம் சரியான நேரத்தில் செயற்பட்டது மற்றும் காலிஸ்தான் விவகாரத்தில் இந்தியாவுக்குள் போதிய ஆதரவு இல்லாததால் இந்தத் திட்டம் முறியடிக்கப்பட்டுள்ளது.

## ஆப்கானிஸ்தான் தூதரகம் இந்தியாவுக்கு வரவேற்பு



இந்தியாவில் உள்ள பல இராணுவ அகடமிகளிலும் அண்மையில் பட்டம் பெற்ற ஆப்கான் இராணுவ பயிற்சி மாணவர்களுக்கு ஆங்கில தொடர்பாடல் திறனை மேம்படுத்த இந்தியா முன் வந்திருப்பதை இந்தியாவில் உள்ள ஆப்கான் தூதரகம் வரவேற்றுள்ளது.

இவ்வாறு 80 மாணவர்களுக்கு 12 மாத பயிற்சியை வழங்க இந்திய அரசு முன்வந்துள்ளது. இந்த இளம் பயிற்சி மாணவர்கள் இந்தியாவில் மூன்று வெவ்வேறு நிறுவனங்களில் பயிற்சி வழங்கப்படவிருப்பதோடு அவர்களுக்கான தங்குமிட வசதி மற்றும் மாதாந்த கொடுப்பனவும் வழங்கப்படவிருப்பதாக ஆப்கான் தூதரகம் தெரிவித்துள்ளது.

## ஆப்கானிலிருந்து தாக்குதல்: ஐந்து பாக். துருப்புகள் பலி



அண்டை நாடான ஆப்கானிஸ்தானில் இருந்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் குறைந்தது ஐந்து பாகிஸ்தான் படையினர் கொல்லப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதலுக்கு பாகிஸ்தான் தலிபான்கள் பொறுப்பேற்றுள்ளனர்.

கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் குர்ராம் மாவட்டத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

நாட்டின் தென்மேற்கில் பலொக் பிரிவினைவாதிகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் ஒன்பது பாகிஸ்தான் துருப்புகள் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு சில நாட்களின் பின்னரே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

ஆப்கானிஸ்தானில் கடந்த ஒகஸ்ட் மாதம் ஆட்சியை கைப்பற்றிய தலிபான்கள் நாட்டில் பயங்கரவாதக் குழுக்கள் இயங்க அனுமதிப்பதில்லை என்று உறுதி அளித்தபோதும், எல்லைகளில் பாக். தலிபான்கள் தொடர்ந்து இயங்கி வருகின்றனர். பாக். மற்றும் ஆப்கான் தலிபான்கள் வெவ்வேறு குழுக்களாக இயங்குகின் ற போதும் பொதுவான சிந்தனையை கொண்டுள்ளனர்.

## கனடாவில் ஆர்ப்பாட்டத்தை கடுப்படுத்த நெருக்கடிநிலை



கனடியத் தலைநகர் ஒட்டாவாவில் கொவிட்–19 கட்டுப்பாடுகளை எதிர்த்து நடந்த ஆர்ப்பாட்டங்களால் தேசிய அளவில் நெருக்கடிநிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் உயர் நிலையிலிருந்து ஆதரவுபெற நெருக்கடி நிலை அவசியம் என்று மேயர் ஜிம் வொட்சன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க–கனடிய எல்லையைக் கடக்கும் கனரக வாகன ஓட்டுநர்கள் தடுப்பூசி போட்டுக்கொள்வது கட்டாயம் என்ற விதிக்கு எதிராகப் போராட்டம் நடத்தப்படுகிறது. கனரக வாகன ஓட்டுநர்கள் தங்களின் வாகனங்களை வீதிகளில் நிறுத்திக் கூடாரமிட்டுள்ளனர்.

பொதுச் சுகாதார விதிகளுக்கும் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அரசாங்கத்திற்கும் எதிரான போராட்டமாகவும் அது உருவெடுத்துள்ளது.

தடுப்பூசி, முகக்கவசம் ஆகியவற்றை கட்டாயம் என்ற விதிமுறைகளை எதிர்த்து ஆயிரக்கணக்கானோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# உக்ரைன் பதற்றத்தை தணிக்க இராஜதந்திர முயற்சிகள் தீவிரம்



உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையே போர் சூழல் அதிகரித்திருக்கும் நிலையில் இராஜதந்திர நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. பிரான்ஸ் மற்றும் ரஷ்ய ஜனாதிபதிகள் நேற்று திங்கட்கிழமை மொஸ்கோவில் பேச்சுவார்த்தை நடத்தியதோடு, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் ஜெர்மனி பிரதமர் ஒலாப் ஸ்கோல்ஸ் வெள்ளை மாளிகையில் நேற்று சந்தித்தனர்.

மறுபுறம் ஜெர்மனி, செக் குடியரசு, சுலோவாக்கியா மற்றும் ஆஸ்திரிய வெளியுறவு அமைச்சர்கள் உக்ரைனில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

உக்ரைன் நாட்டு எல்லைக்கு அருகில் ரஷ்யா 110,000 துருப்புகளை குவித்திருப்பதாக அமெரிக்கா கூறுகிறது.

பெப்ரவரி நடுப்பகுதியில் முழு அளவிலான ஆக்கிரமிப்பு ஒன்றை நடத்த 150,000 அளவு படைகளை குவித்து வருவதாக அமெரிக்க அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த அளவான படைகள் உக்ரைன் தலைநகர் கீவை 48 மணி நேரத்திற்குள் கைப்பற்ற போதுமானது என்றும் இந்த மோதல் 50,000 பேர் வரை உயிரிழக்கக் காரணமாகக் கூடும் என்றும் அந்த அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். புலனாய்வு தகவல்களை அடிப்படையாகக் கொண்டே அமெரிக்க அதிகாரிகள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை சுழற்சி முறையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தற்போதைய தலைமையை ஏற்றிருக்கும் பிரான்ஸ் ஜனாதிபதி எமானுவேல் மெக்ரொன் நேற்று ரஷ்யாவை சென்றடைந்தார். அவர் இன்று உக்ரைன் பயணிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது தற்போது ஸ்தம்பித்திருக்கும் கிழக்கு உக்ரைனில் ரஷ்யா ஆதரவு பிரிவினைவாதிகள் மற்றும் உக்ரைனுக்கு இடையிலான அமைதிப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிக்கும் முயற்சியிலும் மெக்ரோன் ஈடுபடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை அமெரிக்கா சென்றிருக்கும் ஜெர்மனி பிரதமர் வொசிங்டன் போஸ்ட் பத்திரிகைக்கு கூறும்போது, 'உக்ரைனில் தலையிட்டால் அதிக விலை கொடுக்க வேண்டி இருக்கும் என்ற தெளிவான செய்தியை ரஷ்யாவுக்கு வழங்க நாம் கடுமையாக செயற்பட்டு வருகிறோம்' என்றார்.

பதற்றத்தை தணிக்க உக்ரைன் நேட்டோ கூட்டணியில் இணைவதில்லை என்ற உறுதி மற்றும் கிழக்கு ஐரோப்பாவின் அங்கத்துவ நாடுகளில் இருந்து நேட்டோ படைகளை வாபஸ் பெற வேண்டும் என்ற கோரிக்கையை ரஷ்யா முன்வைத்துள்ளது. எனினும் இந்தக் கோரிக்கைகளை அமெரிக்க மற்றும் நோட்டோ நிராகரித்துள்ளன.

## அமெரிக்கப் படையினர் போலந்து சென்றடைவு



கிழக்கு ஐரோப்பாவில் நேட்டோ கூட்டணியை வலுப்படுத்த அமெரிக்கப் படையினர் போலந்து சென்று சேர்ந்துள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அனுப்பி வைத்த கூடுதல் 3,000 துருப்பினரும் அவர்களில் அடங்குவர்.

ரஷ்யா, உக்ரைனை ஆக்கிரமிக்கக் கூடும் என்ற பதற்றம் அதிகரித்துள்ள சூழலில், அமெரிக்கப் படையினர் அங்கு சென்றுள்ளனர். போலந்தின் தென் கிழக்கே அமெரிக்கத் துருப்பினர் 1,700 பேர் செயல்பட முடியும்.

ரஷ்யா உக்ரைனை ஆக்கிரமித்தால் அவர்கள் சண்டையிட மாட்டார்கள். நேட்டோ வட்டாரத்தைப் பாதுகாக்கவே அவர்கள் அங்கிருக்கின்றனர் என்று அமெரிக்கத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் ஜக் சொலிவான் கூறினார்.

அண்டை நாடு தொடர்பில் ரஷ்யா மேற்கொள்ளச் சாத்தியமுள்ள எந்த நடவடிக்கையையும் அமெரிக்கா நிராகரிக்கவில்லை.

இணையத் தாக்குதல் உள்ளிட்ட வேறு வடிவங்களில் ரஷ்யாவின் நடவடிக்கை அமையக்கூடும் என்று சொலிவான் கூறினார்.

## மியன்மாரில் பல நூறு வீடுகளுக்குத் தீவைப்பு



மியன்மாரின் வடமேற்கு வட்டாரத்தில் நூற்றுக்கணக்கான வீடுகளை இராணுவம் எரித்து விட்டதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

எதிர்ப்பாளர்களை ஒடுக்க, இராணுவம் அவ்வாறு செய்ததாக கிராம மக்களும், இராணுவ எதிர்ப்புக் கிளர்ச்சியாளர்களும் சாடுகின்றனர்.

கடந்த வாரம் திங்கட்கிழமை, சாகைங் வட்டாரத்தில் உள்ள சுமார் 200 வீடுகளை இராணுவத்தினர் கொளுத்தியதாகத் தெரியவந்துள்ளது. அருகிலுள்ள வேறொரு கிராமத்தில் எதிர்தரப்புக் கிளர்ச்சியாளர்களைத் தேடும்போது, 600 வீடுகளுக்கு மியன்மார் இராணுவத்தினர் தீவைத்ததாகச் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனால் பல்லாயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்தனர். அவர்களுக்கு அடிப்படை உணவும், மருத்துவக் கவனிப்பும் கிடைக்கவில்லை என்று கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி மியன்மார் இராணுவம், அதிகாரத்தை கைப்பற்றியது. அதன் ஓராண்டு நிறைவுக்கு முதல் நாள் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிகிறது.

## சர்வதேச பயணிகளுக்கு ஆஸி. எல்லை திறப்பு



தடுப்பூசி பெற்ற சுற்றலா பயணிகள் மற்றும் ஏனைய விசா வைத்திருப்பவர்களுக்கு கடந்த இரண்டு அண்டுகளில் முதல் முறை அவுஸ்திரேலியா தனது எல்லைகளை மீண்டும் திறக்கவுள்ளது.

'நீங்கள் இரு முறை தடுப்பூசி பெற்றவராக இருந்தால், உங்களை வரவேற்க நாம் எதிபார்த்துள்ளோம்' என்று அவுஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மொரிசன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கல்வித்துறை உட்பட பல துறைகளுக்காகவும் வரும் பெப்ரவரி 21 ஆம் திகதி எல்லைகளை திறக்கும் அறிவிப்பை அவுஸ்திரேலியா வெளியிட்டுள்ளது.

கொரோனா பெருந்தொற்று காலத்தில் கடுமையான எல்லை கட்டுப்பாடுகளை அமுல்படுத்திய நாடுகளில் ஒன்றாக அவுஸ்திரேலியா இருந்து வந்தது.

## பஸ் பள்ளத்தில் விழுந்து 13 பேர் பலி: பலர் காயம்



இந்தோனேசியாவின் ஜாவா தீவில் தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச் சென்ற சுற்றுலா பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் குறைந்தது 13 பேர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

குடும்ப ஒன்றுகூடல் ஒன்றுக்காக மத்திய ஜாவாவில் சுகோஹர்ஜோவில் இருந்து யொலபயகார்டா மாகாணத்தை நோக்கி 47 பயணிகளுடன் புறப்பட்ட இந்த பஸ் கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தில் விழுந்திருப்பதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த பஸ்ஸின் முன் பாகம் சேதமடைந்திருப்பதோடு உயிரிழந்தவர்களில் ஓட்டுநரும் உள்ளார். இதில் மேலும் 34 பேர் காயமடைந்துள்ளனர். ஓட்டுநர் பதற்றம் அடைந்து கியர் கம்பியை கையாள முயற்சித்ததாகவும் அது பிரேக் இயங்கவில்லை அல்லது அது கோளாறுக்கு உள்ளாகி இருப்பதை காட்டுவதாகவும் வாகனத்தில் இருந்தவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## இந்தோனேசிய தலைநகரில் விமான பயணிகளுக்கு தடை

இந்தோனேசியத் தலைநகர் ஜக்கர்த்தா விமான நிலையம் வழியாக வெளிநாட்டுச் சுற்றுப்பயணிகள் நுழைவதற்குத் தற்காலிகமாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடுமையாகி வரும் ஓமிக்ரோன் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த எடுக்கப்படும் முயற்சி என்று அந்நாட்டின் போக்குவரத்து அமைச்சு தெரிவித்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தோனேசியாவில் 36 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்குக் வைரஸ் தொற்று உறுதியானது.

நோய்த் தொற்றுக்காக மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை 63 வீதத்தை எட்டியுள்ளது.

ஈராண்டுகளுக்குப் பின்னர் முதல் சர்வதேச விமானச் சேவை பாலி விமான நிலையத்தில் சில நாட்களுக்கு முன்னரே மீண்டும் செயல்பட ஆரம்பித்தது.

புதிய விதிமுறைகள் வெளிநாடுகளுக்குச் சென்றிருந்த சுற்றுப்பயணிகளுக்கும் இந்தோனேசியர்களுக்கும் பொருந்தும்.

வெளிநாட்டிலிருந்து வருவோர் பாலி விமான நிலையம், பாத்தாம், தஞ்சோங் பினாங் முனையங்கள் ஆகியவற்றின் மூலம் இந்தோனேசியாவுக்குச் செல்லமுடியும்.

## துனீசியாவில் அரசியல் பற்றம்



துனீஷிய ஜனாதிபதி கயிஸ் செயிதினால் கலைக்கப்பட்ட அந்நாட்டின் உச்ச நீதிக் குழு இயங்க முடியாத வகையில் அந்தக் கட்டடத்தை பொலிஸார் மூடியுள்ளனர்.

ஜனாதிபதியின் இந்த முடிவை துனீசிய நீதிபதிகள் நிராகரித்த நிலையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த முடிவு நாட்டை சர்வாதிகார ஆட்சிக்கு இட்டுச் செல்லும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் அதிகாரத்திற்கு அப்பால் இயங்கிய ஒரு சில அமைப்புகளில் ஒன்றாகவே உச்ச நீதிக் குழு இருந்து வந்தது. எனினும் இந்தக் குழு பக்கச்சார்பாக செயற்படுவதாக ஜனாதிபதி குற்றம்சாட்டியுள்ளார்.

'நிறுவனங்களை கைப்பற்றும் நடவடிக்கையில் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளார். இது ஆபத்தானது மற்றும் சட்டவிரோதமானது' என்று உச்ச நீதிக் குழுவின் தலைவர் யூசுப் பவுசக்கர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயித் கடந்த ஆண்டு ஜூலையில் பிரதமரை பதவி நீக்கி பாராளுமன்றத்தை முடக்கி தனது அதிகாரத்தை பலப்படுத்தியுள்ளார்.

# அறிவித்தல்

**கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு**

## தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை

**மொரட்டுவ - சொய்சாபுர புதிய வீடமைப்புத் திட்டம்**

**மரதகஹமுல - வெவேகொடெல்ல வீடமைப்புத் திட்டம்**

## வீட்டு அலகுகளை விற்பனை செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரல்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் செயற்படுத்தப்படும் மத்திய வகுப்பு மற்றும் சியபத நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும் பின்வரும் மாடி வீட்டுத் திட்டங்களில் உள்ள வீட்டு அலகுகளை விற்பனை செய்வதற்காக விண்ணப்பப்படிவங்கள் வழங்குதல் 2022-02-10ஆம் திகதி முதல் 2022-03-10ஆம் திகதி வரையில் பின்வரும் அலுவலகங்களில் மேற்கொள்ளப்படும். வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் மீளளிக்கப்படாத 2000.00 ரூபாவைச் செலுத்தி இயைபுடைய மாவட்ட அலுவலகங்களில் அல்லது தலைமை அலுவலகத்திலிருந்து விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| மாவட்டம் | வீடமைப்புத் திட்டம் | அளவு (சதுர அடி) | பெறுமதி (திருத்தங்களுக்கு உட்பட்டது) ரூபா மில்லியன் |
|---|---|---|---|
| கொழும்பு | சொய்சாபுர வீடமைப்புத் திட்டம் (மத்திய வகுப்பு வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம்) | 550 | 7.56 |
| கம்பஹா | மரதகஹமுல வெவேகொடெல்ல வீடமைப்புத் திட்டம் (சியபத வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம்) | 650 | 6.90 |
| | | 845 | 8.90 |

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை இயைபுடைய ஆவணங்கள் சகிதம் 2022-03-24ஆம் திகதி வரை அந்த அலுவலகங்களுக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "செய்சாபுர வீடமைப்புத் திட்டத்தில் வீட்டு அலகைக் கொள்வனவு செய்தல்" அல்லது "மரதகஹமுல வெவேகொடெல்ல வீடமைப்புத் திட்டத்தில் வீட்டு அலகைக் கொள்வனவு செய்தல்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். பயனாளிகளைத் தெரிவு செய்யும் தீர்மானம் நேர்முகத் தேர்வுக் குழுவின் இறுதித் தீர்மானமாகும். (வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் வேறு வீடமைப்புத் திட்டங்களின் வீட்டு அலகுகளுக்கு விண்ணப்பிப்பதற்கு செல்லுபடியாகாது) கம்பஹா மாவட்டத்தின் மரதகஹமுல வெவேகொடெல்ல விண்ணப்பப்படிவங்களை தலைமை அலுவலகம் மற்றும் கம்பஹா மாவட்ட அலுவலகத்தில் ஒப்படைக்கலாம் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பலாம். கொழும்பு மாவட்டத்தின் சொய்சாபுர விண்ணப்பப் படிவங்களை தலைமை அலுவலகம் மற்றும் கொழும்பு மாவட்ட அலுவலகத்தில் ஒப்படைக்கலாம் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பலாம்.

விசாரணைகள் - விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளல் - மீண்டும் ஒப்படைத்தல் மற்றும் விசாரணைகள்

| தலைமை அலுவலகம் | மாவட்ட அலுவலகம் | மாவட்ட அலுவலகம் |
|---|---|---|
| பிரதிப் பொது முகாமையாளர் (ஆதன முகாமைத்துவம்), ஆதன முகாமைத்துவப் பிரிவு, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, த.பெ. 1826, கொழும்பு 02. தொலைபேசி இல. 0112389507 | மாவட்ட முகாமையாளர் (கொழும்பு மாவட்டம்), தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, கொட்டாவ. தொலைபேசி: 0112178226 | மாவட்ட முகாமையாளர் (கம்பஹா மாவட்டம்), தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, கம்பஹா. தொலைபேசி: 033-2226017 |

**தலைவர்**
**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை,**
**சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**த.பெ. 1826, கொழும்பு-02.**

## மீட்கப்படாத அடகுத் தங்க நகைகளை ஏலத்தில் விற்றல்

வ/ப இலங்கை கூட்டுறவு கிராமிய வங்கி மகா சங்கத்தின் அடகுப் பிரதிநிதிகளான வரையறுக்கப்பட்ட தெஹிவினிபலாத்த கூட்டுறவு கிராமிய வங்கியினால் 2020.09.30 ஆம் திகதி உட்பட அத்தினம் வரை தம்மிடம் அடகு வைக்கப்பட்டு, 2022.02.19ஆம் திகதி வரை மீட்கப்படாத தங்க நகைகள் 2022.02.20, 21 ஆம் திகதிகளில் மு.ப.9.30 இற்கு எடம்பிட்டிய, பதுளை வீதியில் அமைந்துள்ள கிராமிய வங்கி சங்க கட்டிடத்தின் மேல் மாடியில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

**நம்பிக்கைக்குரிய கௌரவ தலைவர்**
**வ/ப - தெஹிவினிபலாத்த கூட்டுறவு கிராமிய வங்கிச் சங்கம்**
**பதுளை வீதி, எடம்பிட்டிய.**

BE BETTER INFORMED!




News you can trust now free on your mobile phone.

VISIT
apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

AVAILABLE AT

LAKE HOUSE

# இலங்கை வங்கி

## விலை கோரல் (IFB)

## இலங்கை வங்கி காலி நகர மேற்தரக் கிளை 1இற்கான புதிய கிளை அலுவலகக் கட்டடம் ஒன்றை நிர்மாணித்தல்

### கேள்வி இல. BOC/PROP/P/2021/158

1. இலங்கை வங்கி சார்பாக, இலங்கை வங்கி தொகுதி பெறுகைக் குழுவின் தலைவரிடமிருந்து இலங்கை வங்கி காலி நகர மேற்தரக் கிளை 1இற்கான புதிய கிளை அலுவலகக் கட்டடம் ஒன்றை கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் புதிதாக நிர்மாணிப்பதற்குத் தகுதியான நபர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட ஏலவிலைகள் கோரப்படுவதுடன் இதற்கு ரூபா. 163 மில்லியன் (VAT இன்றி) செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

   கட்டட வேலையானது மூன்று மாடி அலுவலகக் கட்டம் மற்றும் முகாமையாளரின் வதிவிடத்தை (அண்ணளவாக 13,750 சதுர அடி) புதிதாக நிர்மாணிப்பதுடன் தரைத் தள வாகனத் தரிப்பிடம், அலுவலக பகுதிகள், வங்கிப் பிரிவுகள் மற்றும் சேவை நிலையம் போன்றவற்றை உள்ளடக்கியிருக்கும். கட்டடமானது வலுவூட்டப்பட்ட ஆழ்துளைத் தூண்கள் (இலத்திரனியற் தூண் இயந்திரத்தைப் பயன்படுத்தி), வலுவூட்டப்பட்ட கொங்றீற் அமைப்பு, கற் சுவர்கள், அலுமினியக் கதவுகள் மற்றும் ஜன்னல்கள், தரை, சுவர் மற்றும் சீலிங்குகள், நீர்க்குழாய் பொருத்தல்கள், மின்சார வசதி, வளிச் சீராக்கிகள், தீப் பாதுகாப்பு போன்றவற்றை உள்ளடக்கியிருக்கும். இக் கட்டடத்திற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பசுமைச் சான்றிதழானது பெற எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வகையான அரசாங்க நிறுவனங்களின் அறிவுறுத்துதல்கள் மற்றும் CIDAவினால் வழங்கப்பட்டுள்ள சுகாதார அறிவுறுத்துதல்களைப் பின்பற்றுவது அத்தியாவசியமானதாகும்.

   இடமானது காலி நகர எல்லையினுள் அமைந்துள்ளது.

   இவ்வேலைகளை பூர்த்திசெய்வதற்க்கான காலம் ஆரம்பத் திகதி தொடக்கம் 539 நாட்காட்டி நாட்கள் ஆகும்.

2. தேசிய போட்டிக்கார ஏலவிலை நடைமுறைக்கமைய (NCB) ஏலவிலை கூறல்கள் மேற்கொள்ளப்படும்

3. ஒப்பந்தத்தை வழங்குவதற்குத் தகைமை பெறுபவர் புறக்கணிக்கப்பட்ட பெயர்ப்பட்டியலில் காணப்படாதிருக்க வேண்டியதுடன் கீழ்க் காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
   நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் (CIDA) கட்டட நிர்மாண வேலைத்துறையில் தரம் C2 அல்லது C3 மட்டத்தில் பதிவுசெய்யப்படிருக்க வேண்டும்.

4. ஒப்பந்தத்தை வழங்க தகைமை பெறுவதற்கு பூர்த்தி செய்ய வேண்டிய கட்டாயத் தேவைப்பாடுகள்
   i. கடந்த ஐந்து வருட காலத்தினுள் குறைந்தது ரூபா 163 மில்லியன் சராசரி வருடாந்தப் பணப் புரள்வுடைய நிர்மாண வேலையை நிறைவேற்றியிருத்தல்.
   ii. பிரதான ஒப்பந்தக்காரராக கடந்த ஐந்து வருட காலத்தினுள் ரூபா 130 மில்லியன் பெறுமதியுடைய கட்டடமொன்றை குறிப்பிட்ட நாட்களுக்குள் அல்லது அதற்கு அதிகமான பெறுமதியுடைய குறிப்பிடப்பட்ட கட்டட வேலையை ஒத்ததும் சிக்கலான அமைப்புடையதுமான கட்டட வேலைகளை 539 நாட்களுக்குள் பூர்த்திசெய்திருக்க வேண்டும். அல்லது இதனைவிடப் பெரிய கருத்திட்டமொன்றை அதற்குரிய காலப்பகுதியினுள் முடித்திருக்க வேண்டும்.
   iii. திரவநிலை சொத்துக்கள் அல்லது சிறப்பாகக் கட்டுமானத் திட்டத்துக்கென்றே வழங்கப்படும் சுழற்சி முறைக் கடன்கள் (வேறு ஒப்பந்த பொறுப்புகளுக்கு ஒதுக்கிய பின்பு) மற்றும் இவ் ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ள உள்ள எவையேனும் முற்பணக் கொடுப்பனவு தவிர்த்து ரூபா. 27.2 மில்லியனை விடக் குறைவாகக் காணப்படலாகாது

5. இவ்விலை கூறலில் பங்குகொள்ள ஆர்வமுடையோர் கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்", 14ஆம் தளம், சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி, பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் (தொலைபேசி இல. 011-2544310, 011-2204260 தொலைநகல் 011-2449629 மின்னஞ்சல் முகவரி : procurement@boc.lk) மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். விலைகூறல் ஆவணங்களை பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் (சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி) 2022.02.08 ஆம் திகதி தொடக்கம் 2022.03.02 ஆம் திகதி வரை வேலை நாட்களில் 0900 மணி முதல் 1430 மணிவரை இலவசமாகப் பார்வையிடலாம்.

6. விலைகூறல்களை தெரிவிக்க ஆர்வமுடையோர் ஆங்கில மொழியிலான விலைகூறல் ஆவணத்தொகுதியை திருப்பிச் செலுத்தாக் கட்டணம் ரூபா. 27,000/- (VAT உடன்) (ரூபா. 25,000.00 + 2,000.00 VAT) மாத்திரம் 2022.02.08 தொடக்கம் 2022.02.28 வரை எவையேனும் வேலை நாட்களில் 0900 மணி முதல் 1430 மணிவரை மேலே குறிப்பிடப்பட்ட முகவரியில் சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி, பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் எழுத்து மூலமான விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை பணமாகும்.

7. நகலுடனான முத்திரையிட்ட விலைகூறல்களின் இடப்பக்க மேல் மூலையில் "இலங்கை வங்கி காலி நகர மேற்தரக் கிளை 1இற்கான புதிய கிளை அலுவலகக் கட்டடம் ஒன்றை நிர்மாணித்தல்" எனக் குறிப்பிட்டு அதனை 2022.03.02 திகதி 1000 மணிக்கு அல்லது அதற்கு முன் கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல.01, "BOC சதுக்கம்", தரைத் தளத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இட வேண்டும் அல்லது மேலே குறிப்பிடப்பட்ட முகவரியில் உள்ள பிரதான முகாமையாளருக்கு (சொத்துக்கள் மற்றும் சேகரிப்பும்) பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும். தாமதித்து கிடைக்கும் விலைகூறல்கள் திறக்காது திருப்பி அனுப்பப்படும். விலை கூறல்கள் முடிவடைந்ததும் விலைகூறல்களை விலைகூறுவோர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் விலைகூறல்கள் திறக்கப்படும்.

8. ஏலவிலை கூறல்கள் 2022.06.01 வரை செல்லுபடியாகும்.

9. பூரணப்படுத்தப்பட்ட ஏலவிலை கூறல்களானவை 152 ஆம் பக்கத்தில் உள்ள (விலைகூறல்) நியமப் படிவங்களில் காணப்படும் பிணைமுறிப் படிவத்தைப் பயன்படுத்தி இலங்கை வங்கி தவிர்ந்த இலங்கையில் செயற்படும் வேறொரு உரிமம் பெற்ற வணிக வங்கியிடமிருந்து மாத்திரம் வங்கி உத்தரவாதத்தின் வடிவில் பெற்ற ரூபா 1,630,000/- பெறுமதியான (மாற்றமுடியாத, நிபந்தனையற்ற, தேவையின்போதான) விலைகூறல் பிணை முறியுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். விலைகூறல் பிணைமுறிக்குப் பதிலாக பணவைப்பு ரசீது / வங்கிக் காசோலை ஏற்றுக்கொள்ளப்படும். பிணை முறியானது 2022.06.29 ஆம் திகதி வரை செல்லுபடியாக வேண்டும்.

10. முன்கூட்டிய ஏல விலை கூறல் கூட்டம் 2022.02.18 திகதி 1030 மணிக்கு இலங்கை வங்கியின் காலி நகர மேற்தரக் கிளையில் இடத்தினைப் பார்வையிட்டதன் பின்னர் இடம்பெறும்.

11. 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கப் பொது ஒப்பந்தச் சட்டத்தில் அல்லது அதன் திருத்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய விலைகூறலுடன் PCA3 படிவத்தையும் இணைத்து அனுப்புதல் வேண்டும். PCA3 படிவத்துடன் அனுப்பப்படாத ஏலவிலை கூறல்கள் நிராகரிக்கப்படும்.

தலைவர்
நிறைவேற்றுச் சேகரிப்புக் குழு,
இலங்கை வங்கி,
இல 01, "BOC சதுக்கம்",
இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 01.

www.boc.lk

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

## தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை

### பெறுகை அறிவித்தல்

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபைக்குரித்தான பண்ணைகளுக்கு தயாரிக்கப்பட்ட மாட்டுத் தீவனங்களை வழங்குவதற்காக 1986ஆம் வருட 15ஆம் இலக்க விலங்குணவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட விலங்குணவு உற்பத்தியாளர்களிடமிருந்து பின்வரும் காலஎல்லைக்கு இயைபாக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. வர்த்தக கோழி உணவு - 2022 மார்ச் 07ஆம் திகதி முதல் 2022 ஜுலை மாதம் 30ஆம் திகதி வரை

| பண்ணை | விலங்குணவு வகைகள் | தேவையான அளவு | விலைக்கோரல் பிணை முறி (ரூபா) |
|---|---|---|---|
| கல்பொக்குண, சிரிங்கபாத, மெல்சிரிபுர, மஹபேரியதென்ன, ஹாரகம, நிகவெரடிய, M.L.D.C | வர்த்தக முட்டையிடும் கோழிகளுக்கான உணவு (Commercial Layer Feed) | 258.7 | 210,889.00 |
| | வர்த்தக புறொயிலர் கோழிகளுக்கான உணவு (Commercial Broiler Feed) | 67.61 | 67,165.00 |

தேவையான விலங்குணவு அளவு, விபரக்குறிப்புகள் (Specifications) மற்றும் நிபந்தனைகளை உள்ளடக்கிய விலைமனுப் படிவங்களை கடமை (வேலை செய்யும்) பின்வரும் முகவரியிலுள்ள தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் வழங்கல் முகாமையாளருக்கு வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம். ஒரு விலைமனுப் படிவத்திற்கு 1,000.00 ரூபா வீதம் மீளளிக்கப்படாத வைப்பொன்று அறவிடப்படும்.

2022 பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி பி.ப. 3.30 மணி வரை விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் என்பதுடன் 2022 பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவுறும் என்பதுடன் அந்நேரத்திற்கு பின் கொழும்பு 05, நாவல வீதி, நாராஹென்பிட்டி, 40ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை,**
**இல. 40, நாவல வீதி, நாராஹென்பிட்டி, கொழும்பு 05.**
**தொ.பே. இல. 011 2501701/2, 011 5746308**

சிறு விளம்பரம்

வேலைவாய்ப்பு

320

வெற்றிடங்கள்
ஹோட்டல்கள், பேக்கரிகள்

கொழும்பு உணவகமொன்றிற்கு ஆண்/ பெண் ஊழியர்கள் தேவை. மாத சம்பளம் ரூபா 55000/ பெண் ஊழியர்களுக்கு உணவுடன் நாள் சம்பளம் ரூபா 1300/ உணவு பென்றிக்கு ரூபா 2000/ சமையலறை உதவி யாளர்களுக்கு ரூபா 2000/ டீமேக்கர் 2300/ சிற்றுண்டி பாஸ்மார் ரூபா 4000/ தங்குமிட வசதி ஆண் ஊழியர்களுக்கு மாத்திரம் 071 4388828 008185

## பெறுகை அறிவித்தல்

## மாவட்ட பொது வைத்தியசாலை - மொனராகலை

01. மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையின் பிராந்தியப் பெறுகைக் குழுவின் தலைவரினால், பின்வரும் சிற்றுண்டிச் சாலைக்காக தேசிய சிற்றுண்டிச்சாலை நடைமுறைப்படுத்துநர்களிடமிருந்து 2022.02.28 அன்று பி.ப. 2.30 வரை முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| கோவை இலக்கம் | அலுவலகத்தின் பெயர் | மீளளிக்கப்படாத விலைமனுப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் விலைமனுப் பிணைத் தொகை ரூபா |
|---|---|---|---|
| DGH/MO/05/ சிற்றுண்டிச்சாலை | மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலை சேவையை வழங்குதல் | 2500.00 | 10,000.00 |

விலைமனுதாரரொருவரின் சார்பாக முன்வரும், தகவுத்திறன் கொண்ட முகவரொருவர் அல்லது நியமிக்கப்பட்ட முகவரொருவரினால் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளும் முழுமையான விலைமனுப்படிவத் தொகுதியொன்றின் மூலம், முத்திரையிடப்பட்ட விலைமனுச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

i. மாவட்ட பொது வைத்தியசாலை - மொனராகலை மருத்துவ அத்தியட்சகருக்கு எழுத்துருவ விண்ணப்பமொன்று.
ii. மாவட்ட பொது வைத்தியசாலை, மொனராகலை, மருத்துவ அத்தியட்சகருக்குச் செலுத்தப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனுப் படிவக்கட்டணம் தொடர்பாக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு
iii. மீளளிக்கப்படும் விலைமனுப் பிணையத்திற்கான வங்கி வரைவு, அல்லது பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச் சீட்டு விலைமனுக்களுடன் இணைக்கப்படல் வேண்டும். (மீளளிக்கப்படும் பற்றுச்சீட்டு)

2. இவ் வைத்தியசாலையில் பெற்றுக்கொள்ளும் படிவங்களில் மாத்திரம் விலைமனுச் சமர்ப்பித்தல் வேண்டும். வேறு விதமான படிவங்களில் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
3. வைத்தியசாலையின் தாபனப் பிரிவில், விலைமனுப்படிவங்களை இலவசமாகப் பரிசீலனை செய்து கொள்ளலாம்.
4. 2022.02.08 முதல் 2022.02.27 வரையான காலப் பகுதியில் வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 02.30 அலுவலக நேரங்களில் விலைமனுப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
5. விலைமனுக்கள், 'தலைவர், பிராந்தியப் பெறுகைக் குழு, மாவட்ட பொது வைத்தியசாலை, மொனராகலை' என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல், அல்லது வைத்தியசாலையின் பெறுகைப் பெட்டியில் நேரடியாகச் சேர்த்தல் வேண்டும். 2022.02.28 அன்று பி.ப. 02.30 இற்கு விலைமனுக்கள் மூடப்பட்டு அன்றைய தினம் பி.ப. 2.30 இற்கு பொது வைத்தியசாலையின் மாநாட்டு மண்டபத்தில் விலைமனுத் திறக்கப்படுவதுடன், விலைமனு அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் அவ்வேளையில் சமுகமளித்திருக்கலாம்.
6. ஏதேனும் விலைமனுவொன்றை அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிக்கும் அல்லது அதன் பகுதியொன்றை ஏற்றுக்கொள்ளும் உரிமை பெறுகைக்குழுவின் தலைவருக்கு உரித்தாகும்.
7. அரச ஒப்பந்தங்களை மீறியமைக்காக அபகீர்த்தியானோர் பட்டியல் (Black List) படுத்தப்பட்டவர்களுக்கு விலைமனுப்படிவங்கள் (ஆவணங்கள்) வழங்கப்படமாட்டாது.

**தலைவர்**
**பிராந்தியப் பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை, மொனராகலை.**

**விசாரணைகள்- கணக்காளர்**
**055 2276261/ 0552277024**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

The Housewives' companion
Classifieds on
Daily News

## 1964 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட இல.28 இன் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு எண் : **திபிராலே/1/8/3/74**

இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருவதாவது 21.02.2022 ஆம் திகதி பிரதேச செயலாளர் திம்பிரிகஸ்யாயவில் உள்ள கீழ்வரும் காணிகளின் உரிமம் மற்றும் நஷ்டஈட்டு விசாரணைகள் காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 09 இன் கீழ் அதனுடன் சம்பந்தப்பட்ட அரச உரிமத்தின் கீழ் என்னால் நடத்தப்படும் என்பதை தெரிவிப்பதுடன் அக்காணியில் யாருக்காவது அக்கறை இருப்பின் குறிப்பிட்ட விசாரணைக்கு சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றது. மேலதிக தகவல்களுக்காக 24.01.2022 ஆம் திகதியிட்ட 2264/4 இலக்கமிடப்பட்ட விசேட வர்த்த மானி iii பகுதியை பார்க்கவும்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| மாகாணம் | - | மேற்கு |
| மாவட்டம் | - | கொழும்பு |
| பிரதேச செயலாளர் பிரிவு | - | திம்பிரிகஸ்யாய |
| கிராம நிலதாரி பிரிவு | - | தெமடகொட |
| கிராமங்களின் பெயர் | - | தெமடகொட |
| ஆரம்பவரைபட இல | - | ஆ. வ. CO 9974 |
| மொத்த துண்டு இல | - | துண்டு இல 01 முதல் 03 வரை |
| நீளம் | - | 0.1413 ஹெக்டேயர் |

**பிரியந்தா திசானாயக**
**பிரதேச செயலகம்**
**திம்பிரிகஸ்யாய**

**பிரதேச செயலகம்**
**திம்பிரிகஸ்யாய**
**03.02.2022**

N-21

# பொருட் கொள்வனவு அறிவித்தல்
## அரசாங்க அச்சுத் திணைக்களம்

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் பெறுகைக்குழு தலைவர் பின்வரும் பண்டங்கள் தொடர்பில் உற்பத்தியாளர்கள், அவர்களின் பிரதிநிதிகள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து விலை மனுக்களைக் கோருகின்றார்.

**1. Bid Reference No. SCP02/ST/NCB06/INK/2022-6**

**Machine Name - Xperjet 1682 SR - Large Format Digital Printing Machine for Stickers Printing - Ink - 2022**

| | | |
|---|---|---|
| 1. | Black | 50 Kg |
| 2. | Cyan | 50 Kg |
| 3. | Magenta | 50 Kg |
| 4. | Yellow | 50 Kg |
| 5. | Orange | 30 Kg |
| 6. | Green | 30 Kg |
| 7. | Light Cyan | 20 Kg |
| 8. | Light Magenta | 20 Kg |

விலைமனு ஏற்றுக்கொள்ளும் இறுதி தினம் :- 2022.03.02ஆந் திகதி

பி.ப. 2.00 மணி வரையாகும்.

மேற்குறிப்பிட்ட விலைமனு தொடர்பில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000/- கொண்டதும் அத்துடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினத்துக்கு முந்திய தினம் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கப்பெறும் எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் அரசாங்க அச்சுத் திணைக்கள, வழங்கல் பிரிவில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலை மனு தொடர்பான ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விபரங்கள், கடமை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**கங்கானி லியனகே,**
**பெறுகைக்குழு தலைவர்,**

**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**இல. 118, டாக்டர் டனிஸ்டர் டீ சில்வா மாவத்தை, கொழும்பு-08.**
**2022.02.08**
**தொலைபேசி - 011-2694898**
**இணையதளம் - www.documents.gov.lk**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகார இராஜாங்க அமைச்சு**

**உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் - செயற்றிட்ட அடையாளம்: P 163305**

**கிழக்கு மாகாணம், திருகோணமலை**

1. இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் செலவுக்கு உலக வங்கியிடமிருந்து கடனைப் பெற்றுள்ளது, மேலும் இதன் ஒரு பகுதியை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்கு செலுத்துவதற்குப் பயன்படுத்த விரும்புகிறது.
2. கந்தளாய் பிரதேச சபையின் சார்பில் உள்ளூராட்சி அதிகாரசபையின் பெறுகைக் குழு தலைவர் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள பொருட்களை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
3. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) நடைமுறையின் ஊடாக இடம்பெறும்.
4. தகுதித் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணத்தின் IIIஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலதிக விவரங்கள் விலைமனு தரவுத் தாளில் வழங்கப்பட்டுள்ளன.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் உள்ளூராட்சி நிறுவனத்தின் தலைவர் / செயலாளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை அதே இடத்தில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் உள்ளூராட்சி நிறுவனத்திற்கு எழுத்துருவிலான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2022-02-08ஆம் திகதி முதல் 2022-02-28ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
7. 2022-03-02ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன்பதாக பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வகையில் தலைவர், உள்ளூராட்சி நிறுவன பெறுகைக் குழு, கந்தளாய் பிரதேச சபை எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
8. விலைமனுக்களைத் தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் தொடர்பாக ஏற்படும் ஏதேனும் கிரயம் அல்லது செலவுகளுக்கு கொள்வனவாளர் பொறுப்பேற்கமாட்டார்.
9. பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் விலைக்கோரல் பிணை முறியொன்று விலைமனுவுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | வேலை விபரங்கள் மற்றும் ஒப்பந்த இலக்கம் | பெறுகை நிறுவத்தின் பெயர் | விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இடம் மற்றும் தொ.பே. இலக்கம் | விலை மனு ஆவணத்தின் விலை (ரூபா) | தேவையான விலைமனுப் பிணை முறி | | விலைமனு செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | விலை மனுப் பிணை முறி தொகை (ரூபா) | செல்லுபடிக் காலம் | |
| கந்தளாய் சபை, சேருவில | திருகோணமலை, கந்தளாயிலுள்ள கந்தளாய் நகர மண்டபத்தில் சூரிய சக்தி பொறித்தொகுதியை நிறுவுதல் KAPS/LDSP/PTI/G/2022/01 | பிரதேச சபை, கந்தளாய் | பிரதேச சபை, கந்தளாய் 026-2234275 | 2,500.00 | 55,000.00 | 2022-05-31 வரை | 2022-05-03 வரை |

**தலைவர், உள்ளூராட்சி நிறுவன பெறுகைக் குழு,**
**கந்தளாய் பிரதேச சபை,**
**திருகோணமலை.**
2022-02-08.

**இலங்கை சனநாயக சோசலிச குடியரசு**
**நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

# விலை மனுக்கோரல்

01. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வழங்கல் குழு தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகார சபை சார்பாக மேல் மாகாணத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்கான தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| தொடர் இலக்கம் | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | பொறியியலாளர்களின் மதிப்பீட்டுத் தொகை (மேலதிக செலவுகளற்ற) ரூ. மில்லியன்) | ஒப்பந்த காலம் (நாட்கள்) | வேலையின் நோக்கம் |
|---|---|---|---|---|---|

02. தற்போதுள்ள கட்டமைப்புகளை அகற்றுதல், பயன்பாட்டு சேவைகளை மாற்றுதல், பாலத்தை அகலப்படுத்துதல், அடித்தளம் அமைத்தல், அடிக்கட்டுமானம், மேற்கட்டுமானம், அணுகுமுறைகளின் கட்டுமானம் மற்றும் தற்செயலான பணிகள் ஆகியவை அடங்கும்.

03. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.

04. ஒப்பந்தத்திற்கு தகுதியுடையவர்களாவதற்கு மனுதாரர்கள் கட்டுமான கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் **C1 அல்லது அதற்கு மேலான தரத்தில் பாலக்கட்டுமான துறை** நிபுணத்துவத்திற்கு அமைய பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

05. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மேலதிக விபரங்களை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள காரியாலயங்களில் பெற்றுக் கொள்ளக்கூடியதுடன், மனு ஆவணங்களை **www.rda.gov.lk** எனும் இணையத்தளத்திலிருந்து **2022.02.09** ஆம் திகதி முதல் பெற்றுக்கொள்ளலாம்.

(அ). பணிப்பாளர் (கட்டுமானம்),
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
மூன்றாம் மாடி, "மஹநெகும மஹ மெதுர"
டென்சில் கொபேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
தொலைபேசி : 011-2864388 மற்றும் பெக்ஸ் : 011-2861821

(ஆ). மாகாணப் பணிப்பாளர் (மேல் மாகாணம்),
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
முதலாம் மாடி, செத்சிரிபாய,
பத்தரமுல்லை
தொலைபேசி : 011-2876600 மற்றும் பெக்ஸ் : 011-2877226

06. மனு தொடர்பான கூட்டம் **2022.02.18** ஆம் திகதி **மு.ப.10.00** மணிக்கு மாகாணப் பணிப்பாளர் (மேல் மகாணம்) வீதி அபிவிருத்தி அதிகார சபையில் Zoom தொழிநுட்பத்தினூடாக இடம்பெறும்.

Zoom தள இணைப்பு :
https://us05web.zoom.us/j/3566250280?pwd=R3l3Um5WQmo0SnZwOFVmQmRkb3ErQT09.

| | | |
|---|---|---|
| கூட்டத்தின் ID | : | 356 625 0280 |
| இரகசிய குறியீடு | : | c28xLx |

07. ஒப்பந்தத்திற்கான எழுத்துபூர்வமான விண்ணப்பம் மற்றும் மீளச்செலுத்தப்படாத கட்டணத்தை செலுத்திய வெல்லுபடியாகும் இரசீது **(ஒப்பந்த இலக்கம் மற்றும் ஒப்பந்ததாரரின் பெயர் என்பன ரசீதில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்). மின்னஞ்சல்** மூலமாக பணிப்பாளர் (கட்டுமானம்) வீதி அபிவிருத்தி அதிகார சபையில் **2022.02.09** ஆம் திகதியிலிருந்து **2022.03.01** ஆம் திகதி வரை **09.00 மணியிலிருந்து 15.00 மணி** வரையான காலப்பகுதியினுள் அனுப்புவதன் மூலமாக ஆர்வமுள்ள மனுதாரர்களுக்கு மின்னஞ்சல் மூலமாக அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

**மின்னஞ்சல் முகவரி** : construction.rda@gmail.com.

மீளச்செலுத்தப்படாத **ரூபா.64,800/-** (வட் வரிகளுக்கு உட்பட்ட) கட்டணத்தை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கிலக்கத்திற்கு செலுத்துதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| **அ. கணக்கின் பெயர்** | : | **பணிப்பாளர் நாயகம் - RDA** |
| **ஆ. கணக்கு இலக்கம்** | : | **0000001943** |
| **இ. வங்கி** | : | **இலங்கை வங்கி - பெருநிறுவன கிளை** |

மனுக்களை சமர்ப்பிக்கும்போது அசல் / செல்லுபடியாகும் பண வைப்பு சீட்டுடன் சமர்ப்பித்து மனுக்களை பரிசிலனை செய்துக்கொள்ள முடியும். அசல் / செல்லுபடியாகும் பண வைப்பு சீட்டு இல்லாத மனுக்கள் நிராகரிக்கப்படும்.

1987 இலக்கம் 03 ஒப்பந்த சட்டத்தின் கீழ் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும் மனுதாரர்கள் மட்டும் நிறுவன பதிவாளர் திணைக்களத்தில் குறித்த மனுவுக்கு பதிவு செய்யப்படல் வேண்டும்.

08. அனைத்து மனுக்களும், **2022.08.24** ஆம் திகதி வரை செல்லுபடியாகும் காப்புறுதிப்பிணையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

09. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை இரண்டு பிரதிகளுடன் **2022.03.02** ஆம் திகதி **13.00** மணித்தியாலங்களுக்கு முன் **தலைவர், அமைச்சரவையின் வழங்கல் குழு, நெடுஞ்சாலைகள் அமைச்சு, வழங்கல் குழு, ஏழாம் மாடி, "மகநெகும மஹமெதுர" டென்சில் கொபேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை** எனும் முகவரிக்கு கொண்டு வந்து கையளிக்கப்படல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

10. மனுக்கள் **2022.07.27** ஆம் திகதி வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

தலைவர்,
அமைச்சின் கொள்முதல் குழு,
**நெடுஞ்சாலைகள் அமைச்சு,**
கொள்முதல் பிரிவு,
ஏழாம் மாடி, 'மகநெகும மஹமெதுர', டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை.

# விலைமனுக்களுக்கான அழைப்பு

# இலங்கை போக்குவரத்து சபை

## அம்பாறை டயர் தொழிற்சாலைக்கு தேவைப்படும் இயந்திராதிகளை (பயிற்சி அடங்கலாக) வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் செயற்பட வைத்தல் ஆகியவற்றிற்கான விலைமனு

**(SLTB/TS/GEN/2020/03)**

1. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் 2022.03.03 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணி வரையும் 5 மாதங்களுள் வழங்கப்பட்டுள்ள விபரக்குறிப்புக்களுக்கு ஒத்திருக்கும் வகையில் இபோச அம்பாறை டயர் தொழிற்சாலைக்கு தேவைப்படும் இயந்திராதிகளை வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் செயற்பட வைத்தல் (பயிற்சி அடங்கலானது) ஆகியவற்றிற்காக பதிவு பெற்ற வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை போக்குவரத்து சபையின் சார்பாக இபோச உயர் மட்ட பெறுகைக் குழுத் தலைவர் பெற்றுக் கொள்வார். கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபையின் பெறுகை குழுவின் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளும் படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கோரல் ஆவணங்கள் கீழே வழங்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத விலைமனு கட்டணத்தை/ கட்டணங்களை செலுத்திய பின்னர், 2022.02.08 ஆம் திகதியிலிருந்து 2022.03.02 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் வழங்கப்படும்.

| இல. | அம்சம் | மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணம் | விலைமனுப் பிணை |
|---|---|---|---|
| 01. | High Pressure Compressor | 1000.00 | 20,000.00 |
| 02-05 | Tyre Buffing Machines, Tyre Building Machines, Tyre Inspection Machines, Cement Churner | 3500.00 | 100,000.00 |
| 06 | Curing Chamber – 11 Tyre | 2500.00 | 75,000.00 |
| 07 | Monorail – 11 Tyre | 1000.00 | 20,000.00 |
| 08 | 250 Kva/400v/230v/50Hz Diesel Generator | 2500.00 | 75,000.00 |
| 09-13 | Curing Rims, Curing Envelopes, Tubes, Flaps | 2000.00 | 50,000.00 |
| 14-15 | Tyre stand & Working Table | 1000.00 | 20,000.00 |

2. விலைமனுக்கள் 2022.06.04 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
3. விலைமனுக்களை சமர்ப்பிக்கும் அம்சங்களுக்கு மேலே குறிப்பிட்டவாறு விலைமனுப்பிணையுடன்/பிணைகளுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் 2022.07.04 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருப்பதுடன் இபோச இனால் சமர்ப்பிக்கப்படும் முதலாவது எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் மாற்ற இயலாததும் நிபந்தனையின்றி ரொக்கப் பணமாக மாற்றக்கூடியதும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் பதிவு பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் அல்லது இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுடன் பதிவு பெற்ற காப்புறுதி முகவரான்மையொன்றினால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலில்லாத எந்தவொரு விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்படாத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.
4. விலைமனுதாரரொருவரினால் சமர்ப்பிக்கப்படும் அம்சங்களின் மொத்த பெறுமதியானது 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படின். பின்வருவது பிரயோகப்படுத்தப்படும்.
   (அ) எந்தவொரு விலைமனுதாரருக்கும் முகவரொருவராக அல்லது உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது பெயர் குறிப்பிட்டவராக அல்லது அவரது சார்பாக செயற்படும் எந்தவொரு நபரும் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னதாக கொழும்பு-10, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை ''சமாகம் மெதுர'' பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.
   (ஆ) 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் விலைமனுதாரர்கள் தம்மை விலைமனுக்களை சமர்ப்பித்த பின்னர் உடனடியாகவும் பெறுகையை வழங்குவதற்கு முன்னராகவும் விலைமனுக்களை விலைமனுதாரர்கள் பதிவுசெய்தல் வேண்டும். உரித்தான பெறுகை குழுவிற்கு பொது ஒப்பந்தங்களின் பிரகாரம் பதிவுச் சான்றிதழை அவ்வாறான விலைமனுதாரர் சமர்ப்பிக்காவிடின்,பெறுகையானது எந்தவொரு விலைமனுதாரருக்கும் வழங்கப்படமாட்டாது.
5. விலைமனு ஆவணங்களின் அனைத்து பக்கங்களும் விலைமனுதாரரினால் சிற்றொப்பம் வைக்கப்பட்டு அவரது இலட்சினை பதிக்கப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் இந்த அலுவலகத்தில் இந்த நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் இரு பிரதிகளில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுவை அடக்கியுள்ள முத்திரையிடப்பட்ட தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Supply, Delivery. Installation & Commissioning (including Training) of required machinery for SLTB Ampara Tyre Factory"** என குறிப்பிடப்படல் வேண்டும்.
7 விலைமனுக்கோரல் 2022.03.03 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு மூடப்பட்டு அதன் பின்னர் அவைகள் உடனடியாகவே கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபை, கேள்வி பிரிவில் திறக்கப்படும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**இபோச பெறுகைக் குழு,**
**இலங்கை போக்குவரத்து சபை,**
**200, கிருள வீதி,**
**கொழும்பு-05.**

**விசாரணைகள்:** செயலாளர், பெறுகைப் பிரிவு, இலங்கை போக்குவரத்து சபை
தொலைபேசி: 011 7706110, 0771056110. தொலைபேசி/தொலைநகல்: 011 2588457

**பின்வருவனவற்றையும் தயவு செய்து கவனிக்கவும்:**

**(i)** இபோச இன் அனைத்து பெறுகை செயற்பாடுகளின் தகவலுக்காக **https://sltb.lk** மற்றும் **https://promise.lk** என்ற இணையத்தை தயவு செய்து பார்வையிடவும்.

**(ii)** இபோச இன் வழங்குநரொருவராக பதிவு பெறுவதற்கு https://sltb.lk supplyregistration என்ற இணையத்தை தயவு செய்து பார்வையிடவும்.



# ஒருநாள் கிரிக்கெட்டில் சொந்த மண்ணில் அதி வேகமாக 5000 ஓட்டங்கள் சாதனை படைத்த கோலி

96வது இன்னிங்ஸில் 5 ஆயிரம் ஓட்டங்களை கடந்ததன் மூலம் சச்சின் சாதனையை கோலி முறியடித்துள்ளார்.

அகமதாபாத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மேற்கிந்தியதீவு அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் முன்னாள் தலைவர் கோலி 4 பந்தில் 8 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தார். இந்த நிலையில் சொந்த மண்ணில் ஒருநாள் போட்டிகளில் அதி வேகமாக 5 ஆயிரம் ஓட்டங்களை குவித்த முதல் வீரர் என்ற சாதனையை கோலி படைத்தார்.

ஒருநாள் போட்டிகளில் தனது 249வது இன்னிங்ஸை கோலி விளையாடினார். சொந்த மண்ணில் அவருக்கு இது 96வது இன்னிங்ஸ். இதில் 5000 ஓட்டங்களை கடந்ததன் மூலம் சச்சின் சாதனையை அவர் முறியடித்துள்ளார்.

சச்சின் தனது 121 இன்னிங்ஸகளிலும், ஜாக் காலிஸ் 130 இன்னிங்ஸிலும் 5 ஆயிரம் ஓட்டங்களை எடுத்திருந்தனர். அவுஸ்திரேலியாவின் முன்னாள் தலைவர் ரிக்கி பொண்டிங் 138 இன்னிங்ஸ்களில் இந்த மைல் கல்லை எட்டினார்.

இதுவரை 100 இன்னிங்ஸ்களுக்குள் இந்த சாதனை படைத்த ஒரே துடுப்பாட்ட வீரர் கோஹ்லிதான். அதே நேரத்தில் சொந்த மண்ணில் அதிக ஓட்டங்கள் எடுத்த துடுப்பாட்டவீரர்கள் பட்டியலில் கோலி 4வது இடத்தில் உள்ளார்.

ஒருநாள் போட்டிகளில் டெண்டுல்கர் சொந்த மண்ணில் 6976 ஓட்டங்கள் எடுத்துள்ளார். அவுஸ்திரேலியாவில் பொண்டிங் 5,521 ஓட்டங்கள் எடுத்தார். தென்ஆபிரிக்க மண்ணில் கலிஸ் 5186 ஓட்டங்கள் குவித்தார். இந்திய மண்ணில் கோஹ்லி இதுவரை 5002 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

# முன்னாள் உலக கிரிக்கெட் நட்சத்திரங்களுக்கான முதல் கிரிக்கெட் சுற்றுப்போட்டி

## ஓமானுக்கான இலங்கைத் தூதுவர் அமீர் அஜ்வத் கௌரவ அதிதி



முன்னாள் உலக கிரிக்கெட் நட்சத்திரங்களுக்காக முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டுள்ள Legends League Cricket (LLC) ரி 20 முதல் சுற்றுப் போட்டியில் ஓமானுக்கான இலங்கைத் தூதுவர் அமீர் அஜ்வத் கௌரவ அதிதியாக கலந்து கொண்டு இச்சுற்றின் இறுதிப் போட்டியில் ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்ட நியூசிலாந்தின் முன்னாள் பல்துறை ஆட்டக்காரர் கோரி அன்டர்சனுக்கு LLC ன் முதல் விருதினை வழங்கி வைத்தார்.

LLC ன் ஆரம்ப சுற்று ஓமானின் தலைநகரம் மஸ்கட்டில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இலங்கை மற்றும் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, மேற்கிந்தியதீவு, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளின் முன்னாள் நட்சத்திர கிரிக்கெட் வீரர்கள் இதில் பங்குகொள்கின்றனர்.

இலங்கை முன்னாள் கிரிக்கெட் நட்சத்திரங்களான சனத் ஜயசூரிய, முத்தையா முரளிதரன், திலகரட்ன டில்சான், சமிந்த வாஸ், ரொமேஸ் களுவிதாரண, உபுல் தரங்க, அஜந்த மெண்டிஸ் போன்றோர் விளையாடினர். முன்னாள் இலங்கை அணியின் தலைவர் அர்ஜுன ரணதுங்க ஆசிய அணிக்கான பயிற்றுவிப்பாளராக கடமையாற்றினார்.

## சுதந்திரக் கிண்ண மாகாண கால்பந்து தொடர்

# போட்டித்தடை பெற்றுள்ள மத்திய, ஊவா மாகாண கால்பந்து வீரர்கள்

**திருகோணமலை குறூப் நிருபர்**



சுதந்திரக் கிண்ண மாகாண கால்பந்து தொடரில் மத்திய மற்றும் ஊவா அணிகள் இடையில் கடந்த புதன்கிழமை (02) நடைபெற்ற போட்டியில் ஏற்பட்ட மோதல்களுக்கு காரணமாக அமைந்தவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைள் குறித்தான ஊடக அறிக்கையினை இலங்கை கால்பந்து சம்மேளனம் வெளியிட்டிருக்கின்றது.

ஊவா மற்றும் மத்திய மாகாண அணிகள் இடையிலான போட்டி கந்தளாய் லீலாரத்ன விளையாட்டரங்கில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இப்போட்டியில் ஊவா மாகாண வீரர் பிராஸ் ஸஹீர் போட்டியின் முதல் கோலினைப் பெற்ற பின்னர், எதிரணி வீரரினை முறையற்ற விதத்தில் தாக்கியதன் காரணமாக மைதானத்தில் மோதல் ஒன்று வெடித்திருந்தது. இதன் காரணமாக போட்டியும் சுமார் 30 நிமிடங்கள் வரை இடைநடுவில் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்த மோதல் சம்பவத்திற்கு காரணமாக அமைந்தவர்களுக்கு எதிராகவே இலங்கை கால்பந்து சம்மேளனம் தமக்கு கிடைத்த அறிக்கைகள் மற்றும் காணொளி ஆதாரங்களின் அடிப்படையில், ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றது.

அதன்படி ஊவா மாகாணத்தினைச் சேர்ந்த ஆறு வீரர்களுக்கு சுதந்திரக் கிண்ணத் தொடரில் அடுத்த இரண்டு போட்டிகளில் விளையாடுவதற்கு தடை வழங்கப்பட்டிருக்கின்றது. இந்த தடையினைப் பெறும் வீரர்களாக ஊவா மாகாண அணியின் பிராஸ் ஸஹீர், எம்ஏம். அப்ரான், கவிந்து ரவி ஹான்ச, எரந்த நந்தன, எச்எம்கே. சேத்தன மற்றும் இஷாந்த டில்சான் ஆகியோர் அமைகின்றனர். இந்த வீரர்கள் அனைவரும் போட்டியில் முறையற்ற நடத்தையினை வெளிப்படுத்தியமைக்காக, ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உள்ளாகுகின்றனர்.

அத்தோடு இந்த வீரர்களுக்கு எச்சரிக்கையும் விடுத்துள்ள இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் ஒழுக்காற்றுக் குழு அந்த எச்சரிக்கையில் சம்பந்தப்பட்ட வீரர்களுக்கு அடுத்த ஒரு வருடத்தினை அவகாச காலமாக வழங்கி, இந்த காலப்பகுதிக்குள் மீண்டும் தவறான நடத்தையினை வெளிப்படுத்தும் பட்சத்தில் ஒரு வருடப் போட்டித்தடையினை வழங்கும் எனக் கூறியிருக்கின்ற

மறுமுனையில் மோதல்களுக்கு காரணமாக அமைந்த மத்திய மாகாண அணியின் கால்பந்துவீரர்களுக்கும், போட்டித்தடை கொடுக்கப்பட்டிருக்கின்றது. அந்தவகையில் மத்திய மாகாண அணியின் வீரர்களான டபிள்யு பி ஜி ஐ . தேசப்பிரிய, எஸ்கே. உமைர் மற்றும் எம்எச்எச். மொஹமட் ஆகிய மூன்று வீரர்கள், சுதந்திர கிண்ண மாகாணத் தொடரில் அடுத்த இரண்டு போட்டிகளில் ஆடுவதற்கு தடையினைப் பெற்றிருக்கின்றனர். அதோடு இந்த வீரர்களுக்கும் எச்சரிக்கை வழங்கப்பட்டிருப்பதோடு, இந்த வீரர்களுக்கும் ஒரு வருடகாலம் அவகாச காலமாக வழங்கப்பட்டு, இந்த அவகாச காலத்திற்குள் தவறான நடத்தையினை வெளிப்படுத்தும் பட்சத்தில் இவர்களுக்கும் ஒரு வருட போட்டித் தடை வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அதேநேரம் மத்திய மாகாண அணியினைச் சேர்ந்த மற்றுமொரு வீரரான ஜனித் ரத்னாயக்க இன்னொருவீரரினைதாக்குவதில்பிரதான சூத்திரதாரியாக இனங்காணப்பட்டு, அவருக்கு மறு அறிவித்தல் வரும் வரையில் கால்பந்து சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபட தடை வழங்கப்பட்டிருக்கின்றது. அத்துடன் ஜனித் ரத்னாயக்கவிற்கு எதிராக இலங்கை கால்பந்து சம்மேளத்தினால் மேலதிக ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்படும் என சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

ஊவா மற்றும் மத்திய மாகாண அணிகளின் தலைமைப் பயிற்சியாளர்கள் தங்களது அணி வீரர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கைகள் குறித்து அவதானமாக இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், இந்த வீரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தடைக்காலம் நிறைவடையும் வரையில் அவர்களை அணிக்குழாத்தினுள் இருந்து நீக்கி வைப்பதற்கும் பணிக்கப்பட்டிருக்கின்றது.

# சுதந்திர கிண்ண கால்பந்து லீக் தொடர் வடக்கு, கிழக்கு அணிகளுக்கு வெற்றி

**திருகோணமலை குறூப் நிருபர்**



பதுளை வின்சன் டயஸ் விளையாட்டரங்கில் ஞாயிற்றுக்கிழமை (06) இடம்பெற்ற மாகாண அணிகளுக்கு இடையிலான சுதந்திர கிண்ண கால்பந்து லீக் தொடரின் போட்டிகளில் கிழக்கு மற்றும் வடக்கு மாகாண அணிகள் வெற்றிகளைப் பதிவு செய்தன.

இறுதியாக, தொடரின் மூன்றாவது கட்டப் போட்டிகள் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மற்றும் கந்தலாய் ஆகிய இடங்களில் இடம்பெற்ற நிலையில் நான்காம் கட்டத்திற்கான முதல் இரண்டு போட்டிகளும் வின்சன் டயஸ் விளையாட்டரங்கில் இடம்பெற்றன.

சுதந்திர கிண்ண இரண்டாம் நாள் போட்டிகள் அனைத்தும் சமநிலையானது ஞாயிற்றுக்கிழமை முதல் ஆட்டமாக மாலை இடம்பெற்ற இந்த மோதலின் முதல் பாதி கோல்கள் எதுவும் அற்ற பாதி ஆட்டமாக நிறைவடைந்தது. பின்னர் ஆரம்பமான இரண்டாம் பாதியின் 69ஆவது நிமிடத்தில் எதிரணியின் கோல் எல்லைக்கு வெளியில் இருந்து தயன்சன் வழங்கிய பந்தை மரியதாஸ் நிதர்சன் ஹெடர் செய்து வட மாகாண அணிக்கான முதல் கோலைப் பெற்றுக் கொடுத்தார்.

போட்டி நிறைவு வரையில் மேலதிக கோல்கள் எதுவும் பெறப்படாமையினால் வட மாகாணம் 10 என வெற்றி பெற்று, தொடரில் தமது மூன்றாவது வெற்றியைப் பதிவு செய்துள்ளது. தொடரில் 4 கோல்களைப் பெற்றுள்ள நிதர்சன் இதுவரையில் அதிக கோல்களைப் பெற்ற வீரர்கள் வரிசையில் முதல் இடத்தில் உள்ளார்.

ஞாயிற்றுக் கிழமை இரவு இடம்பெற்ற இந்தப் போட்டியின் முதல் 20 நிமிடங்களுக்குள் கிழக்கு மாகாண வீரர் லினஸ் கான் சிறந்த முறையில் போட்டியின் முதல் கோலைப் பெற்றுக் கொடுத்தார். அதன் பின்னர் போட்டி நிறைவு பெறும்வரையில் மேலதிக கோல்கள் பெறப்படாமையினால் 1–0 என கிழக்கு மாகாணம் வெற்றி பெற்றது. இது கிழக்கு மாகாண அணி தொடரில் பதிவு செய்த முதல் வெற்றியாகும்.

# மகளிர் கால்பந்தாட்ட அணியை உருவாக்க தேர்வு முகாம்

**(வடகொழும்பு தினகரன் நிருபர் )**

இலங்கையில் மகளிர் கால்பந்தாட்ட விளையாட்டை ஊக்குவிக்கும் வகையில் எமது கொழும்பு கால்பந்தாட்ட கழகத்திற்கான மகளிர் கால்பந்தாட்ட அணியை உருவாக்குவதற்காக இடம்பெற்ற தேர்வு முகாமில் இருபத்தைந்து வீராங்கனைகள் இணைந்துக் கொண்டனர்.இவர்களுக்கான பயிற்சியை எமது கழகம் வழங்கி அதன் மூலம் எமது கழகத்தின் மகளிர் அணி உருவாகுமென கொழும்பு கால்பந்தாட்ட அணியின் பொது முகாமையாளர் ஆபித் அஹ்ரம் தெரிவித்தார்.

கொழும்பு கியூ வீதி சிட்டி லீக் கால்பந்தாட்ட மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற கொழும்பு கால்பந்தாட்ட கழகம் மேற்கொண்ட இக்கழகத்திற்கானமகளிர் கால்பந்தாட்ட அணி தெரிவிற்கான முகாம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே பொது முகாமையாளர் ஆபித் அஹ்ரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# Ride My Wave நிகழ்வை சிறப்பாக நிறைவு செய்த Red Bull




*Red Bull* ஆனது, *Red Bull Ride My Wave* நிகழ்வின் 6ஆவது பதிப்பை அண்மையில் நிறைவு செய்தது. இதில் உலகம் முழுவதிலுமிருந்து துறைசார்ந்த மற்றும் ஆர்வமுள்ள பெருமளவிலான நீர்ச்சறுக்கல் பங்கேற்பாளர்கள் பங்கெடுத்திருந்தனர். இலங்கையை நீர்ச்சறுக்கலுக்கான (*surfing*) மையமாக நிலைநிறுத்துவதும், இந்த சுவாரஸ்யமான விளையாட்டுக்கு ஒரு தளமொன்றை உருவாக்குவதுமே இந் நிகழ்வின் நோக்கமாகும். *Red Bull Ride My Wave* நிகழ்வானது, கடந்த ஜனவரி 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் நாட்டின் தென் மாகாணத்தில் அமைந்துள்ள ஹிக்கடுவையின் அழகிய கடற்கரையின் பிரதான நீர்ச்சறுக்கு மையத்தில் நடைபெற்றது'

இந்நிகழ்வின் முக்கிய நோக்கம் உள்ளூர் திறமையாளர்களை உலக அரங்கிற்குச் செல்ல ஊக்குவிப்பதற்கான வாய்ப்புகளை வழங்குவதாகும். *Ride My Wave* நிகழ்வில் 130 இற்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் பங்கேற்றதுடன், *King/Queen of the Wave* (அலையின் ராஜா, அலையின் ராணி) எனும் பிரபலமான பட்டங்களுக்காக அவர்கள் போட்டியிட்டனர்'

இவ்வாண்டு *Red Bull Ride My Wave* ஆனது, 81 உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஆண் பங்கேற்பாளர்களுடன் ஆண்கள் பட்டத்திற்காக 96 சுற்றுகள் இடம்பெற்றது. ஆண்களுக்கான தகுதிச் சுற்று 2 ஆனது, 12 சுற்றுகளைக் கொண்டிருந்ததுடன் அதில் 45 பேர் பங்கேற்றிருந்தனர். 3ஆவது பிரதான சுற்று 18 பங்கேற்பாளர்களுடன் 6 சுற்றுகளைக் கொண்டிருந்ததுடன், அதிலிருந்து 12 பங்கேற்பாளர்கள் காலிறுதிக்கு தகுதி பெற்றனர். 6 நீர்ச்சறுக்கல் பங்கேற்பாளர்கள் அரையிறுதியில் பங்கேற்றதுடன் அதிலிருந்து 4 பேர் இறுதிச் சுற்றுக்கு தெரிவானதுடன், *“King of the Wave”* (அலையின் ராஜா) எனும் பட்டத்திற்காக அவர்கள் போட்டியிட்டனர்'

பெண்களுக்கான முதல் தகுதிச் சுற்றில் 23 பேர் கலந்து கொண்டதுடன் அது 8 சுற்றுகளைக் கொண்டிருந்தது. அதன் காலிறுதிப் போட்டிகள் 4 சுற்றுகளுடன் 16 பங்கேற்பாளர்களுடன் இடம்பெற்றிருந்தது. அதன் அரையிறுதியில் 8 பேர் கலந்துகொண்டதோடு, 4 பேர் *Queen of the Wave* (அலையின் ராணி) பட்டத்திற்காக போட்டியிட்டனர்'

*Red Bull Ride My Wave* போட்டியின் பணிப்பாளர் சந்திக துஷார இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், *“Red Bull Ride My Wave* போட்டியின் பெண்களுக்கான நீர்ச்சறுக்கல் பிரிவில் 30 இற்கும் மேற்பட்ட பெண்கள் போட்டியிட்டிருந்தமை நம்பமுடியாததாக இருந்ததோடு, இதில் இலங்கைப் பெண் நீர்ச் சறுக்கல் வீராங்கனைகளை காணக்கிடைத்தமையும் குறிப்பிடத்தக்கது. இலங்கை நீர்ச்சறுக்கல் சமூகத்தினரை ஆதரிப்பதுடன், அவர்கள் விளையாட்டின் உண்மையான உணர்வில் போட்டியிடுவதற்காக உதவுவதில் நாம் பெருமை கொள்கிறோம். எதிர்காலத்தில், மேலும் பல உள்ளூர் பெண்களை கடலில் காண விரும்புகிறோம், அவர்கள் அலைகளை எதிர்கொள்ளச் செய்ய நாம் தயாராக இருக்கிறோம்.” என்றார்'

இவ்வாண்டு நிகழ்வில் ஒஸ்ட்ரியா, அவுஸ்திரேலியா, பெல்ஜியம், ஜேர்மனி, எஸ்தோனியா, பிரான்ஸ், இங்கிலாந்து, இஸ்ரேல், நெதர்லாந்து, ரஷ்யா, ஸ்வீடன், அமெரிக்கா, தென்னாபிரிக்கா உள்ளிட்ட 25 இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த நீர்ச்சறுக்கல் பங்கேற்பாளர்கள் பங்கேற்றிருந்தனர்'

இதன்போது வெற்றிபெற்றவர்களுக்கு கிண்ணங்கள் மற்றும் பணப் பரிசுகள் வழங்கப்பட்டு நிகழ்ச்சி இனிதே நிறைவடைந்தது. ஆடவர் திறந்த பிரிவு: 10.6 புள்ளிகளுடன் *Steeve Seilly* 3ஆவது இடத்தையும், சச்சின் தாரக 12.4 புள்ளிகள் பெற்று இரண்டாவது இடத்தையும், 13.8 புள்ளிகள் பெற்ற லக்சித ‘லக்கி’ மதுஷான் 'அலையின் ராஜா' பட்டத்தையும் தட்டிச் சென்றனர். மாலைதீவு அணியின் முகாமையாளர் *Nahu*, *Red Bull Ride My Wave* பிரதான நடுவர் லஹிரு விதானகே மற்றும் போட்டியின் பணிப்பாளர் சந்திக துஷார ஆகியோரால் வெற்றியாளர்களுக்கு விருதுகள் பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டன'

மகளிர் திறந்த பிரிவு: 4.9 புள்ளிகளைப் பெற்ற *Laesson* 3ஆவது இடத்தைப் பெற்றதுடன், *Cameroon Heinamann* 5.6 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தைப் பெற்றார். அபாரமாக விளையாடி 11.5 புள்ளிகளைப் பெற்ற *Nikita Rob* தொடர்ச்சியாக மூன்றாவது வருடமாக அலையின் ராணி பட்டத்தை வென்றார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 பெப்ரவரி மாதம் 8ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.